தனிப்பாடல் திரட்டு — தொகுதி 6—1—6

Reg No. M. 3066. 1937-ஆம் பதிப்பு 1.

(PAHUTHARIVU) (REASON)

பகுத்தறிவு.



பகுத்தறிவு.

பல அறிஞர்களின் அறிவியல் ஆராய்ச்சிகள், விஞ்ஞான விளக்கம், பெண்கள் முன்னேற்றம், உடற் பயிற்சி, சுகாதாரம், வைத்தியம், பாட்டுகள், நாடகங்கள், ஹாஸ்யங்கள், உலக விநோதங்கள், சிறுகதைகளும் நிறைந்து விளங்குவது

வருட சந்தா

உள் நாடு ரூ. 1—0—0.	வெளிநாடு ரூ. 1—8—0.
தனிப்பிரதி 0—1—6.	தனிப்பிரதி 0—2—6.

சந்தாதாரர்களுக்கு

"பகுத்தறிவு"க்கு எந்த மாதத்தில் சந்தாதாரர்களாகச் சேர்ந்தாலும் வருட ஆரம்பமாகிய மே மாதம் முதலிலிருந்து பத்திரிகைகள் அனுப்பப்படும். கொஞ்சம் பிரதிகளே கைவசமிருப்பதால் எல்லோரும் முந்திக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

"பகுத்தறிவு" சந்தாதாரர்களுக்கு முதல் வருடப்பண்டு வால்பம் (12 பிரதிகள் சேர்ந்தது) ஒரு ரூபாய்க்குக் கொடுக்கப்படும். தபால் சார்ஜ்வேறு. சொற்பக் காப்பிகளே இருப்பதால் உடனே ஆர்டர் கொடுங்கள்.

புதிதாகச் சந்தா சேருபவர்கள் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிடவேண்டும்.

சந்தாதாரர் பத்திரிகை சம்பந்தமாய்க் கடிதம் எழுதும் போது சந்தா நம்பரைக் குறிப்பிட வேண்டும்.

விஷய அட்டவணை பக்கம்.

சுயமரியாதை நற்போதனை (பாட்டு) பாரதிதாஸன்	1
பகுத்தறிவும் சுதந்தரமும் (பாரிஸ்டர் எம். சி. காக்லா பி ஏ)	3
மூட நம்பிக்கை (எம் சிங்காரவேலு)	9
சத்துள்ள உணவைப்பற்றிய குறிப்புகள்	16
கட்டு நீங்கிய காதலர்கள் (தாழூர் அ பொன்னம்பலம்)	20
கடவுளும் மதமும் (ஈ வெ. ரா.)	28
பாரதி ஆராய்ச்சி	39
சீர்திருத்தமும், மதமும் (கைவல்பம்)	44
நாத்திகமும், ஆத்திகமும் (சாமவேதனார்)	49
புராணங்கள் (சத்திய ஸ்ரீகர் எழுதுவது)	57
தமிழர் சமணமும் (ஆழியன் எழுதுகின்றார்)	62

பகுத்தறிவு.

அறிவை வளர்க்கும் ஓர் மாத வெளியீடு.

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என் உடையரேனும் இலர். (குறள்.)

மலர் 3. } ஈரோடு 1937. நவம்பர் 1. { இதழ் 7.

சுயமரியாதை நற்போதனை.

(பாரதிதாஸன்.)

(ஆனந்தக்களிப்பு)

பல்லவி.

சுயமரி யாதைகொள் தோழா!—நீ
துயர்கெடுப்பாய் வாழ்வில் உயர்வடைவாயே! (சுய)

சரணங்கள்.

உயர்வென்று பார்ப்பனன் சொன்னால்,—நீ
உலகினில் மக்கள் எலாம்சமம் என்பாய்!
துயருறத் தாழ்ந்தவர் உள்ளார்—என்று
சொல்லிடுந் தீயரைத் தூவென் றுமிழ்வாய்!
அயலொருகூட்டத்தர் ஆள்வோர்—சிலர்
ஆட்பட்டிருப்பவர் என்றுசொல்வோரைப்
பயமின்றி நீதிருந் தச்சொல்!—சிலர்
பழமைசொன் னால்புது நிலைநலம் காட்டு! (சுய)

சேசு முகம்மது என்றும்!—மற்றும்
சிவனென்றும் அரியென்றும் சித்தார்த்தனென்றும்
பேசி வளர்க்கின்ற போரில்—உன்
பெயரையும் கூட்டுவர் நீ ஒப்ப வேண்டாம்!

பகுத்தறிவு

காசைப் பிடுங்கிடு தற்கே—பலர்
கடவுளென் பார்! இரு காதையும் மூடு!
கூசி நடுங்கிடு தம்பி!—கெட்ட
கோயிலென்றால் ஒரு காதத்திலோடு (சுய)

கோயில் திருப்பணி என்பர்—அந்தக்
கோயில் விழாவென்று சொல்லியுன் வீட்டு
வாயிலில் வந்துனைக் காசு—கேட்கும்
வஞ்சக மூடரை மனிதர் என்னாதே!
வாயைத் திறக்கவும் சக்தி—இன்றி
வயிற்றைப் பிசைந்திடும் ஏழைகட்கே நீ
தாயென்ற பாவனை யோடும்—உன்
சுதையையும் ஈந்திட ஒப்புதல் வேண்டும் (சுய)

கடவுள் துவக்கிக் கொடுத்த—பல
கவிதைகள், பதிகங்கள் செப்பிய பேர்கள்,
கடவுள் புகிக்கவ தாரம்,—அந்தக்
கடவுளின் தொண்டர்கள், லோக குருக்கள்,
கடவுள் நிகர் தம்பிரான்கள்—ஜீயர்,
கழுகொத்த பூசுரர், பரமாத்து மாக்கள்
கடவுள் அனுப்பிய தூதர்—எந்தக்
கழுசடையாலும் சுகங்கண்ட துண்டா? (சுய)

அழுமை தவிர்ந்ததும் உண்டோ?—அன்றி
ஆதிமுதல் இந்தத் தேதிவரைக்கும்,
மிடிமை தவிர்ந்ததும் உண்டோ?—அன்றி
மேல்நிலை என்பதைக் கண்டதும் உண்டோ?
குடிக்கவும் நீரற் றிருக்கும்—ஏழைக்
கூட்டத்தை எண்ணாமல், கொடுந்தடி யர்க்கு
மடங்கட்டி வைத்தது னாலே—தம்பி!
வசம்கெட்டுப் போனது நமது நன்னாடு (சுய)

உழைக்காத வஞ்சகர் தம்மை—மிக
உயர்வான சாதுக்கள் என்பது நன்றோ?
விழித்திருக் கும்போதி லேயே—நாட்டில்
விளையாடும் திருடரை ஐயரென்கின்றார்!
அழியாத மூடத்தனத்தை—ஏட்டில்
அழகாய் வரைந்திடும் பழிகாரர் தம்மை
முழுதாய்ந்த பாவலர் என்பார்—இவர்
முதலெழுத் தோதினும் மதியிருட் டாகும் (சுய)

பகுத்தறிவும் சுதந்தரமும்.

(பாரிஸ்டர் எம். சி. காக்லா B. A.)

பம்பாய் பகுத்தறிவு சங்கத்தாரால் ஜூலை மாதம் கடைசி வாரத்தில் நடத்தப்பட்ட விருந்தின்போது டாக்டர் சி. எல். டி. அவாயின் தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர் எம். சி. காக்லா பேசியதாவது:—

தலைவர் அவர்களே! தோழர்களே!!

இன்று உங்கள் கடுவிலே இருக்க எனக்கு சந்தர்ப்ப மளித்த உங்களுக்கு எனது வந்தனத்தைத் தெரிவிக்கிறேன். உங்களிடையே "பகுத்தறிவும் பிரஜா உரிமையும்" என்ப தைக்குறித்துப் பேச எனக்கு கட்டளையிட்டிருக்கிறீர்கள். அதைக்குறித்துப்பேச வேண்டுமென்ற அவா எனக்கில்லை. உங்கள் காரியதரிசிதான் அதைக்குறித்துப்பேச விரும்பினார். ஆதலால் அக்கட்டளையின் மீதே பேச முன் வந்துள்ளேன்.

பேசவேண்டிய விஷயத்தை இரண்டு பிரிவாக பிரித்துக் கொள்ளுங்கள். அதாவது ஒன்று பகுத்றிவு, மற்றொன்று பிரஜா உரிமை, பின்னால் இரண்டுக்குமுள்ள ஒற்றுமை என் பதை கவனிப்போம்.

பகுத்தறிவு.

இப்பொழுது பகுத்தறிவு என்றால் என்ன? என்பதைப் பார்ப்போம். மற்றவர்கள் இதற்கு என்ன பொருள் கருது கிறார்களோ தெரியவில்லை. என்னைப்பொறுத்த மட்டில் பகுத்தறிவு என்றால் வாழ்க்கையிலே செய்கிற எல்லாக் காரி யத்திலும் அறிவையே பிரதானமாக கருதுவது என்றுதான் கான் நினைக்கிறேன். அறிவே பிரதானமென்று கூறினதால் மற்றவைகளைக்குறித்து கவனிக்க வேண்டியதில்லை- என் பதல்ல அதன் கருத்து. எனெனில் மனிதன் வெறும் ரொட் டியால் மட்டும் உயிர்வாழ முடியாது. அதுபோலவே பகுத் தறிவினால் மட்டும் எல்லாக் காரியங்களையும் ஆற்றிவிட

முடியாது. வாழ்க்கையிலே பகுத்தறிவோடுகூட விசுவாசமும் மன வெழுச்சியும், மனோபாவமும் இருக்க வேண்டும். இவைகள் எல்லாம் பகுத்தறிவுக்குக் கட்டுப்பட்டே இருக்க வேண்டுமேயொழிய அவைகளே சர்வாதிக்கமும் செலுத்த விட்டு விடக்கூடாது. பகுத்தறிவோடு மட்டும் வாழ்க்கை நடத்தப்பட வேண்டுமென்று கருதினால் வாழ்க்கை ஒரு டம்பமான, மலிவான வாழ்வாகவே முடிந்துவிடும்.

மனவெழுச்சியோடும் மனோவேகத்தோடும் செய்கிற காரியங்களைப்போல, பகுத்தறிவினால் மட்டும் செய்யப்படுகிற காரியம் அவ்வளவு நல்ல பலனை அளிப்பதில்லை.

நமது நாட்டிலே பகுத்தறிவு மக்களிடத்திலே மிகக் குறைவாக இருக்கிறது என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆதலால் இதை எவ்வளவு தூரம் வற்புறுத்திக் கூற வேண்டும் என்பதையும் நான் ஒப்புக்கொள்ளுகிறேன். நமது பொது வாழ்க்கைகூட பகுத்தறிவு இல்லாமல் ஏதோ ஒரு எண்ணத்தினாலே நடத்தப்பட்டு வருகிறது. சமீபத்தில் நமது நாட்டில் நடந்த எத்தனையோ ஒப்பந்தங்கள் பகுத்தறிவை சிறிதுகூட உபயோகப்படுத்தாமல் முடிவு செய்யப்பட்டிருக்கின்றன. அவைகள் முக்கியமானவையல்ல வென்று சொல்லிவிட முடியாது.

புனா ஒப்பந்தம்.

உதாரணத்திற்கு வேண்டுமானால் புனா ஒப்பந்தத்தை எடுத்துக்கொள்ளுங்கள். தோழர் காந்தியாரிடம் என்னைவிட ஒருவருக்கும் மதிப்பிராது. அந்த அற்புதமான மனிதர் உலகில் உள்ள பெரிய மனிதர்களில் ஒருவர் என்பதையும் அறிவோம். ஆனால் பகுத்தறிவுவாதிகளாகிய நாங்கள் இவரையும் கண்டிக்கவேண்டிய சமயங்களில் ஒரு பொழுதும் தவறுவதேயில்லை. அரசியல் காரியங்களிலே மிக முக்கியமான அம்சத்தை பெற்று விளங்கக்கூடிய ஒரு ஒப்பந்தத்தை உண்ணாவிரதமிருந்து நிறைவேற்றுவதென்றால் பகுத்தறிவுக்கு பொருத்தமானதா என்று கேட்கின்றேன். எப்பொழுது முறை தவறோ அதன் பலாபலனும் தவறாகத் தானே இருக்க முடியும்? இவ்வொப்பந்தம் ஏற்படாமல் கேரிட்டிருக்கும் பலனைவிட இவ்வொப்பந்தத்தால் ஏற்பட்ட பலன் மிக மோசமானதென்றே கூறவேண்டியிருக்கிறது. இவ்வொப்பந்தத்தின் ஒவ்வொரு பிரிவினாலும் வந்த பலனை

எடுத்துக்காட்ட நான் இப்பொழுது பிரியப்படவில்லை; ஆனால் இந்த ஒப்பந்தத்தால் வங்காள ஹிந்துக்களுக்கு வழங்கப்பட்ட அநீதியை நான் இங்கு எடுத்துக்காட்ட வேண்டியதில்லை யென்று மட்டும் சொல்லிக்கொள்ளுகிறேன்.

அடுத்தாற்போல் நமது சமூக வாழ்க்கையை கவனித்துப்பாருங்கள். ஜாதியும், பர்தா முறையும் நமது சமூகத்திலே இன்று இருந்து வருவதற்குக் காரணம் மக்கள் அவைகளைப்பற்றி யோசிக்க மறுப்பதேயாகும்.

பிரஜா உரிமை.

அடுத்தாற்போல், பிரஜா உரிமை என்றால் என்ன?

பிரஜா உரிமை என்றால், பேசும் உரிமை, பிரசுரிக்கும் உரிமை, சங்கம் அமைக்கும் உரிமைகளாகும். இவைகளுக்கு எல்லாம் தந்தையான-பிறப்பிட மானஎண்ணத்திற்கு-நினைப்பதற்கு சுதந்தாம் வேண்டு மென்று கூறவில்லை. ஏனெனில் மனிதன் நினைப்பதை எந்தசர்க்காரும் தடைசெய்யமுடியாது-கட்டுப்படுத்த முடியாதென்றே நினைக்கின்றேன். சுதந்தரத்திற்கு பங்கம் எப்பொழுது வருகிறதென்றால் ஒருவன் நினைத்ததை வெளிப்படுத்திப் பேசவோ, பிரசுரிக்கவோ, அல்லது சிலரை, தனது எண்ணத்தின் பலாபலனைக்காண உதவிக்கழைக்கும் போதோ தான் தடைகள் குறுக்கிடுகின்றன.

இன்று சுதந்தரத்துக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிற தடைகள் எல்லாம் அந்நாளில் தமது மூதாதைகளுக்கு ஏற்பட்டிருந்தால் உலகம் இன்று எவ்வாறு இந்த நவநாகரிகத்தோடு விளங்கமுடியும் என்பதை உலக சரித்திரமறிந்த எவரும் அறியாமலிருக்க முடியாது. ஏனெனில், விஞ்ஞானிகள் தாங்கள் கண்ட ஆராய்ச்சியின் உண்மைகளை வெளியிட சுதந்தாமளிக்காதிருந்தால் இன்று உலகம் காட்டுமிராண்டி தனத்தைவிட எந்தவகையிலும் உயர்ந்திராது என்பதை எவராவது மறுக்கமுடியுமா என்று கேட்கின்றேன். பூரண சுதந்தரம் மக்களுக்கிருந்ததால் தான் ஒரு தலைமுறையிலிருந்த மக்களது எண்ணங்களை அடுத்த தலைமுறையிலுள்ள மக்களறிய முடிந்தது. இதுவிஞ்ஞான அறிவுக்குமட்டுமல்ல, கலைக்கும், கல்விக்கும், சித்திரத்திற்கும், சங்கீதத்திற்கும் சிற்ப வேலைக்கும் வேண்டியதாகும்.

ஆகவே பிரஜா உரிமை-சுதந்தரம் ஒவ்வொருவனுடைய பிறப்புரிமையாகும். மனித சமூகம் முன்னேற—நிலைத்

திருக்க மிகவும் அவசியமானதும் முக்கியமானதும் சுதந்தரமே யாகும்.

இன்று உலகிலே பிரஜா உரிமை என்பது மிக முக்கியமான பிரச்சினையாக விளங்குகிறது. ஏனெனில் சர்வாதிகாரத்துவத்திற்கும் ஜனநாயகத்துவத்திற்கும் போராட்டம் நடந்து வருகிறது. சிலர் சர்க்கார் மக்களுக்காக இருக்கிறதென்றும் தங்களைத்தாமே ஆண்டுகொள்ள விரும்பிய ஒரு முறையாகும் என்றும் சிலர் சர்க்காருக்காக மக்களிருக்கிறார்கள் என்றும் சர்க்கார்மக்களுக்குப்புறம்பானது என்றும் தனிப்பட்டது என்றும்கருதிவருகிறார்கள். ஜனநாயகத்துவத்திலே விளங்கக்கூடிய அரசாங்கத்தின்மக்களுக்குஎவ்வளவுக்கு எவ்வளவு சுதந்தர மிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அந்த அரசாங்கத்தின் சக்தி உயரும்—பெருகும். இதற்கு மாறான அரசாங்கத்திலே ஜனங்களின் உரிமை கட்டுப்படுத்தப்பட்டு வரையறுக்கப் பட்டிருக்குமென்பதோடு அரசாங்கத்தின் பெருமைக்காகவே மக்களின் சுதந்தரம் உபயோகப்படுத்தப்படும். அரசாங்கம் ஒருவருடைய ஆணையினாலே நடத்தப்படும். அபிப்பிராய பேதமிருந்தால் சர்க்கார் பொறுக்காது. அவைகள் அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு விடும். இதற்கு சான்று வேண்டுமானால் இத்தாலி, ஜர்மனியை எடுத்துக்கொள்ளுங்கள். அங்கு பிரஜா உரிமை அளிக்கப்பட்டிருக்கும் அளவை எடுத்துப்பாருங்கள். அவைகளைப்பற்றி நான் எடுத்துக்கூற வேண்டியதில்லை.

நமது நாட்டில் ஜனநாயக தத்துவ ஆட்சியோ, சர்வாதிகார ஆட்சியோ கிடையாது. நமது நாட்டில் விளங்கக்கூடிய ஆட்சி (Bureaucracy) அதிகாரவர்க்க ஆட்சியாகும். இந்த ஆட்சியும் ஏறக்குறைய சர்வாதிகார ஆட்சியைப்போல அரசியலில் பொதுவாக மக்களின் சுதந்தரத்தை அடக்கி ஆண்டுகொண்டிருக்கிறது என்றே சொல்லவேண்டும்.

இந்த ஆட்சியை அதிகாரவர்க்க ஆட்சி என்று அழைப்பதால் பிரிட்டிஷ் சர்க்காரை குறைகூறுவதாக ஒருவரும் நினைக்கவேண்டாம். கோடிக்கணக்கான இந்தியர்களுக்காக தாங்கள் டிரஸ்டிகளாக இருந்து அரசு செலுத்துகிறோம் என்று கூறுகிறார்கள். நாம் எல்லாம் மைனர்கள் என்றும் உலகறிவு நமக்கு மிக குறைவு என்றும் நம்மை நாமே ஆண்டுகொள்ளும் சக்தி நமக்கில்லை என்றும் நன்மையானவைகளைச் செய்துகொள்ள சக்தி நமக்கு இல்லை

யென்றும் ஆதலால் சர்க்கார் நிர்வாகத்தில் அவர்களுக்கு பூரண உரிமையும் அளித்துவிடவேண்டுமென்றும் கூறுகிறார்கள். ஆதலால் நமக்கு அளிக்கப்பட்டிருக்கும் ஏதோ கொஞ்சநஞ்சமிருக்கிற சுதந்தரத்தையும் இழந்து விடாமல் பார்த்துக் கொள்ளவேண்டிய பொறுப்பும் அதை காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் நம்முடைய கடமை என்பதை நான் எடுத்துக் கூற வேண்டியதில்லை.

பகுத்தறிவுக்கும் பிரஜா உரிமைக்கும் என்ன சம்பந்தமிருக்கிறது என்று சிலர் எண்ணக்கூடும். என்னைப்பொறுத்தமட்டில் பகுத்தறிவு வாதிகள்தான் பிரஜா உரிமையில் மற்றவர்களை விட அதிக கவனம் செலுத்த வேண்டியவர்கள் என்றே சொல்லுவேன். மனிதனது உரிமை பறிக்கப்பட்ட பின் பகுத்தறிவு அவனுக்கு என்ன பயனையளிக்கும்? அரசியல் துறையில் மட்டும் சுதந்தரம் வேண்டும், உரிமை வேண்டும் என்பது மட்டும் போதாது. பகுத்தறிவு ஓங்க வேண்டுமானால் மக்களுக்கு சுதந்தரம் வேண்டும்.

மதம்.

உதாரணமாக மதத்தை எடுத்துக்கொள்ளுங்கள் மனிதனது பிரஜா உரிமை அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டிருப்பதைக் காண்பீர்கள். கட்டுப்பாடு ஏற்படுவது சர்க்காராலல்ல, மதகுருக்கள் என்று சொல்லப்படுகிற ஒரு சில சுயநலக்கூட்டத்தாரால் என்பதையறிக. அரசியல் துறைகளில் சர்க்கார் எத்தகைய அடக்குமுறைகளை கையாளுகிறார்களோ அதுபோலவே மதகுருக்கள் அடக்கியாளுகிறார்கள். அடக்கியாளும் உரிமை அளிக்கப்பட்டுமிருக்கிறது. அவர்கள் எதைக் கூறுகிறார்களோ அதை மக்கள் சட்டமாக விதியாகக் கொள்ளவேண்டும். மனிதன் எதையும் ஆராய்ச்சி விளக்கால் நோக்க இடம் கொடுக்க மாட்டார்கள். மதமெனபது ஆபாசமான காரியமெனத்தோன்றினாலும் அவர்களுக்கு அவைகள் பெரிய புனித தன்மை வாய்ந்தவை எனக்காணப்படும்.

இதை விளக்க ஒன்று மட்டும் எடுத்துக்கூறுகிறேன். அதாவது மதத்தலைவர்கள் மத நூல்களை சாதாரண மக்கள் வாசித்தறிய இடம் கொடுக்காமல் எவ்வளவு தூரம் போராடி வந்தார்கள் என்பது உலக சரித்திர மறிந்த எவருக்கும் தெரியாமற்போகாது.

ஐரோப்பாவிலே பைபிள் மொழி பெயர்க்கப்பட்ட வுடன் தோன்றிய கிளர்ச்சி ஐரோப்பா சரித்திரத்திலே இன்னும் காணலாம். அக்கிளர்ச்சி யுண்டானதற்குக் காரணம் சாதாரண மனிதனும் அதை வாசித்து குருக்கள் சொல்லுவதெல்லாம் வேதவாக்கு, தேவவாக்கு என்று நினைத்து வந்தது எல்லாம் பேதமை என்று அறிந்து கொள்ளுவான் என்ற பயமேயாகும்.

சமூகத்துறை.

சமூகத்துறையிலும் மனிதனுக்கு சுதந்தரம் வேண்டும். சமூகத்திலே ஒருவன் சர்க்காரால் நடத்தப்படுவதை விட அதிக கொடுமையாக நடத்தப்படுகிறான். நாம் செய்கிற அநேக காரியங்கள் எதற்காகச் செய்கிறோம், என்ன அர்த்தத்தோடு செய்கிறோம் என்பது தெரியாமல் நமது மூதாதைகள் செய்து வந்தார்கள் என்ற ஒரு காரத்தின் மீதே செய்துவருகிறோம். ஏன் அவ்வாறு செய்கிறோமென்றால், அப்படிச் செய்யாமல் சிறிது வித்தியாசமாக ஏதாவது செய்ய நேரிட்டால் உடனே சமூக எதிர்ப்பும் சமூக கட்டுப்பாடும் கிளம்பிவிடும். இந்தியாவிலே விவாகச் சடங்குகளும் மரணச் சடங்குகளும் செய்யப்பட்டு வருவதற்கு ஏதாவது அர்த்தமிருக்கிறதா? ஏன் அவ்வாறு செய்யவேண்டும் என்றால் பண்டு தொட்டு செய்யப்பட்டு வரப்படுகிறது என்று சொல்லப்படுவதைத் தவிர வேறொன்றும் பதில் காணமுடியாது. இக்கால நிலைமைக்கு அவைகள் பொருந்தாதவைகள் என்றும் மூடப்பழக்கவழக்கங்கள் என்றும் சொல்லி போராடவேண்டியது பகுத்தறிவுவாதிகளின் கடமை.

சுதந்தரமென்பது பேசவும், எழுதவும், சங்கங்கள் அமைக்கவும் பூரணஉரிமைவேண்டும். சட்டப்படி-அவைகளை தடுக்கக்கூடிய விதிகள் ஒன்றுமில்லைஎன்பதை நானறிவேன். ஆனால் நான் மேலே கூறிய சமூக கட்டுப்பாடுகளும் சுயநல போதகர்களும் தடுக்கப்படும் வரை ஒருவன் சுதந்தரத்தோடு வாழமுடியாது. உலக சரித்திரத்திலே பெரிய மனிதர் என்று சொல்லப்படுகிறவர்கள் எல்லாம் பழக்க வழக்கங்களுக்கு கட்டுப்படாதவர்களும், படையை எதிர்த்துப் போராடியவர்களும் சமூக கட்டு திட்டங்களுக்கு தலைவணங்கா

மூட நம்பிக்கை.

(எம். சிங்காரவேலு)

—)0(—

தெருக்களில் கரும்புவிற்கும் இடங்களில் கரும்பு உடைக்கும் பந்தயமொன்று நடந்து வருகிறது. ஒருவன் 100 கரும்பைத் தனது கைமேல் அடித்து உடைத்து விடுகிறான். ஆனால் நம்மைப்போன்றவர்களோ, ஒரு கரும்பை உடைக்கப் பயப்படுகின்றார்கள். இதுவும்தெய்வீகமா? பின் என்ன? அவன் உடைத்து உடைத்துப் பழக்கம். நீரும் நாழும் அந்தப் பழக்கத்தை உண்டாக்கிக் கொண்டால் அவனைப்போல் நாழும் 100 மாத்திரம் அல்ல; 200 வரை உடைத்தெறியலாம்! பழக்கம் மலையைத் தாண்டச்செய்யும்!

சிறு குழந்தைகள் பிச்சை எடுக்க தங்களுடைய வயிற்றைப் படீர் படீர், எனத் தங்கள் கையால் அறைகின்றார்கள்.

தவர்களும், எதை எடுத்தாலும் 'ஆம்' என்று சொல்லாத வீரர்களும் என்பதையறிக.

நீண்ட நேரம் பேசிவிட்டபடியால் இத்துடன் முடிக்கலாம் எனக் கருதுகிறேன்.

கடைசியாக பகுத்தறிவு சங்கத்துக்கும் பிரஜா உரிமை சங்கத்துக்கும் நெருங்கிய சம்பந்தமிருக்கவேண்டும் என்று கூறப் பிரியப்படுகிறேன். பகுத்தறிவுவாதி என்பவன் ஒரு சரியான பிரஜா உரிமைக்கு போராடுகிறவனாயிருத்தல் வேண்டும். பிரஜா உரிமைக்கு போராடுகிற ஒருவன் ஒரு தீவிர பகுத்தறிவுவாதியாக இருக்கவேண்டும் என நான் நினைக்கிறேன்.

இவ்வளவு நேரம் நீங்கள் பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்ததற்காக நான் எனது வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அம்மாதிரி நம்முடைய குழந்தைகள் அறைந்துகொண்டால் சுருண்டு கீழே விழுந்துவிடும். இதுவும் தெய்வீகமா எனக் கேட்கின்றேன்.

தலையில்கூட, தேங்காய்களை உடைக்கின்ற பழக்கம் நமது தேசத்தில் உண்டெனக்கேள்வி. எந்தவித அசங்கிதக்காரியங்களைத்தான் நம் நாட்டில் செய்யமாட்டார்கள்? இவை போன்ற அசங்கிதகாரியங்கள் நமது காட்டுமிராண்டித்தன்மையைக் காட்டுகின்றனவே யொழிய நமது பக்திவையோ, அல்லது தெய்வீகத்தன்மையையோகாட்டவில்லை. இவ்விதகாரியங்களைக்கண்டு நாம் தலைகவிழ்ந்து வெட்கமடைவதை விட்டுவிட்டு அவை தெய்வீகமா? அல்லவா? என்று கேள்வி கேட்பது வியக்கத்தக்கதுமல்லாமல் வருந்தத்தக்கதுமாகும்! இத்தியாதி மனப்பான்மையால்தான் நமது நாடு பல நூற்றாண்டுகளாக அடிமைவாழ்க்கையில் இருந்து வருகின்றது. இந்நிலைமையைக் குறித்து அயல நாட்டார் நம்மைப் பரிகாசம் செய்தால் என்னதப்பு?

நவீன ஞானப்படி இத்தியாதி மூடநம்பிக்கைகளை விசாரித்து விளக்கியுள்ள நூல்கள் ஆங்கிலத்தில் பலவுள. அவைகளில் முக்கியமானவை "Taylors Anthropology" என்றும் "Frazors Golden Bough" என்றும் இரண்டு பிரபல்ய நூல்கள் உள. அவைகளைத்தமிழில் மொழிபெயர்த்து எழுத வேண்டிய அவசியத்தை நமது சுயமரியாதைக்காரர்கள் அறிந்து நடக்கவேண்டும். பாமரமக்கள் மூடநம்பிக்கைளை ஒழிக்க வேண்டில் அம் மூடநம்பிக்கைகளின் ஆதாரத்தை விசாரித்து அறிதல் வேண்டும். அவ்விதவிசாரணைக்கு மேற்போந்த நூல்கள் இன்றியமையாதவையாகும். இத்தியாதி நவீன ஞானத்தைப் பாமர மக்களுக்குப் புகட்ட எத்தனிக்கையில் புராணங்களையும், கேவல நாடகங்களையும், அருட்பாக்களையும் பற்றி அச்சிடுவதால் பயன் என்ன? மெஞ்ஞான முறைப்படி சிற்சில மூடப்பழக்கங்களை எங்கு எடுத்துரைப்போம். நமது தமிழ் நாட்டில் மிகுதியாகப் பாமர மக்களிடத்து ஒரு மூடப்பழக்கம் அனுதினமும் பார்க்கின்றோம். அது யாதெனில் இறந்தவர்களைச் சுடலைக்குக் கொண்டு போகும்போது அதிக சத்தத்தோடு கொண்டுபோகும் பழக்கம். இதனுடைய ஆதாரத்தைக் கண்டு கொள்ளாமல் இதைப் பெரும் பழக்கமாகத் தென்னாட்டில் நடந்தேறி வருகிறது. இது விசேஷமாகத் தாழ்த்தப்பட்டோர் எனக் கூறும் வகுப்பாரிடம் பெரி

தும் தாணைரம். உயர் குலத்தோர் என்று கூறும் பிராமண வைதியர்களில் சாவு மேளத்தைக் கேட்பதரிது. ஐரோப்பா, அமெரிக்கா முதலிய நாகரிக நாடுகளில் சேனைத் தலைவர் களுக்குத் தவிர மற்றவர்கள் சாவுக்கு மேளம் அடிப்ப தில்லை. ஆனால் இந்தப் பழங்கம் காட்டுமிராண்டிகளிடம் (Savage Tribes) அதிகமாகக் காணலாம். இந்தப் பழக்கத் தின் காரணத்தை அறிய வேண்டுமானால் காட்டுமிராண்டி கள் எண்ணியுள்ள எண்ணத்தை விசாரித்தால் தெரிய வரும். அவர்களுக்குள் இறந்தவனைப்பற்றி இரண்டு மூடநம் பிக்கைகள் உண்டு. அவையாவன:— அவர்களில் இறந்த மனிதனுடைய உயிர், ஆவி, (Spirit, Soul) உடலை விட்டு நீங்கியதும் அருகாமையிலுள்ள செடியிலோ, விருட் சத்திலோ, ஜலத்திலோ ஒளிந்து நிற்குமாம்! அந்த 'ஆன்மா' உயிருடன் இருப்பவர்களைத் தொந்திரவு செய்யுமாம்!! ஆத லின் அதனைச் சத்தமிட்டு விரட்டித்துரத்த வேண்டுவதற்கு சத்தமிட்டும், இரைச்சலிட்டும், கூச்சல் போட்டும், வாத்தியங் களால் பேரொலியை உண்டாக்கி ஆன்மாவைப் பயப்படச் செய்து ஓடச் செய்வதற்கு ஏற்பட்ட தப்பட்டை, பேரி, சங்கு முதலிய வாத்தியங்கள் முழங்கச் செய்யும் பழக்கத்தின் காரண மாகும். இரைச்சல் அதிகமிட, அதிகமிட இறந்தவன் 'ஆன்மா' அதிக விரைவாக ஓடி விடுமாம்! இந்தக்காட்டு மிராண்டி மூடப்பழக்கத்தை நமது தமிழ் மக்களும் அனு சரித்து வருகின்றார்கள். நமது நாடுகளில் சாவு மேளங்களின் காரணம் ஆதிகாலக் காட்டு மிராண்டிகளாக இருந்து வந்த நமது மூதாதைகளின் உத்தேசங்களென அறியவும். சாவு மேளத்துக்கு ஆதாரம் காட்டுமிராண்டிப்பழக்கமாக இருக்க இதற்கு நற்காலம வேறுவித அர்த்தங்களும், வியாக்கியானங் களும் கொடுக்கின்றார்கள். அரசர் இறந்தாலும், சேனைத் தலைவர் இறந்தாலும் சாவு மேளம் அதிகமாக உபயோகிக் கின்றார்கள். நமதுநாட்டில் எளியவன் இறந்தால் ஒன்றிரண்டு சங்குடனே போகின்றது. அரசர்கள், தனவந்தர்கள் இறந்தால் ஊரிலுள்ள வாத்தியங்கள் எல்லாம் முழங்கும்! ஏன்? எளிய வன் 'ஆன்மா' எளிதில் துரத்தப்படுமாம்! ஆனால் தனவந்த னுடைய 'ஆன்மா'வோ பலத்த சத்தத்தால்தான் ஓட்ட முடி யுமாம்! இந்த எண்ணங்கள்தான் சாவுமேளங்களுக்கு அடிப் படையாகவுள்ளன. இறந்தவனை வாத்திய கோஷ்டியாலும் மரியாதை செய்வதென்பது பிறகு கொடுத்துவரும் வியாக்கி யானமென அறிக. எதார்த்தமோ செத்தவன் 'உயிர்' திரும் பவும் வரவொட்டாமல் செய்வதற்கு ஏற்பட்ட மேள வாத்

தியங்குனென அறிக. காட்டு மிராண்டிப் பழக்கங்களில் சில வற்றை இன்னும் உயர் மக்கள் என்று கூறும் பிராமணர் களிடமும் காணலாம். பிராமணர்களிடம் ஒரு துர்ப்பழக்கம் இருந்து வருகின்றது. அதாவது இறந்தவனை சாதாரண வாசல் வழியாகக் கொண்டு போகாமல் சுவரில் துவாரம் செய்து, சவத்தை அவ்வழியாக எடுத்துக்கொண்டு போன பிறகு அந்தத் துவாரத்தை அடைத்து விடுவார்கள். இதுவும் காட்டு மிராண்டிப் பழக்கங்களில் ஒன்று. இந்தப்பழக்கத் திற்கு காட்டுமிராண்டிகள் என்ன சொல்லுகிறார்கள் என் றால் பழைய வழியாகப் போனவன் இறந்தால் அவன் "ஆன்மா" அந்த வழியே திரும்பவந்து விடுமாம்! புதிய துவாரத்தின் வழியாக எடுத்து விட்டு, அந்த துவாரத்தை அடைத்து விட்டால், அந்த "ஆன்மா"வுக்குப் புது வழி தெரியாமையால் அது அந்த புது வழியில் நுழையாமல் தடுத்து விடப்படுமாம்? செத்தவன் ஆன்மாவை ஏமாறச்செய் யும் சூழ்ச்சிகளில் இது ஒன்று இன்னும் பல மூட சூழ்ச்சி களைக்கொண்டு "ஆன்மாவை" மயக்கச்செய்து விடுகின்றார் கள். இறந்தவனை வீட்டை விட்டு சுடுகாட்டுக்குக் கொண்டு போகையில் சாணிச்சட்டியை உடைக்கின்றார்கள். இதுவும் காட்டு மிராண்டிகளின் மூடப் பழக்கத்தை அனுசரித்து நடப்பதாகும். காட்டுமிராண்டிகளுக்குள் ஒரு கற்பனையுண்டு. அதாவது, பேய், பிசாசுகள் தண்ணீரைத் தாண்டாவாம்! தண்ணீரில், இன்னும் சாணித்தண்ணீர் விசேஷம். சவத்தின் பின் ஊற்றினால் அதன் ஆன்மா, தெளித்த தண்ணீரைத் தாண்டாவென்று எண்ணி இந்தப்பழக்கம் காணைக்கும் நம்ம வர் செய்து வருகின்றனர். கொள்ளி வைத்தவர்கள் சுடு காட்டை விட்டு வீட்டுக்குத் திரும்பும்போது கடலிலாகிலும், குளத்திலாகிலும், ஆற்றிலாகிலும் நீரில் காலை கழுவக்க வேண்டுமென்ற பழக்கம் இதனால் ஏற்பட்டதென அறியவும். இவர்கள் காலடி தண்ணீரில் மறைந்து போகுமாதலால் செத் தவன் "ஆன்மா"வும் காலடி வைத்த பின் தொடர்வதற் கில்லையாம! திருடர்களும் தங்கள் காலடிகளைத் தண்ணீரில் இறங்கி மறைத்து விடுவதைப் போன்றதென அறிக. பின் தொடர்ந்த நாய்கள், அங்கு வந்து மயங்குவதைப்போல், "ஆன்மா"வும் மயங்கி விடுமாம்! கொள்ளி வைத்தவர்கள், எரியும் சவத்தைத் திரும்பிப் பார்க்கக் கூடாதென்ற பழக் கமும் இந்த ஆன்ம சித்தாந்தத்திலிருந்து ஏற்பட்டதாகும். கொள்ளி வைத்தவர்கள் முகம் செத்தவனுடைய ஆன்மா வுக்குத் தெரியுமாதலால், வீட்டுக்கு அவர்கள் திரும்பும்

காலை அவர்கள் எரியும் பிணத்தை திரும்பிப்பார்க்கும் பட்சத்தில், வேகும்பிணத்தருகே அலைந்து கொண்டிருக்கும் அதன் "ஆன்மப் பேய்" (The soul Hovering near the burning corpse) அவர்களுடன் தொத்திக்கொண்டு, வீட்டுக்கு வரும் என்ற கற்பித பயத்தால் நேர்ந்த பழக்கமென அறிக.

வீட்டுக்கு அருகே வந்தபோதும், வீட்டில் நுழைவதற்கு முன்னும், கால்களைக் கழுவிக்கொண்டு உள் நுழையவேண்டுமென்ற பழக்கமும், இந்த ஆன்ம சித்தாந்தத்தை தழுவி நிற்கின்றதென்று அறியவும். எப்படியெனில், பேய், பிசாசுகள், தண்ணீரைத் தாண்டாவாம்! இதே காரணத்தை ஒட்டியே தற்கால பிராமணர்கள், தங்கள் சாப்பிடுங் காலை, இலையைச் சுற்றி ஜலம் தெளித்துக்கொண்டு, சாப்பிடுவதுமுண்டு. ஜலத்தைத் தாண்டிக்கொண்டு பேய், பூதங்கள், உண்ணும் உணவை உண்ணாவாம்!!

விடியற் காலங்களில் சாணித் தண்ணீரை வீட்டுக்கு எதிரில் தெளிப்பதும் இதே காரணத்தினால் என அறிக. பாதி ராத்திரி முதல் கதவு சாத்தப்பட்டு நுழைய வழியில்லாமல் வெளியில் இருந்த பேய், பிசாசுகள் கதவைத் திறந்தவுடன் உள் நுழையாதிருக்க சாணித் தண்ணீர் தெளிக்கும் வழக்கம் உண்டாயிருக்கவேண்டும். சாப்பிடும்போது, விளக்கு அவிந்துவிட்டால், உண்ணும் உணவை எடுத்துவிட்டு, தீபமிட்ட பிறகு தண்ணீரைத் தெளித்தும் தனது தலைமேல் தண்ணீரைத் தெளித்துக்கொண்டும் திரும்ப உண்ணுவது சில இடங்களில் பார்க்கலாம். இதுவும், இந்தப் பேய் கற்பிதத்தால் பழக்கத்திற்கு வந்திருக்கவேண்டும். இருட்டில்தான் பேய் பிசாசுகள் உணவை உண்ணுமாம்! விளக்கு அவிந்தவுடன் பேய் பிசாசுகளால் உண்ணும் உணவு தீட்டுப்பட்டு விட்டபடியால் மறுபடியும் அந்த உணவைத் தீண்டத் தகாதென்பதும், விளக்கு ஏற்றியவுடன், பேய் பிசாசுகள் ஓடிவிடுமாகையால், அப்போது புதிய உணவை உண்ணலாமென்பதும் ஓர் குயுக்தி என எண்ணவேண்டியிருக்கிறது.

இவ்வித மூடப்பழக்கங்களெல்லாம், மனிதன் இறந்த பிறகு அவன் "ஆன்மா" வெளியில் உலாவுகின்றது என்ற கற்பிதத்தால் வந்தவை. மனிதனுக்குள் ஓர் "ஆன்மா" இருந்து வருகிறது. அந்த "ஆன்மா" பெருவிரல் பருமனுள்ளது. தேகம் மரித்த பின்பு, அந்த "ஆன்மா" செத்தவன் வீட்டுப் பக்கங்களிலும், அடுத்த செடிகளிலும், சுடுகாடுகளிலும் தங்கியிருக்கும். இந்த ஆன்மாக்கள்தான், "பேய்" "பிசாசு"களாக மனித சஞ்சாரமில்லாத இடங்களில் உலாவிக்கொண்டிருக்கும். இருளிலோ, அல்லது "உருமேளை" யிலோ (மத்தியானம்) "ஒண்டி சண்டியாக" (தனிமையாக) யாதாமொருவன் தனித்த இடங்களில் போவாரேயாகில், அவனை இந்தப்பேய், பிசாசு, அண்ணமார், தம்பிமார், கன்னிமார், முனீஸ்வரன் முதலிய "பூதப் பேய் பிசாசுகள், இவனை அறைந்து" நோயால் பாதைப்படும்படி செய்து விடுகின்றனவாம். இந்த நம்பிக்கை தான் உலக முழுமையும் நிறைந்து வருகிறது. பேய்களுக்கும், பிசாசுகளுக்கும், முனிவீரன்களுக்கும், காற்று கருப்பன்களுக்கும், இந்த "ஆன்மா" கற்பிதமே, காரணமாகும். ஆன்மா ஒன்றுண்டென்ற நம்பிக்கை கற்பிதமென்று நமது பாமர மக்கள், உணர்வதற்கானாயாகில், இந்தக்கற்பிதப்பேய் பிசாசுகள் உலகை விட்டுப் பறந்தோடிப்போமென அறிக.

இந்தப் பேய் பிசாசு நம்பிக்கைபால் உலகில் அநந்த கொடுமைகள் நடந்து வருகின்றன. ஒரு காலத்தில் சூன்யம் வைத்தல் (Nicromancy or Black Magic) என்ற பொய் வதந்தியை நம்பி, அநேகர் கொல்லப்பட்டார்கள். அந்த "சூன்யத்தை"ப் போக்க, தலைச்சன் குழந்தைகளை (First Born) காவு கொடுத்தார்கள்!!! இக் கொடிய பாதகத்தால், ஆயிரக்கணக்கான உயிர்கள் மாய்ந்தன. ஆயிரக்கணக்கான குழந்தைகள் கொல்லப்பட்டன ஆயிரக்கணக்கான கிழவிகளை "மந்திரக்காரி" என்றும் சூன்யக்காரி என்றும் வதைத்துக்கொன்றார்கள். ஆயிரம் வருஷங்களாக ஐரோப்பா தேசத்தில் (Witch craft) என்று வழங்கி வந்த சூன்யம் என்ற பழங்க வார்த்தையால் கொல்லப்பட்ட

(Wizards, Witches) சூன்யக்காரர்கள், சூனியக்காரிகளுக்கு கணக்கு வழக்கேயில்லை!!! இம் மகாபூதகத்திற்கு அடிமையாக இருந்தது "ஆன்மா" என்ற ஓர் கற்பிதச் சொல்லென அறிக. இக் கற்பிதச் சொல்லுக்கே, நகர மோட்சங்களும், நிர்வாண சமாதிகளும், திதி, திவசங்களும், கோயில்களும், குளங்களும் மசூதிகளும், மாதாகோயில்களும், திருவிழாக்களும், தீர்த்தங்களும், பெரிய புராணங்களும், கந்த புராணங்களும், வேதங்களும், வேதாந்தங்கம் தோன்றியுள்ளன. இந்தச் சொல் ஒன்றை மாத்திரம், கற்பிதமென அறிந்த மாத்திரத்தில் எல்லாப் பேய், பிசாசுகளும், இருளன், வீரன் காட்டேரிகளும், சிவன், விஷ்ணு, பிரமாக்களும் 33 கோடி தேவர்களும், 48000 ரிஷிகளும், இவைகளுக்குக் கட்டியுள்ள கோயில், மசூதிகளும், விசாரங்களும், (Viharas) புத்தர் கோயில்களும், சிவன் கோயில்களும் பறந்தோடிப்போமென அறிக. இதற்கு அத்தாட்சி தேண்டுமானால், இந்தக் கற்பித வார்த்தையை அறியாத குழந்தைகளுக்கும், மனிதர்களுக்கும் "கடவுள்" என்ற கற்பிதச் சொல்லே தெரியா! பேய் பிசாசுகளும் தெரியா. இந்தச் சொல்லை கற்பிதச் சொல்லென அறிந்த விஞ்ஞானிகள், "கடவுளும்" கற்பிதச் சொல்லென்றே தீர்மானித்து வருகின்றனர். மனிதருக்குள் சொற்கள் பரிணமித்து (Evolve) வருங்காலையில், "ஆன்மா" "உயிர்" "பிராணன்" என்ற சொற்கள் முதல் தோன்றின. அந்த சொற்களிலிருந்து, "போரான்மா" "பேருயிர்" என்ற சொற்கள் பெறப்பட்டன. இந்தச் சொற்களை கடவுளென்ற பதத்திற்கு சாட்டி, "மனிதன்" சிற்றுயிர் என்றும் "கடவுள்" பேருயிரென்றும் வழங்கிவந்தனர். இதுதான் கடவுளென்ற பதத்தின் பரிணாமம். (Evolution) ஆதி மனிதனுக்கு "ஆன்மாவும்" தெரியாது. "கடவுளும்" தெரியாது. பேச ஆரம்பித்த பிறகே, இந்தச் சொற்கள் கற்பிக்கப்பட்டன. ஆன்மாவுக்கும், கடவுளுக்கும் பாஷையே ஆதாரம். பாஷை தோன்றாவிடில், எந்த மனிதனும் "ஆன்மா" வென்றும் "கடவு"ளென்றும் சிந்தித்து இருக்கவே மாட்டான். எந்த மிருகத்திற்காகிலும், ஆன்மாவென்றாகிலும் கடவுளென்றாகிலும் தோன்றினவா? இல்லை. ஏன் அவைகளுக்கு பாஷை (Language) தோன்றாமையால். ஆதலின் "கடவுள்" "ஆன்மா" "பேய்" "பிசாசு" முதலிய இன்னும் பல கற்பித கொள்கைகளுக்கு பாஷையே ஆதாரம்.

சத்துள்ள உணவைப்பற்றிய குறிப்புகள்.

தேக சுகத்துக்கேற்ற உணவு எது என்பதை யாராய்ந்த மேல்நாட்டு அறிஞர்கள் கலப்பு ஆகாரந்தான் (அதாவது மாமிசமும், மரக்கறியும்) சிறந்தது என்று முடிவு செய்திருக்கிறார்கள். மாமிச உணவு மனிதருக்கு எவ்வளவு அவசியமோ அவ்வளவு மரக்கறி உணவு மனிதருக்கு இன்றியமையாததாகும். ஏனெனில் மாமிச உணவில் இருக்கும் சத்துக்கள் மரக்கறி உணவில் கிடையாது. மரக்கறி உணவில் இருக்கும் சத்துக்கள் மாமிச உணவில் இல்லை. ஆகவே மாமிச உணவையும், காய்கறிகளையும் கலந்து சாப்பிடவேண்டியது அவசியமாகிறது.

மாமிச உணவைச் சாப்பிடுவது இழிவானது, தாழ்வானது, பாவமானது என்று இந்துக்களில் ஒரு மூடக்கொள்கை இருந்துவருகிறது. மாமிசம் சாப்பிடுவதனால் தாமசக் குணமும், ராஜோ குணமும் ஏற்படுவதாகச் சொல்லுகிறார்கள். சாந்தகுணம் ஏற்படுவதற்காக காய்கறிகளைச் சாப்பிடவேண்டும் என்று சொல்லுகிறார்கள். இந்துக்களுக்கு வீரம் அற்றுப்போனதும் ரோஷமற்றுப் போனதும் அந்நிய அரசாங்கத்துக்கு அடிமைப்பட்டுக் கிடப்பதும் மரக்கறி உணவினால் வந்தபட்ட சாந்த குணத்தின் பயனாகும். பௌத்தம், ஜைனம், இந்துமதம் ஆகிய இம் மூன்று சமயங்களும் சேர்ந்து இந்தியரை மரக்கறி உணவு சாப்பிடச்செய்து அதன் பயனாக இந்தியரை மீளா அடிமைக் குழியில் அமிழ்த்திவிட்டது. மரக்கறி உணவு (சைவ சாப்பாடு) மாத்திரம் சாப்பிடுவதனால் இந்துக்கள் தேகபலமும் அறிவு பலமும் குறைந்து நாளுக்குநாள் க்ஷீணித்துப் போகிறார்கள். இனியாவது ஆகாரத்தைச் சீர்திருத்திக்கொண்டு தேக சுகமும் அறிவும் ஆண்மையும் பெற்று வாழ்வார்களென்று நம்புகிறேன்.

மாமிசப் போஜனம் செய்கிறவர்களை சைவ போஜனம் செய்கிறவர்கள் தாழ்வாக நினைக்கிறார்கள். மாமிச போஜனம்

செய்கிறவர்களில் சிலர், மற்றவர்கள் தங்களை இழி வாகக் கருதுவார்களென்று நினைத்துத் தாங்கள் சைவர்கள் [மரக்கறி புசிக்கிறவர்கள்] என்று சொல்லிக் கொண்டு மறைவாக மாமிசம் புசிக்கிறார்கள். இவ்விதம் செய்வது அறிவீனமாகும். உண்மையில் மாமிசபோஜனம் செய்வோர் தாழ்ந்தவரல்லர். மரக்கறி ஆகாரம் சாப்பிடுகிற வர்கள் தான் மாமிசம் புசிப்போரைவிடத் தாழ்ந்தவராவர். எப்படியென்றால், மாமிசம் புசிப்போர் மரக்கறி உணவையும் சாப்பிடுகிறார்கள். ஆகையால் அவர்கள் உண்ணும் ஆகாரத் தில் தேக சுகத்திற்கு வேண்டிய எல்லா ஜீவசத்துக்களும் அமைந்திருக்கின்றன. ஆனால் மரக்கறி மாத்திரம் புசிக்கிற சைவர்களின் சாப்பாட்டில் எல்லா ஜீவசத்துகளும் (Vitamins) அமைந்திருக்க வில்லை. ஆகவே சைவர்கள் குறைந்த சத்துள்ள ஆகாரத்தைப் புசிப்பதனால் நிறைந்த சத்துள்ள ஆகாரத்தைப்புசிக்கும் மாமிசம் சாப்பிடுவோருக்கு தாழ்ந்தவராவர்.

இனி மாமிச போஜனத்திலுள்ள சில குணங்களை இங்கு எழுதுவோம். இங்கு எழுதப்படும் விஷயங்கள் எனது அபிப்பிராயம் அல்ல. உலகோரால் கன்கு மதிக்கப்பட்டும் புகழ்பெற்ற மேனாட்டு டாக்டர்கள் ஆராய்ச்சி மூலமாகக் கண்டறிந்த உண்மைகளையே இங்கு எழுதுகிறேன்.

முதலில் நெய் அல்லது கொழுப்புகளை எடுத்துக்கொள் ளுவோம். கொழுப்புகள் இரண்டு வகைப்படும். அதாவது தாவரக் கொழுப்பு, மிருகக் கொழுப்பு என்பன. தாவரங் களில் இருந்து எடுக்கப்படும் எண்ணெய், பருத்திக்கொட்டை நெய், தேங்காயெண்ணெய் முதலியன தாவரக் கொழுப்பு களாம். மிருகங்களிலிருந்து கிடைக்கும் வெண்ணெய், நெய், மீன் எண்ணெய் (Cod-liver oil) மாமிசங்களிலிருக்கும் கொழுப்புகள் முதலியவைகளே மிருகக் கொழுப்பு எனப் படும். இந்த இரண்டு விதக்கொழுப்புகளில் மாமிசக் கொழுப்புகள்தான் [வெண்ணெய், நெய், மீன் எண்ணெய் முதலியன] உடம்புக்கு அதிக நன்மை செய்வதாகக் கண்ட றிந்திருக்கிறார்கள். இன்னும் விளக்கமாகச் சொல்ல வேண் டும் என்றால். தாவரக் கொழுப்பாகிய எண்ணெய் வகை களில் Vitamin A என்னும் ஜீவசத்துப் பொருள் கிடை

யாது. வெண்ணெய், நெய், மீன் எண்ணெய் முதலிய மிருகக் கொழுப்புகளில் Vitamin A என்னும் ஜீவசத்துப் பொருள்கள் ஏராளமாயிருக்கின்றன. அன்றியும் மீன் எண்ணெயில் Vitmin D என்னும் ஜீவசத்தும் இருக்கிறது. Vitamins என்னும் ஜீவசத்துப் பொருள்களைப் பற்றி தனியே பிறகு ஆராய்வோம்.

ஈரல் (liver) என்பது ஆடு மாடு பறவை முதலிய எல்லாப் பிராணிகளின் உடம்பில் உள்ள ஒரு உறுப்பாகும். இதைச் சாப்பிடுவதனால் மிகவும் நன்மை உண்டாகும் என்று டாக்டர்கள் சொல்லுகிறார்கள். இதில் நான்கு வகை ஜீவசத்துப் பொருள்கள் (Vitamins-A, B, C, and D.) இருக்கின்றனவாம். அன்றியும் Manganese என்னும் உலோகசத்தும், அயம் (Iron) என்னும் இரும்புச்சத்தும் இருக்கின்றன. இது மிகவும் முக்கியமான ஆகாரம் என்றும் இதை மனிதர் வாரத்துக்கொரு முறையாவது சாப்பிட வேண்டும் என்றும் பிரபல டாக்டர்கள் சிபார்சு செய்கிறார்கள்.

மாமிசம்: (Meat) ஆடு முதலிய பிராணிகளின் மாமிசம் உடம்புக்கு பலம் தருவதாகச் சொல்லுகிறார்கள். அன்றியும் மாமிசத்தில் Phosphorus என்னும் ஒருவகை உப்பு இருக்கிறது. இந்த உப்பு தேகத்திலுள்ள ஜீவ அணுக்கள் வளர்வதற்கு அவசியமானது. இன்னும் இரத்தத்திலும் இந்த உப்பு ஓரளவு இருக்க வேண்டியது அவசியமானது.

மூளையிலும் Phosphorus என்னும் உப்பு இருக்கிறது. அன்றியும் தேகத்துக்கு நன்மை தரக்கூடிய அநேக மிதக் கொழுப்புகளும் இதில் உள்ளன. இன்னும் மூளையில் தாம்பரம் (Copper) என்னும் செம்புச்சத்தும் துத்தகாகச் (Zink) சத்தும் இருக்கின்றன.

மீன்கள்: மீன் வகைகளில் A. B. D. என்னும் மூன்று வகை ஜீவசத்துக்களும் இருக்கின்றன. அன்றியும் அயோடின் (Iodine) என்னும் உப்பும், தாம்பரம் (Copper) என்னும் செம்புச்சத்தும் இருக்கின்றன.

முட்டை: இதில் கொழுப்பு வகைகள், கால்சியம் (Calcium) பாஸ் பரஸ் (Phosphorus) என்னும் உப்புகள், இரும்பு (Iron) சத்து ஆகிய இவைகள் இருக்கின்றன. முட்டை

பாலுக்கும், ஈரலுக்கும் (Liver) அடுத்தபடியான முக்கியமான ஆகாரம். ஆனால் இதை ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்றுக்கு மேல் சாப்பிடக் கூடாது. சைவர்கள் முக்கியமாக பிராமணர்கள் தற்காலத்தில் வெளிப்படையாகச் சாப்பிடும் மாமிச ஆகாரம் முட்டையே. முட்டை பறவைகளின் வயிற்றிலிருந்து வெளிப்படுகிறதை யறிந்திருந்தும் அவர்கள் இதை தாவர உணவு (Vegetable food) என்று சொல்லுகிறார்கள். நமது காட்டில் கோழி முதலிய பறவைகளை வளர்த்து போதிய அளவு முட்டையை உற்பத்தி செய்யவில்லையென்று டாக்டர்கள் வருத்தப்படுகிறார்கள்.

மாமிச உணவை உண்ணும்போது முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்று உண்டு. அதாவது மாமிசங்களோடு காய்கறி கீரை முதலிய தாவரங்களையும் கலந்து சாப்பிட வேண்டும். மாமிசத்தை மாத்திரம் தனியாகச் சாப்பிடக்கூடாது. மாமிச உணவுடன் மரக்கறிகளையும் கலந்து சாப்பிடுவதால் உடம்புக்கு அதிக நன்மை உண்டாகிறது.

மூளையை உபயோகித்து வேலை செய்கிறவர்கள் மாமிச உணவைப் பகற்காலத்தில் சாப்பிடக்கூடாது. ஏனென்றால் மாமிசம் ஜீரணமாவதற்கு அதிக நேரங்கொள்ளும். ஆகவே அதை சாப்பிட்டவுடன் மூளைக்கு வேலைகொடுத்தால் அது சரியாக ஜீரணமாகாமல் கஷ்டப்படுத்தக்கூடும். ஆகவே மூளை வேலை செய்கிறவர்கள் ஓய்வாக இருக்கிற மாலைக் காலத்தில் மாமிசம் சாப்பிடுவது நல்லது. அதாவது இராப் போஜனத்தில் மாமிச உணவை சாப்பிடலாம்.

மூளையைஉபயோகித்துவேலை செய்கிறவர்கள் மீன்சாப்பிடுவது நல்லது என்று டாக்டர்கள் சிபார்சு செய்கிறார்கள். ஏனென்றால் மாமிச உணவுகளில் எளிதில் ஜீரணமாகக்கூடியது மீன்தான். ஆகையால் ஓடி ஆடிப் பாடுபடாமல் ஓரிடத்தில் உட்கார்ந்து மூளையைச் செலுத்தி வேலை செய்கிறவர்கள் மீன் உண்பதால் அவர்களுக்கு அஜீரணம் முதலிய துன்பங்கள் உண்டாகாது.

பால், தயிர், மோர் முதலியவைகளும் மாமிச உணவேயாகும். சைவர்கள் இவைகளை மாமிசம் என்று நினைக்கிறதில்லை. இதைச்சைவர்கள் தாங்கள் உண்பது மட்டுமல்லா

கட்டு நீங்கிய கதலர்கள்.

(தோழர் அ. பொன்னம்பலம்.)

லெட்சுமிக்கு வயது பதினெட்டுதான். அவளுக்கு வாழ்க்கையில் திடீரென்று வெறுப்பு தோன்ற ஆரம்பித்தது. ஒருநாள் தனது வீட்டுத் தோட்டத்தில் நடந்து கொண்டே பல விஷயங்களை சிந்தித்துக் கொண்டிருந்தாள். ஒரு மரத்தடியில் போய் உட்கார்ந்தாள். மனம் உடைந்து தேம்பித் தேம்பி அழுதாள். "பாழும் பார்ப்பன சமூகத்தில் நான் ஏன் பிறந்தேன்? அதுவும் நான் பெண்ணாக ஏன் பிறந்தேன்?" என்று வாய்விட்டு அழுகத்தொடங்கினாள். இச்சமயம் தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்த சுந்தம் ஓடி வந்து "என் அம்மா அழுதுகொண்டிருக்கே" என்று அதிகக் கவலையோடு பதட்டமாகக் கேட்டான். லெட்சுமி பதில் கூறாமல் மௌனமாயிருந்தாள். "அம்மா, அப்பா திட்டினார்களா?" என்று மேலும் லெட்சுமியைக் கேட்டான்

மல் சுவாமிக்கு அபிஷேகமும் செய்கிறார்கள். சைவர்கள் மாமிச உணவாகிய பால், தயிர், நெய்களைச் சாப்பிடாமல் இருந்தால் அவர்கள் கதி அதோ கதியாய்விடும். பால், தயிர்களை அதிகமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும். உஷ்ண தேசமாகிய இந்தியாவில் பாலைத் தயிராக்கிச் சாப்பிடுவதுதான் நல்லது என்று டாக்டர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். தயிரைச் சாப்பிடுவதால் தேக சுகம்பெற்று அதிக நான் ஜீவித்திருக்கமுடியும் என்பது அறிஞர்களின் அபிப்பிராயம். பசும்புல், பச்சை இலை, தழை முதலியவைகளை மேயும் பசுவின் பால் அதிக சத்துள்ளதாக இருக்கும். காய்ந்த வைக்கோல் முதலியவைகளைத்தின்னும் பசுவின் பாலில் அதிக சத்துக்கள் கிடையா.

சீனி வேங்கடசாமி.

தோட்டவேலைக்கார சுந்தரம். பதிலேயில்லை. லெட்சுமிக்கு சுந்தரம் ஆறுதல் சொல்லத் தொடங்கினான். லெட்சுமியின் மனக்குழப்பம் மட்டும் நீங்கவேயில்லை. லெட்சுமியின் பெற்றோர்கள் லெட்சுமியை மிகவும் செல்வமாக வளர்த்தார் கள். படிப்பு, பாட்டு, பிடில் எல்லாம் கற்றுக்கொடுத்து 20000 ரூபாய் வரதக்ஷணை கொடுத்து லெட்சுமியை 12வது வயதில் கும்பகோணம் கோபாலய்யங்காருக்கு மணம் செய்து கொடுத்தார்கள். கோபாலய்யங்கார் எம். ஏ. படித்து பாஸ் செய்துவிட்டுமாமனார்கொடுத்தவரதக்ஷணை 20000ரூபாயை யும் ஆடம்பரமாக செலவுசெய்துவிட்டு கையில்பணமில்லாமல் உத்தியோகங்கட்கு அலைந்து மனமுடைந்து ரூபாய் வருவா யில்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார். கோபாலய்யங்கார் பெற்றோர்களும் பாம ஏழைகள்தான். அவர்களுக்குதன்மகன் எம் ஏ. பாஸ் செய்தும் உத்தியோகம் கிடைக்கவில்லையே என்ற கவலை. தங்கள் வீட்டுக்கு வந்தமருமகள் பாக்கியசாலி யாக இல்லாமல் தர்பாக்கியசாலியாகயிருக்கிறாளே என்ற கோபம் வேறு. மாமியார் தொல்லைகள் சகிக்கமுடியாமல் தான் லெட்சுமி தனது பிறந்தகத்திற்கு (ஸ்ரீரங்கம்) வந்து விட்டாள். லெட்சுமி தனது பிறந்தகத்திற்கு வந்து ஒரு வரு டத்தில் பருவமடைந்தாள். இச்செய்தியை லெட்சுமியின் பெற்றோர்கள் தனது மருமகனுக்கு கடிதமூலம் அறிவித்தார் கள்வந்த கடிதத்தை லெட்சுமியின் புருஷர்கோபாலய்யங்கார் வாசித்தார். தனது வறுமையை எண்ணி ஏங்கினார். தனது மாமனாருக்கு, கோபாலய்யங்கார் தன் கையில் இப்பொழுது பணமில்லாமல் கஷ்டப்படுவதாகவும், இதுவரை ஒரு வேலை யும் கிடைக்கவில்லையென்றும் கல்யாணத்திற்கு வரதக்ஷணை யாகக் கொடுத்த ரூபாய் எல்லாம் செலவாகிவிட்டதென்றும், இனியும் ரூபாய் 5000மும் நகைகளும் பட்டு ஆடைகளும் வெள்ளிச் சாமான்களும் கொடுத்தால்தான் லெட்சுமியை சாந்திமுகூர்த்தம் செய்து அழைத்துக்கொண்டு போகமுடியும் என்றும் மனத்துணிவுடன் பதில் கடிதம் எழுதிப்போட்டு விட்டார். அதுமுதல் லெட்சுமியின் பெற்றோர்களுக்கு மனக்கவலைதான் தனது பெற்றோர்கள் தன் பொருட்டு மனக்கவலையடைவதைப் பார்த்து தினசரி லெட்சுமி மனக் கலக்கமடைவாள். பார்ப்பன சமூகத்தின் வரதக்ஷணைக் கொடுமையை எண்ணி கலங்குவாள். பால்ய மணக்கொடு மையை எண்ணி ஏங்குவாள். மாமியார் தொல்லைகளை மனதில் நினைத்து புலம்புவாள். தாலி கட்டிய புருஷன், கேட்டபொழுது தனக்கு பெண் வீட்டில் ஆயிரம் ஆயிரமாக

ரூபாய் அனுப்பினால்தான் தனது மனைவியுடன் கூடிவாழ்வேன் என்று கூறும் கருணையற்ற கொடிய வழக்கத்தை நினைந்து அழுவாள்; இவ்விதம் லெட்சுமி பருவமடைந்து நான்கு ஆண்டுகளாக மனக்கவலையோடிருந்தாள். கோபாலய்யங்காரின் பெற்றோர்களும் தனது மருமகளை அழைத்துக்கொள்ளவோ, தனது மகன் பணமில்லாமல் சாந்தி முகூர்த்தம் செய்துகொள்வதை விரும்பவோ இல்லை. எல்லாம் வறுமைதான்! சமூகப் பழக்கத்தின் கொடுமைதான்! கையில் பணமில்லாத காரணம் தான்.

லெட்சுமியின் பெற்றோர்களுக்கும் பணக்கஷ்டம் தான். கையில் பணமிருந்தால் தமது புதல்வியின் பொருட்டாகிலும் தனது மருமகன் கேட்கும் ரூபாயையும் இதர சாமான்களையும் கொடுக்கப் பின்வாங்கமாட்டார்கள். லெட்சுமியின் தந்தையார் கையிலிருந்த பொருள்களை கல்யாணத்திற்காக மருமகன் வீட்டாருக்கு வரதக்ஷணையாக அழுதார். இப்பொழுது கடன் வாங்கிக் கொடுக்கவும் எண்ணுகிறார். அவர் எண்ணுவது போல் அவர் நிலத்தின் மீது கடன் கொடுக்க எவரும் முன்வரவில்லை. லெட்சுமியின் புருஷன் வீட்டார் பிடிவாதமாகவேயிருந்தார்கள். லெட்சுமியின் புருஷன் கோபாலய்யங்காருக்குச் சிறிதுகூட லெட்சுமிமீது அன்பு இருப்பதாகத் தெரியவில்லை. லெட்சுமி புருஷன் கோபாலய்யங்கார் தனது வீட்டிற்கு எதிர் வீட்டிலுள்ள பால்ய விதவையான கோகிலத்தினிடம் கள்ள நட்பு வைத்துக் கொண்டிருப்பதாக லெட்சுமி காதுக்கு செய்தி எட்டியது. கோகிலம் சடகோபாலய்யங்காருடைய பேத்தி. கோகிலம் 16-வது வயதில் விதவையானாள். கோபாலய்யங்காருக்கும், கோகிலத்திற்கும் ஏற்பட்ட கள்ளநட்பின் முதிர்ச்சியே, காதல் பெருக்கே, கோபாலய்யங்காரை தனது மனைவி லெட்சுமியை ஆரம்பத்தில் அலட்சியமாகக் கருதும்படி செய்தது. அத்துடன் வறுமையும் வேலையில்லாக் கஷ்டமும் சேரவே கோபாலய்யங்கார் தனது மாமனாரை ரூது சாந்திக்கு 5000 ரூபாய் கேட்கத் துணிந்தார். லெட்சுமியின் வீட்டுக்கு தோட்ட வேலை செய்து கொண்டிருந்த சுந்தரத்திற்கு தாய் தகப்பனில்லை. சுந்தரம் 16-வது வயதில் லெட்சுமியின் வீட்டுக்கு தோட்ட வேலைக்காரனாக வந்து சேர்ந்தான். அவனுக்கு சாப்பாடு லெட்சுமி வீட்டில்தான். அவனது இருப்பிடம் அத்தோட்டத்தில் ஒரு குடிசையில். சுந்தரம் நல்ல உழைப்பாளி. சுந்தரத்திற்கு இப்பொழுது வயது 20க்கு மேலிருக்கும். சுந்தரத்

தீற்கு கல்யாணம் செய்து வைக்க வேண்டியதுகூட லெட்சுமி யின் பெற்றோர் பொறுப்புத்தான். சுந்தரம் நல்ல அழகும் திடகாத்திரமு முடையவன். எல்லாரிடத்தும் மரியாதையாக வும் அன்பாகவும் நடந்துகொள்வான். சுந்தரம் வேறு தப்பு தண்டாக்களுக்குப் போகமாட்டான். சுந்தரம் தோட்ட வேலைகளையும் தனது சொந்த வீட்டு வேலைகள் போல் கருதி ஊக்கத்துடன் செய்வான். லெட்சுமி பெற்றோர்கள் குடும்பக் கவலையில் சுந்தரம் தனக்கும் பங்கிருப் பதாகக் கருதி கவலைப்படுவான். சுந்தரத்திற்கு தமிழ் மட்டும் நன்றாக எழுதப்படிக்கத் தெரியும். லெட்சுமி வீட்டா ருக்கு சுந்தரம் எல்லா வேலைகளிலும் மெய்யாகவே பாடுபட்டு உழைப்பான். சுந்தரம் தோட்டத்தில் சில பூச்செடிகளும் வைத்து பயிர் செய்தான். மலரும் பூக்களை மகிழ்வுடன் கொண்டுபோய் தினசரி லெட்சுமியிடம் கொடுப்பான், லெட்சு மியும் அன்போடு வாங்கி அவளுடைய அழகிய கூந்தலில் சூடிக்கொள்வாள்.

ஒருநாள் இரவு லெட்சுமியின் பெற்றோர்கள் ராமாயண காலட்சேபம் கேட்பதற்காக லெட்சுமியை தனியாக வீட்டில் விட்டு விட்டுப் போனார்கள். படுக்கையிலிருந்தபடி லெட் சுமி பல விஷயங்களைப்பற்றி சிந்திக்கலானாள். அவளுக்கு உறக்கமும் வரவில்லை. கல்ல பூரண பௌர்ணமி நிலவு படுக்கையிலிருந்து எழுந்தாள். கேரே தோட்டத்திற்குள் சென்றாள். அவள் உள்ளத்தில் தோட்ட வேலைக்காக சுந் தரம் குடிகொண்டு விட்டான். சுந்தரம் குடிசைக்கு சென்றாள். நடமாடும் சந்தடிகேட்டு சுந்தரம் எழுந்தான். 'யார்?' என்றான் பதட்டமாக. "சப்தம்போடாதே" என்று மெல்லிய குரலில் லெட்சுமி பதில்கூறி நின்றாள். "என் அம்மா! இந்த நேரத்தில் இங்கே தனியாக?" என்றான். "சுந்தரம்! உன்னோடு சில வார்த்தைகள் பேசுவதற்காகத்தான் வந்தேன். சப்தமில்லா மல் பதில் கூறவேண்டும்" என்றாள் லெட்சுமி.

லெட்சுமி:— நீ என் இன்னும் கல்யாணம் செய்து கொள்ள வில்லை?

சுந்தரம்:— எனக்கு கல்யாணம் செய்து கொள்ள பணம் எவ் டாமா? எல்லாம் உங்கள் வீட்டார்தானே செய்து வைக்க வேண்டும்.

லெட்சுமி:— நீ என்னை கல்யாணம் செய்து கொள்ளுகிறாயா? நான் உன்னைக் காதலிக்கிறேன்.

சுந்தரம்:— உங்கள் சாதி என்ன? என் சாதி என்ன? நான் மாட்டவே மாட்டேன். அம்மா எஜமான்க கோபித் துக் கொள்வாங்க. நீங்கள் வீட்டுக்குள் போங்க. இம்மாதிரி பேசாதீங்கோ.

லெட்சுமி:— வீட்டுக்குள் யாருமில்லை. எனக்கு பயமாக இருக் கிறது தனியாக இருப்பதற்கு. நீயும் உள்ளே வா போகலாம் என்று அழைத்தாள்.

இருவரும் உள்ளே சென்றதும் மீண்டும் லெட்சுமி பேச ஆரம் பித்தாள். "எனக்கு உன்மீது அளவற்ற ஆசை ஏற்பட்டு விட்டது, நீயாவது என்னுடன் கூடி வாழ விரும்பினால் உயிர் வாழ்வேன். இன்றேல் நான் தோட்டக் கிணற்றில் விழுந்து இறந்து போவேன்" என்று கூறினாள் லெட்சுமி.

சுந்தரம் பயந்து விட்டான்.

'அம்மை நான் தங்களை இனி மணப்பதுஞாயமாகாதே. தங்கள் ஜாதிவேறு; என் ஜாதி வேறு. அதுவும் பார்ப்பனப் பெண்ணைக் கெடுத்தேன்' என்று பழிவருமே" கதறுங்கி பயத்தோடு கூறினான் சுந்தரம்."நீ என்னைக் கெடுக்கவில்லை நான் தான் உன்னை விரும்புகிறேன்." என்று கூறினாள் லட்சுமி இனி நான் மணம் செய்துகொண்ட புருஷனுடன் வாழப்போவதில்லை. அவர் கோதையின் மையலில் மூழ்கி விட்டார். கோகிலம் இளம்வயதில் விதவையாகப்போன காரணத்தால் என் புருஷனுடன் கள்ளநட்பாய் வாழ்கின் றாள். அவள் மீதும் ஒன்றும் குற்றமில்லை. பாழும் சமூகப் பழக்கம் தான் இந்நிலைமைக்கும் காரணம் இனி நான் யாருடன் கூடி வாழ்வது? எனக்கு இளமை உணர்ச்சி இல் லையா? எனக்கு சாதியைப்பற்றியும், எனது பெற்றோர் களைப்பற்றியும் எனது பாவிய மனப் புருஷனைப்பற்றியும் இனிமேல் கவலையில்லை. நான் உன்னை மெய்யாகவே காத லிக்கிறேன். காதலுக்கு முன் சாதியேது? மதம் ஏது? நீ என்ன கூறுகிறாய்? நீயும் வெறுத்தால் இதோ இப்பொழுதே சாகப்போகிறேன்" என்று தோட்டத்திற்கு ஓடினாள் லெட்சுமி.

லெட்சுமியைப் பின்தொடர்ந்துபோய்'வேண்டாம்வேண் டாம்சாதவேண்டாம்'என்றுவழிமறித்தான்சுந்தரம்.லெட்சுமி

யால் காதல் பதை பதைப்பைத் தாங்க முடியவில்லை. "எனது சாக்காட்டைத் தடுத்தாட் கொள்ளவந்த சுந்தரா" என்று கூறி சுந்தரத்தைத் கட்டிப்பிடித்தாள். பலகால் மலர் கொடுத்த அவன்தனையப் பலமுறை முத்தமிட்டாள். அவன் பயத்தை போக்கினாள். "காதல் காதல் இன்றேல் நம்மிருவரும் சாதல் உறுதி" என்று கிளிமொழியாள் பகர்ந்திட்டாள். பின்னிரு வரும் காதல் கடலில் மூழ்கி வீட்டிற்குள் புகுந்தார்கள்.

லெட்சுமி என்ன தைரியம் கூறினாலும் சுந்தரத்தின் பயமும், குழப்பமும் நீங்க வில்லை. சுந்தரத்திற்கு லெட்சுமி மேலும் தைரியம் கூறுகிறாள். "நீ பயப்பட வேண்டாம். நாம் இருவரும் எங்காகிலும் கூலிவேலை செய்து பிழைப்போம். எனது பெற்றோர்கள் கவலையும் இன்றோடு என்னோடு ஒழியட்டும். ஜாதியும், மதமும், பந்தக்கள் பாசமும் இனி எனக்கு இல்லை. சகலமும் நீயே. வாழ்ந்திடில் இருவரும் வாழ்வோம். மடிந்திடில் இருவரும் மடிவோம் இது உறுதி" என்று கூறினாள் லெட்சுமி. பிறகு சுந்தரம் ஒரு வாறு மனத்தினை தெளிவடைந்தான்.

லெட்சுமியும் சுந்தரமும் சில மணித்தியாலத்தில் சிறந்த காதலர்களாகி விட்டார்கள். காதல் களிப்பில் சரசசல்லாபமாகப் பேசியும், கொஞ்சியும், குலாவியும், மகிழ்ச்சிபோடு மெத்தை மீது விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

இச்சமயத்தில் லெட்சுமியின் பெற்றோர்கள் ராமாயண காலட்சேபம் கேட்டுவிட்டு வாசல் முன்வந்து நின்றுகொண்டு கதவைத் தட்டினார்கள். காதற்கிளிகளிரண்டிற்கும் கதவு தட்டும் சப்தம் கேட்கவில்லை. காதற்களியாட்டங்களும் கொஞ்சுங்கிளி மொழி லெட்சுமியின் காதல் இன்பப் பேச்சும் வெளியில் நிற்கும் லெட்சுமியின் பெற்றோர்கள் காதில் படுகின்றன. காதலர்களிருவரும் பயம், பழி, ஜாதி யாவையும் மறந்து இன்பத்தில் திகழ்ந்தார்கள். வெளிக் கதவு திடீர் திடீரென்று பலமாகத் தட்டப்பட்ட சப்தம் காதலர்கள்காதில் கேட்டது. அப்பொழுது தான் லெட்சுமியின் பெற்றோர்கள் ராமாயணக் காலட்சேபத்திற்குப் போய்விட்டு வந்து கதவு தட்டுகிறார்கள் என்ற உணர்ச்சி எற்பட்டது. லெட்சுமி துணிவுடன் கதவைத் திறக்க எழுந்தாள். சுந்தரம் "நான் தோட்டத்து குடிசைக்குள் போய் விடுகிறேன். பிறகு கதவைத் திறக்கலாம்" என்று கூறினான். "இனியும் பயமா?"

என்று கூறிக்கொண்டு வெளியில் போய் வெளிக்கதவைத் திறந்தான் லெட்சுமி. லெட்சுமியின் பெற்றோர்கள் "ஏண்டியம்மாகன்றாகத்துங்கிவிட்டாயா?" என்றுகேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தார்கள். அங்கே சுந்தரம் காதல் கோபத்துடன் நிற்பதையும் தனது மகள் லெட்சுமி ஒரு மாதினியாக இருப்பதையும் பார்த்தார்கள். லெட்சுமியின் தாய் தந்தையர்கள். ஓருவாறு விஷயத்தை உணர்ந்து கொண்டு விட்டார்கள். உடனே சுந்தரத்தின்மீது கோபாவேசமாகப் பாயத்தொடங்கினார்கள். லெட்சுமியின் தாயார் "அடி மொட்டச்சி அடே கட்டேலே போறவனே" என்று ஏசத் தொடங்கி விட்டாள். லெட்சுமி தனது பெற்றோர்களிடம், கடந்த காரியங்கட்குத் தானே பெறுப்பாளியென்றும், வயது வந்த ஓருபெண் தனது மனதுக்கொத்த சுந்தரத்தைக் காதலிப்பது குற்றமா? என்றும் கேட்க ஆரம்பித்தாள். தனது பெற்றோர்களிடம் லெட்சுமி எக்காரணம் கொண்டும் தனது காதலன் சுந்தரத்தை மிரட்டித் துன்புறுத்தக் கூடாதென்று எச்சரித்தாள். "நான்தான் சுந்தரத்தை விரும்பிக் காதலித்தேன். நீங்கள் நான் விரும்பாத பால்ய வயதில் ஓரு எம். எ. பட்டதாரிக்கு 20000ரூபாய் கொடுத்து என்னை பொம்மைக் கல்யாணம் செய்து கொடுத்தீர்கள். அந்த நன்றிகெட்டவன் என்னுடன் வாழ இனியும் ரூ. 5000ம் கேட்கின்றான். என்னை மணந்ததாக நீங்கள் கூறும் என் புருஷன் விஜயை கோகிலத்துடன் காதல் வாழ்க்கை கள்ளத் தனமாக நடத்துகிறான். அந்த நன்றி கெட்ட மனிதனோடு இனி நான் எப்படி வாழ்வது? எனக்குக் காதல் உணர்ச்சியில்லையா? நான்கல்லா? மண்ணா? இரும்பா? மனித விருப்புணர்ச்சி உடையவள் தானே. வரதக்ஷணை கொடுத்து காதலன் (புருஷன்) தேடும் சமூகம் ஓரு சமூகமா? காதல் முன் ஜாதி எது? மதம் எது? வரதக்ஷணை எது? எனது பெற்றோர்களாகிய உங்களுக்கு எனது நடத்தை அவமானமாக யிருந்தால் எங்களை வெளியே அனுப்பிவிடுங்கள். எனக்காக நீங்கள் இனியும் கடன் பட்டு அந்த நன்றிகெட்ட வனுக்கு ரூபாய் 5000 அனுப்பி வைத்து அவனுடன் நான் வாழ்வே[illegible] என்று எதிர்பார்க்கவேண்டாம். அவன் தலி விதவை கோகிலத்துடனே வாழட்டும். நான் சுந்தரத்துடன் தான் வாழ்வேன். சுந்தரமே எனது ஆருயிர். சுந்தரமே எனது உண்மைக் காதலன்" என்று முழங்கினாள் இனிமொழியாள்.

லெட்சுமியின் பெற்றோர்களுக்கு ஒன்றும் பேச நாவெழுவில்லை. தனது புதல்வி தனது தோட்ட வேலைக்காரனை நேசித்தாளே என்ற ஆத்திரம் ஒரு பக்கம், தனது குடும்பத்திற்கும் பார்ப்பன சமூகத்திற்கும் பெரும்பழியை தனது மகள் உண்டாக்கி விட்டாள் என்ற பயமும் கவலையும் மற்றொரு பக்கம். இவ்வித குழப்பத்தோடு தனது புதல்வியையும் சுந்தரத்தையும் வீட்டை விட்டு வெளியே போய்விடும்படி கண்டிப்பாக உத்திரவு போட்டார்கள். காதலர்களிருவரும் களிப்புடன் அச்சம் நீங்கி விடுதலையுடன் வெளிப்பட்டார்கள். பொழுது விடிந்தது. எங்கும் இதே பேச்சு. லெட்சுமியின் பெற்றோர்கள் வெளியில்வருவதேயில்லை.

தனது புதல்வியின் பிரிவாற்றாமையாலும் தங்கள் குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் அவமானம் ஏற்பட்டு விட்டதென்ற கவலை மேலீட்டாலும் லெட்சுமி பிரிந்த சில மாதங்களில் லெட்சுமியின் பெற்றோர்கள் வரதக்ஷணைக் கொடுமை நிறைந்த இவ்வுலக வாழ்வை வெறுத்து சோதியில் கலந்து சாம்பலானார்கள். லெட்சுமியும் சுந்தரமும் சீர்திருத்த முறைப்படி கலப்பு மணம் செய்துகொண்டு களிப்புடன் வெளிப்படையாக வாழ்க்கை நடத்தத் துணிந்துவிட்டார்கள். லெட்சுமியைப் பொம்மைக் கலியாணம் செய்து கொண்டு ஆயிரக்கணக்கான ரூபாய் வரதக்ஷணை பெற்ற எம். ஏ. பட்டதாரி கோபாலய்யங்கார் விதவை கோகிலத்தோடு கள்ளத்தட்பாக இருக்கும் ரகசியமும் ஊருக்குள் வெளியாயிற்று. அவர்களிருவரும் ஊர் பழிப்புக்கும், சமூகத் தூற்றுதலுக்கும் அஞ்சி வெளியூர் புறப்படவேண்டிதாயிற்று. இவர்களிருவரும் விதவா விவாகம் செய்து கொண்டு இப்பொழுது வெளிப்படையாக வாழ்கின்றார்கள். சாதி சமூகச் சட்டம் உடைபட்டது. காதலுக்கு சாதியுமில்லை மதமுமில்லை என்பது உறுதியாயிற்று: பொம்மைக் கல்யாணம் ஒழியும் காலம் வந்தது. வரதக்ஷணைக் கொடுமையும், பால்ய மணக் கொடுமையும் ஒழியட்டும், விதவைகள் மறுமண உணர்ச்சி ங்கும் பெருகட்டும் என்பதே இப்போது எங்கும் பேச்சு.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

கடவுளும் மதமும்.

(ஈ. வெ. ரா.)

சுயமரியாதை இயக்கம் நாட்டில் பாவ ஆரம்பித்த பிறகு அதிலும் அவசியக்கம் நாட்டில் சற்று செல்வாக்கு பெறத் தொடங்கியபின்பு, மக்களுக்குள் தானாகவே, ஒருவித குழப்ப உணர்ச்சி தோன்றி இருப்பதை நாம் நன்றாய் உணர்ந்து வருகின்றோம். அதோடு கூட பார்ப்பனர்களும் பார்ப்பனரல்லாதார்களில் அரசியல், தேசியம் ஆகியவைகளின் பேரால் பிழைக்கும் பிழைப்புக்காரர்களும், சமயம், புராணம், பிரசங்கம் ஆகியவைகளின் பேரால் பிழைக்கும் பிழைப்புக்காரர்களும், இவ்வியக்கத்தை எதிர்க்கக் கடவுளையும், மதத்தையும் பற்றிய பொதுமக்களின் குழப்பத்தைத் தங்களுக்கு ஆதாரமாய்வைத்துக்கொண்டும் மற்றும் திரித்தும் திக்கொண்டும், விஷமப்பிரசாரம் செய்து வருவதனாலும், நமது இயக்கத்தில் உண்மையான பற்றுக்கொண்ட உண்மை நண்பர்களிற் சிலர் இவ்விஷமப் பிரசாரத்தைக்கண்டு பயப்படுவதாகத் தெரிவதாலும், மற்றும் சில பெரியோர்களும், சமய சம்மந்தமாக மனத்துடிப்புக் கொள்வதாலும், நமது நிலையையும், கடவுள், மதம் என்பதுபற்றி நாம் கொண்டுள்ள கருத்தின் நிலையையும் சற்று விளக்கிவிட வேண்டுமென்பதாகக் கருதி இக்கட்டுரை எழுதப்புகுந்தோம். இவைகளைப்பற்றி இதற்கு முன்னும் பலதடவை பேசியும், எழுதியுமிருக்கின்றோம். ஆயினும் அவைகளைவிட இது சற்று தெளிவாக இருக்கலாம் என்கின்ற எண்ணத்தின் மீதே இதை எழுதுகின்றோம். வாசகர்கள் தயவுசெய்து இதைச்சற்று நிதானமாகவும், கவனமாகவும் படித்துப் பார்க்கும்படி வேண்டுகின்றோம். இந்தக் கட்டுரையானது இதே தலைப்பின்கீழ் திருநெல்வேலி ஜில்லா இரண்டாவது சுயமரியாதை மகாநாட்டின் முடிவுரையின் போது நம்மால் எடுத்துச் சொல்லப்பட்டதை அனுசரித்தும், சில நண்பர்கள் அதை விளக்கி எழும்படி சொன்னதை ஆதரித்தும் எழுதப்பட்டதாகும்.

முதலாவதாக, நமக்குக் கடவுளைப்பற்றியாவது, மதத்தைப் பற்றியாவது சிறிதும் கவலை இல்லை என்பதாகவும், கஷ்டப் படும் மக்களின் துன்பம் நீங்கி அவர்களுக்கு அறிவு, ஆற்றல், இன்பம் ஆகியவைகளில் உள்ள கட்டுப்பாட்டை உடைத்து, விடு தலையை உண்டாக்கவேண்டும் என்பதே முக்கிய கவலை என்ப தாகவும் அநேக தடவைகளில் வெளியிட்டிருக்கிறோம். அதுவும் பலர் நம்முடைய இம்முயற்சியில் கடவுளையும், மதத்தையும், கொண்டுவந்து குறுக்கே போட்டு விட்டதால்தான் நாம் அதைப் பற்றி ஆராய்ச்சி செய்யவேண்டியதாயிற்றே ழியஉண்மையில் கடவுளையும், மதத்தைப்பற்றி பேசவேண்டும் என்கின்ற அவசி யத்தையோ, ஆசையையோ கொண்டு நாம் அதில் பிரவேசிக்க வில்லை. அதுபோலவேதான் சைவ சமயத்தைப்பற்றியும் நாம் பேச வேண்டிய அவசியம் ஏற்பட்டதும் என்போம். எப்படி யெனில் சில சைவத்தலைவர்கள் நமக்கு எதிராகத் தம்மால் கூடிய சூழ்ச்சிகள் எல்லாம் செய்து பார்த்தும் ஒன்றிலும் பயன் பெறாததால் கடைசியாகச் சமயமென்றும், சமயப்பெரியாரென றும் கூறிக்கொண்டு அவ்வார்த்தைகளையே தமது ஆயுதமாகவும் சமய சம்மந்தமான சில பைத்தியகாரர்களைத் தமக்குப்படையாக வும் வைத்துக்கொண்டு அவர்களைத் தெருவில் இழுத்து நம்மீது உசுப்படுத்திவிட்டுச் சூழ்ச்சிப்போர் தொடுக்க ஆரம்பித்ததின் பல னாய் சைவசமயம் என்பதும் சமயாச்சாரியார்கள் என்பவர்களும் சந்திக்கு வாவேண்டி நேர்ந்தபோது சைவப் பெரியார்கள் என் பவர்களின் சாயமும் வெளுக்கவேண்டியதாய் விட்டது.

இன்றையத்தினம் பெரிய புராணம், திருவிளையாடற் புரா ணம், ராமாயணம், பாரதம் ஆகியவைகளிலுள்ள கதைகளை நம்பி முக்கிய கதாநாயகர்களைக் கடவுள்களாக மதித்து வணக் கம், பூஜை, உற்சவம் செய்ய எவனெவன் சம்மதிக்கின்றானோ அவன் மாத்திரமே கடவுள் நம்பிக்கையுள், சமயப்பற்றும் கொண் டவன் என்றும், மற்றவர்கள் நாத்திகர்கள்—சமயத் துரோகிக ளெனவும் தீர்மானிக்கப்பட்டு, அதுவே முடிந்த முடிவாகவும் சொல்லப்பட்டு விட்டது. இது எப்படி இருந்தபோதிலும், கட வுள், மதம் என்பது என்னவென்பது பற்றியும், இவை எப்படி உண்டாயின என்பதுபற்றியும, இவற்றை உண்டாக்கியவர்கள் கெட்ட எண்ணத்தோடு உண்டாக்கினார்களா? அல்லது நல்ல எண்ணத்தோடு உண்டாக்கினார்களா? அல்லது அறியாமையினா லுண்டாக்கினார்களா? என்பவைகளைப்பற்றியும், இவற்றில் நமது—அதாவது மக்கள்—கடமை என்ன என்பதுபற்றியும் சற்று ஆலோசித்துப்பார்க்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். அதைப்

பற்றி முதலாவதாக இங்கு குணம், உருவம், பெயர் அற்ற தன்மைகளுடைய கடவுள் என்பதைப்பற்றியும், மக்களின் வாழ்க்கை நலத்திற்காக ஏற்படுத்தப்பட்ட கொள்கைகள்தான் மதம் என்று சொல்லப்படும் மதத்தைப்பற்றியுமே இங்கு விவரிக்க கருதியுள்ளோமே தவிர, மற்றபடி பல கடவுள்களின் தன்மையையும், மதப்பிரிவுகளான கிறிஸ்தவ, இஸ்லாமிய, ஜைன, பௌத்த, சீக்கிய, சைவ, வைணவ, ஸ்மார்த்த, சாக்கிய, வாம முதலிய பல உள் மதங்களைப்பற்றியும் நாம் இங்கு தனித்தனியாகப் பிரஸ்தாபிக்க உத்தேசமில்லை. எனெனில், அவற்றிற்கு ஏற்கனவே மறுப்புகள் தாராளமாய் வெளிப்பட்டு ஒருவருக்கொருவர் பதில் சொல்ல முடியாமல் தத்துவார்த்தம் என்கின்றதற்குள் அடைக்கலம் புகுந்தும், நம்பித்தான் ஆகவேண்டும் என்கின்ற நிர்ப்பந்தத்திற்குள் புகுந்துமேதான் ஒவ்வொருவரும் அவரவர்கள் கடவுளையோ, கடவுள் தூதர்களையோ, அவதாரங்களையோ, சமயங்களையோ, சமயாச்சாரியர்களையோ காப்பாற்றிக்கொள்ள முடிந்ததேயொழிய அறிவின்மீதோ, நியாயத்தின்மீதோ நிலை நிறுத்த முடியாமற் போய்விட்ட விஷயம் உலகமறிந்ததாகும். ஆதலால் இக்கட்டுரையில் நாம் அவற்றில் பிரவேசிக்கவில்லை.

முதலாவது மக்களுக்குக் கடவுள் எப்பொழுது? எப்படி? ஏற்பட்டது என்பதைப்பற்றி ஆராய்வோம். மனிதன் பிறந்து வளர்ந்து நினைக்கப்பட்ட பிறகுதான் கடவுள் என்கின்ற ஒரு வஸ்து நிச்சயம் செய்யப்பட்டு இருக்கவேண்டும். இதை யாரும் மறுக்க முடியாது. எனெனில் இப்போதுகூட மக்களுக்குப்பிறர் சொல்லிக்கொடுத்தபிறகுதான் கடவுள்என்கின்ற பேச்சும்நினைப்பும் ஏற்படுகின்றனவே தவிர தானாக ஏற்படுவதில்லை. எப்படியெனில் சிறு குழந்தைகளை நாம் கட்கத்தில் இடுக்கிக் கொண்டு ஒரு உருவத்தைதயோ, வஸ்துவையோ காட்டி சாமி என்றும், அதை கைகூப்பிக் கும்பிடு என்றும் சொல்லிக் கொடுத்த பிறகே, குழந்தை சாமியைக் கும்பிட அறிகின்றது. அதுபோல, ஆதியிலும் மனிதன் பிறந்த பிறகுதான் அவன் மனதிற்குக் கடவுள் நினைப்புத் தோன்றியிருக்க வேண்டும்- அது எப்படி என்றும், எப்போதென்றும் பார்ப்போமானால் சாதாரணமாக மனிதனுக்கு அறிவுவளர்ச்சியும் ஆராய்ச்சி வளர்ச்சியும் இல்லாத காலத்தில்தான் கடவுள் நினைப்புத் தோன்றி இருக்க வேண்டும். கடவுள் என்பது-கடவுள், தெய்வம், அல்லா, காட் என்ற தமிழ், சமஸ்கிருதம், அரபி, ஆங்கிலம் முதலிய பலபாஷைகளில் பல சொற்களாக இருந்தாலும் குறியில்-அர்த்தத்தில் உலகத் தோற்றத்திற்கும், நடப்பிற்கும், அழிவிற்

கும் காரணமாகிய ஒரு சக்தியையே குறிப்பிடுவதாகவும், அதாவது சிலால் இயற்கை என்று சொல்லப்படுமானால், அவ்வியற்கையின் இயங்குதலுக்கும், பஞ்சபூதக்கூட்டு என்று சொல்லப்படுமானால் அக்கூட்டின் சேர்க்கைக்கும் எதாவது ஒரு சக்தி இருந்துதானே ஆகவேண்டும் என்பதாகவும், அந்த சக்தி தான் கடவுள், எல்லாம் வல்ல ஆண்டவன், அல்லா, காட் என்று சொல்லப்படுகிறதென்று சொல்வதானாலும், அந்த சக்தி என்னும் கடவுளே எப்படி மக்கள் மனதிற்கு வந்தார் என்பதுதான் இங்கு விசாரிக்கத்தக்கதாயிருக்கின்றது. ஆகவே அந்த சக்தி மனிதனுக்குத் தோன்றிய காலம் எது என்பதாகவும், அது நம் நாட்டைப் பொறுத்தவரை எப்படியிருந்தது என்பதாகவும் பார்க்க வேண்டுமானால், நம் நாட்டிலுள்ள கடவுள்களைக் கொண்டுதான் அதைத் தாராளமாய் உணர முடியும். அதாவது இப்போது நமது நாட்டிலுள்ள கடவுள்கள் எனையென்றால் பூமி, மலை, காற்று, நெருப்பு, நதி, சூரியன், சந்திரன், நட்சத்திரம், மழை, இடி, மின்னல், மேகம், நோய்கள், பயங்காமான மிருகங்கள் ஆகியவைகளெல்லாம் கடவுளாகக் கருதப்படுகின்றன. இவைகளெல்லாம் இவற்றின் உண்மையை அறிய ஆற்றல் இல்லாத காலத்தில் கடவுளென்று ஒப்புக்கொள்ளப்பட்டவைகள். அதிலும் இமயமலையே கைலையங்கிரியாகவும், அதுவும் வெள்ளி மலையாகவும், அங்கு கடவுள் இருப்பதாகவும், அங்கிருந்து வரும் நீர் அம்மலையிலுள்ள கடவுளின் தலைப்பிலிருந்து வருவதாகவும், கருதப்பட்டதோடு இமயமலைக்கு அப்பால் ஒருநாடும் கண்டுபிடிக்க முடியாதிருந்ததற்கும், மேல்நாட்டை மேல் லோகமென்றும், கீழ்நாட்டை பாதாள லோகம், நாகலோகம் என்றும் இப்படிப் பலவாறாகக் கடவுள் தன்மையைச்சொன்னதற்கும் காரணமென்னவென்று பார்க்கும்போது அவற்றின் உண்மையை அறிய முடியாததாலேயே அவைகளைக் கடவுளென்றும், அவற்றின் இயங்குதலைக் கடவுள் சக்தி என்றும் சொல்ல வேண்டிய அவசியம் தானாகவே ஏற்பட்டது. இப்போதும் மனிதன் தன்னால் முடிந்தவைகள் போக முடியாதவைகளுக்கே கடவுள் சக்தி என்று சொல்லிவிடுகின்றான், உதாரணமாக, சிறு குழந்தைகள் ஒரு ஜாலவேடிக்கைக்காரனுடைய செய்கையை மந்திர சக்தி என்றும், தெய்வ சக்தி என்றும், உபாசனா சக்தி என்றும், குட்டிச்சாத்தான் என்றும் கருதுகிறார்கள். சிறுவனாயிருக்கும் பொழுது நாமும் அப்படியே கருதியிருந்தோம். இப்போது அறிவு வளர்ச்சிபெற்றபின் அந்த ஜால வேடிக்கைகளை மந்திர சக்தி என்று எண்ணாமல் தந்திரம், கைத்திறம் என்று சொல்லுகின்றோம். மற்றும் அந்தஜாலவேடிக்

கைக்காான்செய்யும் ஜாலத்தின்வழி இன்னதென்றுமக்குத்தெரி யாவிட்டாலும்கூடநாம் ஆயற்றை ஒருகாலமும்மந்திர சக்தியென் றோ, தெய்வசக்தி என்றோ சொல்லாமல் "இது ஏதோ தந்திரம் தானே ஒழிய வேறில்லை; ஆனால் அது இன்னதுஎன்று கண்டுபிடிக்க நம்மால் முடியவில்லை' என்று சொல்லிவிடு கிறோம். எனவே ஒரே காரியம் நமக்கே ஒரு காலத்தில் மந்திர மாகவும், தெய்வ சக்தியாகவும் தோன்றியது. பிறகு அது தந்திரம் என்று தோன்றக் காரணம் என்னவென்றால், அதன் அறிவு வளர்ச்சியும், ஆராய்ச்சியின் பலனுமேயாகும். அதன் போலவே நமக்கு இப்போது தெய்வ சக்தி, கடவுள் சக்தி என்று தோன்றுகின்ற காரியமெல்லாம் மேல் நாட்டாருக்குக் கடவுள் சக்தி என்று தோன்றுவதில்லை. உதாரணமாக, சூரிய சந்திர கிரகணம் இன்னது என்று கண்டுபிடிக்கமுடியாத காலத்தில் நாம் அவைகளுக்கு ஒரு தெய்வ சக்தியைக் கண்டுபிடித்து, சூரியன் என்கின்ற தெய்வத்தை ராகு என்கின்ற பாம்பு பிடிப்ப தாகவும், அது சூரியன் என்கின்ற கடவுளுக்கு ஏற்பட்ட சாபம் என்றும் சொல்லி, அச்சாபம் தீர நாம் மந்திரங்கள் ஜெபித்து அத்தோஷம் தீர ஸ்நானமும் செய்துவருகின்றோம். இது வானசாஸ்திரம் தெரியாத காலத்தில் ஏற்படுத்திக்கொண்ட கருத் தாகும். இப்போது வானசாஸ்திரம் தெரிந்தவர்கள் பூமி, சூரியன், இவற்றின் இயங்குதல், அதன் கால் அளவு ஆகியவை களைக் கண்டு பிடித்த பின், சூரியனைப் பாம்பு கடிப்பதில்லை என்பதையும் ஒருவாறு நன்றாய் உணருகின்றோம். அது போலவே எங்கிருந்து எப்படி மழைத்தண்ணீர் வருகின்றதென் பது தெரிந்தவுடன் நதிக்கடவுளும், மேகக் கடவுளும் வர்ண பகவானும் சிறிது சிறிதாக நம் மனதைவிட்டு மறைந்தோடங்கி விட்டன. அதுபோலவே வியாதிகள் எப்படி வருகின்றன என்கின்றதான சுகாதார ஆராய்ச்சியும், உடற்கூறு ஆராய்ச்சியும் நமக்குத் தெரியப் புறப்பட்ட பின்பு பேதி, மாரி, அம்மை முதலிய தெய்வங்களின் உணர்ச்சியும் மதிப்பும் சிறிது சிறிதாக மறையத் தலைப்பட்டன. இதுபோலவே காற்று, கருப்பு, பேய் முதலிய வைகளும் மறைந்து வருகின்றன. துப்பாக்கி, பீரங்கி முதலிய ஆயுதங்கள் கண்டுபிடித்தபின் யானை, புலி, சிங்கம் முதலிய தெய்வங்களைப் பற்றிய பயமும் மறைய ஆரம்பித்துவிட்டன. இந்த முறையில் இனியும் நமக்குள் மீதியிருக்கும் கடவுள் உணர்ச் சிகள் எவை என்று பார்ப்போமானால் காரண காரியம், ஆதார ரம் முதலிய விவரங்கள் கண்டுபிடிக்க முடியாதவைகளையே கடவுள் செயல் என்றும், கடவுள் சக்தி என்றும் சொல்லிவரு

கின்றோம். இவைகளும் காலுக்குகாள் மனிதன் அறிவு வளர்ச்சியும் ஆராய்ச்சியும் முதிர முதிர மறைந்துகொண்டேதான் வரும். மேலும் இப்போது ஒருவருக்குக் கடவுள் சக்தி என்று தோன்றப்படும் காரியங்கள் மற்றொருவருக்குக் கடவுள் சக்தினன்று தோன்றப்படாமலிருப்பதையும் பார்க்கின்றோம். அது அவ்வொருவருடைய அறிவு, ஆராய்ச்சி ஆகியவற்றின் வித்தியாசமேயாகும்.

இப்போதும் நம் மனதிற்கு எட்டாத காரியங்களை மேனாட்டார் செய்யும்போது நாம் அதிசயப்பட்டாலும் அதை மந்திர சக்தி என்று நாம் சொல்லத் துணிவதில்லை. இந்த அளவுக்கு விஞ்ஞானியம் பெற்றுவிட்டோமென்றாலும் நமக்குப் பூரண அறிவும் ஆராய்ச்சி முடிவும் ஏற்படும்வரை கடவுள் உணர்ச்சி நமனை விட்டு விலக முடியாது. அன்றியும், வாழ்க்கையின் பரிதாபமடையாதவர்களுக்குக் கடவுள் உணர்ச்சி சிறிது காலம் வரை இருந்தே தீரவேண்டியதாயுமிருக்கின்றது. அதாவது கஷ்டப்பட்டு ஏமாற்றமடைந்தவனுக்கும் ஈடுசெய்ய முடியாத நஷ்டமடைந்தவனுக்கும் கடவுள் செயல் என்பதை சொல்லித்தான் ஆறுதலையும் திருப்தியையும் அடையச்செய்யவேண்டியிருக்கின்றது. நல்ல அறிவும் ஆராய்ச்சியும் உடையவர்களும் தங்களுக்கு காரணகாரியம் எட்டாத இடத்திலும், ஈடுசெய்ய முடியாத இடத்திலும் கடவுள் செயல் என்பதைக் கொண்டுதான் திருப்தி அடைகின்றார்கள். அப்போது தங்கள் அறிவுக்குமேல் ஒன்று இருப்பதை எண்ணித்தீர வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். ஆனால் உறுதியான பக்குவமடைந்தவர்கள் எந்த விஷயத்திற்கும் தங்களுக்குத் தெரிந்த காரணத்தைக்கொண்டு சமாதான மடைவதுமன்றி தெரியாததாயிருந்தால் நமக்கு எட்டவில்லை என்றோ அல்லது இதுதான் இயற்கை என்றோ கருதி திருப்தியடைவதுமாய் இருக்கின்றார்கள். எனவே சாதாரண மக்களின் கடவுளுக்கும், சற்று அறிவுடைய மக்களின் கடவுளுக்கும், ஆராய்ச்சிக்காரர்களின் கடவுளுக்கும், பக்குவமடைந்தவர்கள் எண்ணத்திறகும் வித்தியாசங்களுண்டு. ஒருவருக்கொருவர் கடவுள் வணக்கத்திலும் கடவுள்மீது சுமத்தும் பொறுப்பிலும் வித்தியாசங்களுண்டு.

கடவுள் என்கின்ற உணர்ச்சி மக்களுக்கு எப்போது எப்படி உண்டாயிற்று என்பதைப்பற்றியும், அவ்வுணர்ச்சி மக்களுக்கு எதுவரையும் இருக்கமுடியும் என்பதைப்பற்றியும் சுருக்கமாக

இதன் முன்னர் எழுதி இருந்தோம். அதாவது மனிதன் உலகத் தோற்றத்திற்கும், நடப்பிற்கும், சம்பவங்களுக்கும் காரணம் கண்டுபிடிக்க முடியாத நிலையில் கடவுள் சக்தி என்றும், கடவுள் செயல் என்றும் நினைத்துக்கொள்ளுவதும், உதாரணமாக அவற்றிற்குக் காரணகாரியம் தோன்றிய பின்பு அந்நினைப்பு கொஞ்சம் கொஞ்சமாக மாறிவிடுவதும் சகஜம் என்பதாகக் குறிப்பிட்டு இருக்கிறோம். இந்த முறையிலேதான் கொஞ்ச காலத்திற்கு முன் அநேக விஷயங்களை கடவுள் செயல் என்று எண்ணியிருந்த மக்கள், விஞ்ஞான (சையன்ஸ்) ஆராய்ச்சி ஏற்பட்ட பிறகு, அவ்வெண்ணத்தை மாற்றிக்கொண்டு அநேக விஷயங்களை மனிதன் செயல் என்று சொல்லத் தைரியம் கொண்டு விட்டார்கள். உதாரணமாக கம்பியில்லாத் தந்தி விஷயத்தை எடுத்துக்கொள்ளுவோம். கம்பியில்லாத் தந்தி ஏற்படுத்தியிருக்கும் விஷயமும், அது எப்படி செய்யப்படுவது என்கின்ற சையன்ஸ் உணர்ச்சியும் நமக்குத் தெரியாமல் இருக்குமானால் நாம் இன்னமும் அதை "ஒரு தெய்வீக சக்தி" என்றும், பழைய காலத்து ரிஷிகள் பேசிக்கொண்டிருந்ததாய்ச் சொல்லப்படும் "ஞான திருஷ்டி சம்பாஷணை" என்றுமே சொல்லித்தீருவோம். ஆதலால் மக்களுக்கு அறிவும் ஆராய்ச்சியும் வளர வளர கடவுள் உணர்ச்சியின் அளவு குறைந்துகொண்டே போகும் என்பது நிச்சயம். அதுபோலவே அறிவும் ஆராய்ச்சியும் குறையக் குறைய கடவுள் உணர்ச்சி வளர்ந்து கொண்டேவரும் என்பதையும் நினைப்புக்கொண்டாகவேண்டும். இப்போதும் பகுத்தறிவு குறைந்த மக்களிடமேதான் அநேகமாக தொட்டதற்கெல்லாம் கடவுளும் அவர் தம் செயல்களும் தாண்டவமாடுவதைப் பார்க்கின்றோம். அவர்கள் மேலேயே "கடவுள் வருவதை"க்கூட பார்க்கின்றோம் காட்டுமிராண்டிப் பக்குவமுடையவர்களிடமே அநேகமாக கடவுளைப்பற்றிய கதைகள் என்பவைகளும், புராணங்கள் என்பவைகளும் மதிப்புப்பெற்று இருப்பதையும் பார்க்கின்றோம்.

கொஞ்ச காலத்திற்கு முன் அக்கதைகளை அப்படியே அதாவது கடவுள் சக்தியில் நடைபெற்றது என்று நம்பிக் கொண்டிருந்தவர்கள்கூட இப்போது அப்படியே நம்புவதற்கு வெட்கப்பட்டுக் கொண்டு தங்களுக்குள்ள அறிவு வளர்ச்சியில் நாத்தன்மையை மறைத்துக்கொண்டு சையன்சின் மூலம் அக் கதைகளை மெய்ப்பிக்க முயற்சி எடுத்துக்கொண்டு கஷ்டப்படுகின்றார்கள்.

இதிலிருந்து என்ன ஏற்படுகின்றதென்றால், மக்கள் வாவா இப்போது சையன்சுக்குப் பொருத்தமில்லாததை ஏற்க மறுக்கத்

கூடிய நிலைமைக்கு வந்து கொண்டிருக்கிறார்கள் என்பது விளங்குகின்றது. மழையை வரச்செய்வதும், செத்தவனை மறுபடியும் பிழைக்கச் செய்வதும், பேச்சுகளையும் நாட்டியங்களையும் யந்திரங்களில் பிடித்துக்காட்டுவதும் போன்ற காரியங்கள் மனிதனால் செய்யக்கூடும் என்கின்ற நிலை ஏற்பட்ட பிறகு, மிக்கப் பாமர ஜனங்களுக்குக் கூட இவையெல்லாம் கடவுள் செயல் என்கின்ற குருட்டு நம்பிக்கை குறைந்து வருவதில் ஆச்சரியமொன்றுமில்லை. எனவே ஒரு காலத்தில் அறிவு வளர்ச்சியும் ஆராய்ச்சிக் கவலையும் இல்லாதபோது ஏற்பட்ட கடவுள் சம்மந்தமான எண்ணங்கள் இனியும் இருந்துதான் தீரவேண்டுமா என்றால் அது இருந்துதான் வருகின்றது, எப்படியும் அது ஒரு அளவுக்காவது—கொஞ்சமாவது இருந்து வரக்கூடும் என்றே சொல்லுவோம்.

எனெனில் மனிதன், தான் எல்லாம் அறிந்தவன் என்கின்ற ஆணவத்தை உடையவனானதால் தன் புத்திக்கு எட்டாததைத் தனக்குத் தெரியவில்லை என்று கண்ணியமாய் ஒப்புக்கொள்ள சுலபத்தில் சம்மதிக்க இஷ்டப்படமாட்டானாகையால், அங்கு—அதாவது தனக்கு அறிவு கட்டையாய்ப் போனபோது அவனுக்குக் கடவுள் நம்பிக்கையும், கடவுள் செயலும் வந்துதான் தீரும். இதை மாற்றுவது சுலபமான காரியமல்ல. பூரண அறிவு வளர்ச்சி பெற்றால்தான் முடியும். அன்றியும், சிலர் உண்மையை அறிந்திருந்தாலும் சுயநலமோ, மூடப்பிடிவாதமோ காரணமாகத் தங்களுக்கே புரியாதவற்றைப் பேசிப் பாமர மக்களை மயக்கிக் கொண்டும் இருப்பார்கள்- எனெனில், மக்களுக்குக் கடவுள் நம்பிக்கை இருப்பதாலேயே அவர்கள் பிழைக்கக் கூடியவர்களாய் இருப்பதினால்தான். எது எப்படி இருந்தபோதிலும் உலகத்தில் கடவுள் சம்மந்தமான குருட்டு நம்பிக்கைக்கு இருந்த மதிப்புக் குறைந்து விட்டதால், கடவுள் உணர்ச்சியும் எப்படியும் மக்களுக்கு வரவர குறைந்து கொண்டுதான் போகும் என்பதில் சந்தேகமில்லை. அதற்காக வருத்தப்படுவதிலோ, யார் மீதாவது குற்றம் சொல்லுவதிலோ பயனில்லை. ஆனால் அவ்விதக் குருட்டு நம்பிக்கையும் மூடப்பிடிவாதமும் ஒழிந்த காலத்தில்தான் உலகத்தில் ஒழுக்கமும், சமத்துவமும், இன்பமும் நிலை பெறும் என்பதுமாத்திரம் உறுதி.

மதம்.

மதம் என்னும் விஷயமும் ஆராயத் தகுந்ததேயாகும். மனிதவர்க்கம் விலங்குகளைப் போல் தனித்தனியே காடுகளில் வாசஞ்

செய்து வந்த நிலைமைமாறி குடிசை கட்டிக் கூடிக் குலாவி வாழ ஆரம்பித்தபோதே அவற்றிற்குச் சில கொள்கைகள் தேவையாகி விட்டது. எப்படி யெனில், எப்படித் தனியே இருக்கும் மக்கள் எதாவது ஒரு பொது நன்மையை உத்தேசித்து, தங்களுக்கென்று ஒரு சங்கத்தை நிறுவினால் உடனே அதற்குக் கொள்கைகள் நிர்ணயிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு விடுகின்றதோ அதேபோல் மனிதர்களின் கூட்டு வாழ்க்கைக்குக் கொள்கைகளை நிர்ணயிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிடுகின்றது. அதேபோல் மனிதர்களின் கூட்டு வாழ்க்கைக்கும் கொள்கைகளைத் தீர்மானிக்கவேண்டியதாகிவிட்டது. அக்கொள்கைகள்தான் இப்போது மதம் எனப்படுவதாக இருக்கிறது. அம்மாதிரியான கொள்கை நிர்ணயங்களை மீறக் கூடாது என்பதற்கு நிபந்தனைகள் ஏற்படுத்தி, அந் நிபந்தனைகளை மீறி நடப்பவர்களைத் தண்டிக்க முடியாத நிலையிலோ, அல்லது தண்டிக்க வேண்டாம் என்று தோன்றிய சமயத்திலோ அல்லது சிலரின் சுயநலத்திற்காகவோ, வேறு விதத்தில் ஏமாற்றி பிழைப்பதற்காக வேண்டியோ அக் கொள்கைகளைக் கடவுள் என்பதுடன் சம்மந்தப்படுத்துவதனால்தான் மக்கள் ஏமாறுவார்கள் என்கின்ற எண்ணமே கொண்டோ, அவற்றைக் "கடவுள் உண்டாக்கினார்" என்றும், அவற்றிற்கு மீறி நடந்தால் "கடவுள் தண்டிப்பார்" என்றும் சொல்லவேண்டியதாய்விட்டது. [இந்த இடந்தான் முதன்முதலாக மனிதன் தவறு செய்த இடமாகும்.] ஆனால் இந்தக் கொள்கைகள் நிர்ணயம் செய்யப்பட்டது எப்படி? எந்த ஆதாரங்களைக்கொண்டு? என்று பார்ப்போமானால் அது அந்தக் காலத்திய நிலைமை, சீதோஷ்ண ஸ்திதி, மக்களின் அறிவு நிலை—அதாவது பாமர மக்களின் அறிவீனம், சிலரின் சூழ்ச்சித்திறம் ஆகிய நிலையில்—அதாவது காலதேச வர்த்தமானத்திற்கு ஏற்பச் செய்யப்பட்டவைகள் என்றே சொல்லவேண்டும். மேலும் ஒரு குறிப்பிட்ட கொள்கை, பிற்கால தேசவர்த்தமானத்திற்கோ, சிலரின் சுயநலத்திற்கோ ஏற்றதாயில்லாவிட்டால், யாராவது அறிஞர், அல்லது தந்திரக்காரர் அதை மாற்ற நினைக்கும்போது பாமர மக்கள் மூடநம்பிக்கையின் பலனாய் தங்கள் பிடிவாதத்தைக் காட்டி மாற்ற சம்மதிக்காத காலத்தில் பிரிந்துபோய் புதிய கொள்கைகளை வகுத்து-அதாவது முன்னையதைத் திருத்தியோ, அல்லது சிலவற்றை மாற்றியோ, அல்லது சில புதிய நூல்களைச் சேர்த்தோ ஏதாவது ஒன்றைச் செய்ய நேரிடும்போது அது ஒரு புதிய மதமாக ஏற்பட்டுவிடுகின்றதும் உண்டு. இதனால் பாமர மக்கள்—அதாவது குருட்டுப் பிடிவாத

மூள்ளவர்கள் "என் மதம் பெரிது" "உன் மதம் சிறிது" என் கின்ற மதச் சண்டைக்கு ஆளாகிவிடவும் நேரிட்டுவிடுகின்றது.

இந்தச் சண்டையில்லாமல் திருத்தப்பாடு செய்யலாமா என்று நினைத்த பெரியோர்கள், அக் கொள்கைகளை மாற்றா மல் பழைய கொள்கைகளுக்கே புதிய வியாக்கியானங்களைச் செய்து திருப்தி செய்ய முயற்சித்து இருக்கின்றார்கள். ஆனா லும் அம் முயற்சிகளின் பலனும் முடிவில் உட்சமயங்களாகவும் சார்[illegible]ளாகவும் மாறிற்றேயொழிய, கொள்கை களின் மூக்கியங்கள் திருத்தப்பட முடியாமலேயே போய்விட் டன. இப்படியேதான் மதங்கள் வெகுகாலமாய் மாறி மாறியும் திரிந்து திரிந்தும் பெருகிக்கொண்டும் வந்தனாலேயே மதங் களின் உண்மைத் தத்துவமும் அவசியமும் அறிவதற்கில்லாமல் போனதோடு அதைஒரு சடங்காகவே கொள்ளவேண்டியதாகியும் விட்டது. இன்றையத்தினம் எந்த மதக்காரனையாவது கண்டு உன் மதம் என்ன? அதன் தத்துவம் என்ன? என்றால் சில சடங்குகளையும் குறிகளையும் மாத்திரம்தான் சொல்லுவானே ஒழிய அதன் உண்மைத் தத்துவம் அதாவது எந்தக் கருத்தைக் கொண்டு ஆதியில் மதத்தை உண்டாக்கினார்களோ அதைக் கூற மாட்டான்; அறிந்திருக்கவுமாட்டான். அதோடு அம் மூலக் கொள்கைக்கு நேர் விரோதமாக அறியாமையும் ஒழுக்கயீனங் களும் புகுந்துவிட்டதன்றி சிலர் அவற்றைத் தங்கள் சுயநலத் திற்கு உபயோகப்படுத்திக்கொள்ளும் கருவியுமாய்விட்டது. சிறப் பாக இப்போதைய முக்கிய மதங்கள் என்று சொல்லப்படுபவை கள் எல்லாம் பாமர மக்களை ஏமாற்றி-கொடுமைப்படுத்தி-பணம் பறித்து, புரோகிதக்கூட்டமும், அரசாங்கமும், செல்வந்தனும்பிழை க்கும்மார்க்கங்களாக இருக்கின்றனவேயன்றி பொதுவாக மனித வர்க்கத்திற்கு எவ்வித பலனும் இல்லாமற்போய்விட்டது. மற் றும் மதத்தினால் ஏற்பட்டுவரும் கெடுதிகள் என்னவென்று பார்ப்போமானால், முதலாவது, மதம் மனிதனின் அறிவையே அடியோடு கெடுத்துவிடுகின்றது. எப்படியெனில் ஒவ்வொரு மதக்காரனும் தனது மதப்படி கடவுள் உண்டு என்று நினைப்ப தோடு, தனது மதத்தைக் கடவுள் உண்டாக்கினார் என்று நம்புவதாகக் காணப்பட்டாலும், மற்றொரு மதக்காரனும் அப் படித்தானே சொல்லுகிறான், ஆதலால் அவர்களுக்கு வேறு மதத்தையும், நமக்கு வேறு மதத்தையுமா கடவுள் செய்திருப் பார்? என்று சிறிதாவது யோசிக்கவோ, அல்லது நம் மதத்தை வையும்படியோ அன்றி ஏற்காதபடியோ அவர் மற்றொரு மதத்தை உண்டாக்கி இருப்பாரா? அப்படியானால் இது ஒன்றுக்

கொன்று மூண்பாடல்லவா? என்று எவருமே நினைப்பதில்லை. எவருமே என்றால், மத ஆச்சாரியார்கள், மத அபிமானிகள் என்பவர்கள் முதலாக எவருமே கருதுவதில்லை.

இந்த ஒரு காரணத்தாலேயே மதம் மக்களின் அறிவை எவ்வளவு தூரம் கெடுத்திருக்கின்றது என்பது விளங்கும். இரண்டாவது, மனிதர்களின் ஒற்றுமைக்குப்பதிலாக மனிதனை மனிதன் பிரித்துக்காட்டவே மதம் உதவுகின்றது. மூன்றாவது, மதமானது மனிதனை வேடத்திலேயே திருப்தியடையச் செய்கின்றதேயொழிய ஒழுக்கத்தில் சிறிதும் கவலை செலுத்த நிர்ப்பந்திப்பதில்லை. நான்காவது, எந்த மதத்திலும் பகுத்தறிவுக்குச் சிறிதும் இடமில்லை. எனென்றால் எவ்வளவு நல்ல மதமானாலும, முதலில் ஏதாவதொன்றை—அதாவது நமது அறிவிற்கும், பஞ்சேந்திரியத்திற்கும் எட்டாததைக் குருட்டுத்தனமாய் நம்பித்தானாகவேண்டுமென்று சொல்லாமலிருப்பதில்லை. அப்படியானால் அம்முறையில் ஒன்றை நம்பிவிட்டு அதே போன்ற மற்றொன்றை நம்பாமலிருப்பதற்குக் காரணமுமில்லை. ஐந்தாவது, மதமானது கடவுளுக்கும் நமக்குமிடையில் தரகர்களை உண்டாக்கி அத்தரகர்களின் நடவடிக்கையையும், வார்த்தையையும், அது எவ்வளவு அசம்பாவிதமானாலும் சொந்த அறிவைவிட, பிரத்தியட்ச அனுபவத்தைவிட மேலானதாக நினைக்கச் செய்கின்றது. அன்றியும் மதமானது பணச் செலவு செய்யும் அளவுக்கு மோட்சமும் பாவமன்னிப்பும் இருப்பதாகவும், எவ்விதக் அக்கிரமங்களுக்கும், வணக்கத்தின் மூலம் மன்னிப்பு இருப்பதாகவும் நம்பச்செய்வதால் மனிதனை அக்கிரமம் செய்யவும், அவ்வாறு செய்வதன் மூலம் பணம் சம்பாதிக்கவும் தூண்டுகின்றது. சோம்பேறிப் பிழைப்புக்குத் தாராளமாய் மதம் இடம் கொடுக்கின்றது.

மதம் மக்களைக் கோழைகளாக்குகின்றது. மதத்தினால் இவ்வளவு ஆபத்துகள் ஏற்பட்டும், உலக சம்பவங்களின் உண்மைக்காரண காரியங்கள் உணர்வதற்கில்லாமல் நிர்ப்பந்தமாய் மக்கள் மதத்தினால் தடுக்கப்படுகின்றார்கள். இவ்வளவும் தவிர, ஒருவனுடைய உழைப்பில் மற்றும் ஒருவனை வாழும்படி செய்கின்றது. நிற்க, உண்மைச் சைவன் என்பவன் ஒருவன் எவ்வளவு ஏழையாக்கியனானாலும் ஒரு துளி சாம்பல் அவன் மேலே பட்டுவிட்டால் உடனே அவனுடைய சகல பாவமும் தீர்ந்து நேரே "கைலையங்கிரிக்கு"ப் போய்விடலாம் என்கின்றான். சுருக்கமாகச் சொன்னால் வக்கீல் தொழில் செய்பவனும், பொய்ப்புராண பிரசங்கம் செய்பவனும் விபூதி

பாரதி ஆராய்ச்சி.

நம் தமிழ் நாட்டில் சமீபத்தில் பாரதியின் தினத்தைப் பல இடங்களில் கொண்டாடினார்கள். அப்பொழுது அவரை ஒரு தெய்வமாகப் பாவித்து அவருடைய படத்துக்கு மாலை போட்டுத் தூபதீப நைவேத்தியங்கூடச் சிலர் செய்தார்கள். இப்படியெல்லாம் செய்வதற்குப் பார்ப்பனரின் சூழ்ச்சிப் பிரசாரமும் பொதுமக்களின் குருட்டுத்தனமான மூட்டாள் நம்பிக்கையுமே காரணமென்றும் மற்றபடி இவர்கள் பாரதியைப் பற்றியோ அல்லது அவருடைய பாடல்களைப் பற்றியோ அறிந்து கொண்டாடப் பட்டதல்லவென்றும் எடுத்துக்காட்டவே இக்கட்டுரையை எழுதத் துணிந்தோம். ஆகையால் வாசகர்கள் இதைப்படித்த பின்பாவது தாங்கள் அக்கொண்

பூசிக்கொள்ளுகிற காரணத்தாலேயே தன்னை ஒரு சைவன் என்று எண்ணிக்கொண்டிருக்கிறான், பிறரும் அப்படியே எண்ண வேண்டுமென்று ஆசைப்படுகிறான் என்றால் சைவனின் போக்கியத்திற்கும், சைவ சமயத்தின் பெருமைக்கும் வேறு சாட்சியம் தேவையா? அதுபோலவே ஒரு உண்மை வைணவன் என்பவனும் ஒரு தடவை ராமா என்று சொல்லிவிட்டால் சகல பாவமும் தீர்ந்து விட்டது என்கின்றான். ராமனைவிட உலகில் வேறு தெய்வமில்லை என்கின்றான். அதுபோலவே ஒரு உண்மைக் கிறிஸ்தவன் என்கின்றவனும் ஏசுவை அடைந்தால் சகல பாவமும் தீர்ந்துவிடும் என்கின்றான். அன்றியும் ஏசுவின் மூலம் அல்லாமல் பாவ மன்னிப்பு என்பது கிடையவே கிடையாதென்கின்றான். அதுபோலவே ஒரு முஸ்லீமும் குர்ஆனில் சொல்லப்பட்டதெல்லாம் கடவுள் வாக்கு, அது எந்த தேசத்திற்கும், எந்தக் காலத்திற்கும் பொருந்தியது; அதில் உள்ள ஒரு கோடாவது மாறினால் இஸ்லாம் மதமே போய்விடும் என்கின்றான். இப்படியே ஒவ்வொரு [illegible] தத்திற்கும் ஒவ்வொரு பெருமையைக் கூறி அதுவே தானே உண்மையான மதம்; முறையே கடவுள் அவதாரம், கடவுள் குமாரன், கடவுள் தூதன் ஆகியவர்களால் ஏற்பட்டது என்றும் சொல்லுகின்றார்கள்.

டாட்டங்களில் கலந்து கொண்டதின் அறியாமையை உணர்ந்து அதற்குத் தக்கபடி நடந்து கொள்ளுவார்களாக.

பாரதிக்குக் கவி இயற்றவல்ல அறிவு சிறிது உண்டு என்பதை யாரும் மறுக்கவில்லை. ஆனால் அவரைப்பற்றி இவ்வளவு ஆர்ப்பாட்டம் செய்யும்படியான மேதாவித்தன்மை எதுவும் அவரிடம் இருந்ததென்றோ, அவர் உயர்ந்த ஞானமும் ஒழுக்கமுள்ளவரென்றோ, இன்னும் சிலர் விளம்பரஞ் செய்கிறபடி எந்த விதத்திலும், சமீப காலத்தில் தோன்றி மறைந்துபோன தமிழ்ப் புலவர்களைப்போல் அறிவுப் பஞ்சம் பிடைத்தவரென்றோ யாரும் சொல்ல முடியாது. அப்படியிருந்தும் என் அவரைப்பற்றி இவ்வளவு கூச்சல் போடவேண்டும் என்றும் கேட்கலாம். அதைத்தான் இங்கு ஆராய விரும்புகிறோம்.

முக்கிய காரணம் அவர் ஒரு பார்ப்பனர் என்பதேயாகும். எப்படியென்றால் ஒரு பார்ப்பான் எவ்வளவு அயோக்கியனாயிருந்தாலும், ஒழுக்கங் கெட்டவனாயிருந்தாலும், துர்ப்பழக்க முடையவனாயிருந்தாலும், பேடியாயிருந்தாலும், பித்துக்கொள்ளியாயிருந்தாலும் அவனைப்பற்றி அவனுடைய குற்றங்களையெல்லாம் மறைத்து "இந்திரன்" என்றும் சந்திரன் என்றும் உயர்த்திப் பேசி, எழுதி அதன் மூலம் தங்கள் இனப்பிழைப்புக்கு வழிதேடிக் கொள்கிறார்கள். இந்த அடாத காரியத்துக்குத் தகுந்த வசதிகள் அவர்களுக்கு தாராளமாய் இருக்கின்றன.

பாரதியின் அறிவு.

பாரதி, எதாவது அறிவுக்குப் பொருந்திய பாடல் எழுதியிருக்கிறாரா என்று பார்த்தால் அதுவும் இல்லையென்று கண்கு விளங்கும். 'எல்லோரும் ஓர் இனம்' என்றும் 'காக்கை குருவி எங்கள் ஜாதி' என்றும் என்னவோ வாய்க்கு வந்ததை அளந்து தள்ளியிருக்கிறார்; நடை முறைக்கும், அனுபவத்துக்கும் பகுத்தறிவுக்கும் சம்பந்தமில்லாத விஷயங்களையே சொல்லியிருக்கிறார். அவரைப் பாமர மக்கள் புகழ்வதற்குக் காரணம் அவர்களுடைய மூடப்பழக்க வழக்கங்களை வளர்க்கத்தக்கதாகவும் மனு நீதியை உயிர்ப்பித்து நிலை நாட்டக்கூடியதாகவும் அவருடைய பாடல் இருப்பதே ஆகும். எப்படியென்றால் இதிகாசம், புராணம், வேதம், சாஸ்திரம் முதலியவைகளை அப்படியே தழுவி அவைகளில் அடங்கியிருக்கும் விஷயங்களை, இக்காலத்து தேவைகளை அதில்

கலக்கி அதற்குத் தகுந்தாற்போல வேஷம் மாற்றிக் காட்டி அவர் பாடல் செய்திருப்பதேயாகும். மனு ஆட்சி எப்படி யாவது ஏற்படவேண்டும் என்று பார்ப்பனர்கள் இரவும் பக லும் கனவு கண்டுகொண்டிருக்கும் பொழுது அதற்கு உதவி யாக எழுதப்பட்டிருக்கும் பாடல்களைப் பார்ப்பனர்கள் கைகழுவ விடுவார்களா?

பாரதி அதேகு பாடல்களைக் குடிவெறியில் பாடியிருக்கி றாரே தவிர, திராவிடர் குடிவெறி பாடவில்லை என்று சுலபத் தில் அறிந்துகொள்ளலாம். பெண்களைப்பற்றி வானமளா வப் புகழ்ந்து பல பாடல்கள் செய்திருக்கிறார். ஆனால் பெண்களைப்பற்றி அவருடைய அந்தரங்க சுத்தியான அபிப் பிராயம் மிகக் கேவலமானது என்பது அவரது கிளிக்கண்ணி யில் 'பெண்களின் கூட்டமடி' என்று தன்னை மறந்து உண் மையைக் கக்கியிருப்பதிலிருந்து தெரிகிறது.

பார்ப்பனரைப் பற்றி பாரதியின் உண்மையான அபிப்பிராயம் என்னவென்றால் பார்ப்பனரே உயர்ந்த வகுப்பினரென்றும், இந்தியா அவர்களுக்குச் சொந்த சொத்து என்றும், அவர்களுடைய ஆரிய பாஷையே உயர்ந்த தென்றும் கருதியே வந்திருக்கிறார் என்பது தான். பார்ப் பனரின் நிலைமை உயரவேண்டுமென்பதே அவருடைய நோக்கமென்றும் தெரிகிறது. இதற்கு மாறாக யாராவது அவரைப் பற்றி நினைத்துகொள்ள "பார்ப்பானை ஐய ரென்ற காலமும் போச்சே", "தமிழ் மொழிபோல் எங்கும் காணோம்" என்று சொல்லப்படுமானால், இப்பாட்டுகள் போல் எங்கோ அங்கென்றும் இங்கொன்றும் எடுத்துக் காட்ட முடியுமே தவிர, அதிகமில்லையென்றும், அப்படி இரண்டொன்று பாடியிருப்பதும் கூடக் குடிவெறி யென்றும் தான் சொல்ல வேண்டும்.

எனவே அவர் அபின், கஞ்சா, சாராயம் முதலிய வைகளைச் சர்வ சாதாரணமாகவே உபயோகப்படுத்தி வந்திருக்கிறார். அவருக்குப் பார்ப்பானுடைய சுகமே லக்ஷிய மென்பதாகத் தெரிகிறது என்பதற்கு ஆதாரமான சொற் களை அவர் தேசீயப் பாடல்களிலிருந்தே மட்டும் இச்சந்தர்ப் பத்தில் எடுத்துக்காட்டி இக்கட்டுரையை முடிக்கின்றோம்.

பாடலின் தலைப்பும் அதில் வரும் அடியும் கீழே தரு கின்றோம்.

வந்தேமாதரம்:—ஆரிய பூமியில்.

பாரத நாடு:—யாகத்திலே தவவேகத்திலே.

நாட்டு வணக்கம்:—தூங்க முயர்ந்து வளர்கெனைக் கோயில்கள் சூழ்ந்தது மிக்காடே.

பாரததேசம்:—மந்திரங் கற்போம், வினைத் தந்திரங் கற் போம் (குட்டிக் காந்தியின் வினைத்தந்திரம், வி. க.)

தொழில்:—பிரம்மதேவன் கலையிங்கு நீரே விண்ணெனினின்று எமை வானவர் காப்பார்.

எங்கள் நாடு:—பன்னரு முபநிட நூல்கள் எங்கள் நூலே உன்னத ஆரிய நாடெங்கள் நாடே.

வந்தேமாதர மொழிபெயர்ப்பு:—கமலமெல் லிதழ்களிற்களித் திடுங்கமலை நீ.

எங்கள் தாய்:—நாவினில் வேதமுடையவள், வெண்மை வள நிமையாசலந்தந்த விறன் மகளாமெங்கள் தாய்.

பாரதமாதா:—முன்னையிலங்கை அரக்கர் அழிய, ஆரிய ராணியின் செல், ஆரிய தேவியின் தோன், போர்க் களத்தே பரஞானமெய்க் கீதை.

திருப்பள்ளியெழுச்சி:—தெள்ளிய அந்தணர் வேதமும் நின் றன.

தசாங்கம்:—ஆரிய நாடென்றேயறி.

நவரத்தின மாலை:—ஆணிமுத்துப் போன்ற மணிமொழி களாலே (சமஸ்கிருதம்)

மகாராஷ்டிரவின் துவஜம்:—ஆரியக்காட்சி ஓர் ஆனந்தன்றோ, செந்தமிழ் நாட்டுப் பொருநர்—கொதிந்தீ[illegible], மறவர்கள், சேரன்றன் வீரர், சிந்தை துணிந்த தெலுங்கர்—தாயின் சேவடிக்கே பணிசெய்திடு துணைவர். (ஆரியருக்கு அடிமைகள்)

லஜபதிராய்:—ஆதிமறை தோன்றிய நல்லாரிய நாடெங் நாளும் நீதி மறைவின்றி நிலைத்த திருநாடு, ஆரியர் தம் தர்மநிலை ஆதரிப்பான், ஆரியர் பாழாகா தரு மறையின் உண்மைதந்த.

திலகர்:—அன்போடோதும் பெயருடையாரியன்.

கிருஷ்ணன் துதி:—எண்ணரும் புகழ்க்கீதையெனச் சொல் லும், எங்களாரிய பூமியெனும்.

கிருஷ்ணன் ஸ்தோத்திரம்:—ஆரியர் வாழ்வினை ஆதரிப் போனே, ஆரிய நீயுனின் அறமறந்தாயோ, வெஞ்செய லரக்கரை வீட்டிடுவோனே வீரசிகாமணி, ஆரியர் கோனே.

ஆங்கிலப் பயிற்சி:—அல்லல்மிக்கதோர் மண்படு கல்வியை ஆரியர்க்கிங் கருவருப்பாவதை, இயல்புணர்த்திய சங் கானேற்றமும், பேடிக்கல்வி பயின்றுழல் பித்தர்கள், நாட்டுக்கல்வி—மந்திர வேதத்தின் பேரொலி.

தமிழ்த்தாய்:—உயிர் ஆரியத்திற்கு நிகரென வாழ்ந்தேன். (சமஸ்கிருதமே உலகில் சிறந்தபாஷை என்பதுகருத்து)

புதுவருஷம்:—ஆரிய நாட்டினர் ஆண்மை யோடியற்றும்.

என்று இவ்வாறாக ஆரிய மேன்மையையே பார்ப்பனீ யத்தின் மேன்மையையே அவரது நோக்கமாக எழுதியிருக் கிறார்.

ஆகவே பாரதிக்கும் கனம் ஆச்சாரியாருக்கும் தோழர் சத்திய மூர்த்தியாருக்கும் பார்ப்பன சூழ்ச்சி, பார்ப்பன ஆதிக்கப் புத்தி ஆகியவைகளில் எவ்வித வித்தியாசமும் காண முடியவில்லை. மற்றபடி தனிப்பட்ட முறையில் அவ ரது குணங்களைப்பற்றியும் மற்றும் அவரது சரித்திரத்தைப் பற்றியும் கவிபாடுவதில் அவருக்குள்ள கற்பனை அலங்காரம் பகுத்தறிவுக்கு ஏற்ற இயற்கை வருணனை முற்றுன்மை ஆகியவைகளைப்பற்றியும் பிறிதொருசமயம் [illegible]ம். அவசரப்படுபவர்கள் 'நவமணி' வருஷமலரில் கண்டு கொள் ளலாம்.

"குடி அரசு"

சிற்றுருத்தமும், மதமும்.

(கைவல்யம்)

இவ்வுலகத்தையும் இதிலுள்ள பொருள்களையும் நாம் உற்று நோக்கும்போது இவை எப்படி உண்டாயின என்று நம் மனம் எண்ணுகின்றது. அவை ஒரு கடவுளால் உண்டாக்கப்பட்டவை என்று தீர்மானமும் செய்யப்பட்டிருக்கின்றது.

அந்தக் கடவுள் யார்? அவர் எங்கிருக்கிறார்? எப்படி இருப்பார்? அவரைப் பார்த்தவர்கள் உண்டா? என்னும் விவகாரங்களிலும் உலகத்தையும் அதிலுள்ள எல்லாப் பொருள்களையும் படைத்துக் காக்கும் பரம்பொருளே கடவுள், அவர் எல்லாப் பொருளிலும் நிறைந்து இருக்கிறார், அவர் இல்லாத இடமேயில்லை, அவருக்கு உருவம் கிடையாது, நாம் எந்த உருவத்தை அவராகப் பாவித்தாலும் அந்த உருவமாக அவர் ஆகிவிடுவார் என்னும் விவகாரங்களிலும் காலத்தையும், புத்தியையும் செலவு செய்வதற்குச் சுயமரியாதை இயக்கம் வந்ததல்ல.

உலகமும் அதிலுள்ள பொருள்களும் கடவுளாலோ, இயற்கையாலோ, மாயையாலோ, மற்றெதனாலோ தோன்றியிருந்தாலும் அதற்காகக் கவலைப்பட சுயமரியாதை இயக்கம் வந்ததல்ல.

அனாதியான வேதமானாலும், கடவுளானாலும் அவர் சொன்ன சாஸ்திரமானாலும், அவர் அருள்பெற்றுச் சொன்னவர்களின் அன்பு மொழியானாலும் உலக பொது விதிக்கு ஒத்தும், நீதிக்கு இசைந்துமிருக்கவேண்டும். அவ்விதமில்லாத எந்த விதிகளும், சம்பிரதாயங்களும் தள்ளப்படவேண்டுமென்பதே சுயமரியாதை இயக்கத்தின் கொள்கையாகும்.

"சுயராஜ்யம் வந்த உடனே கோவில்களுக்குள் ஆதிதிராவிடர்களை அனுமதிக்க மறுத்தால் அந்தக் கோவில்களை சுயராஜ்யக் கவர்ன்மெண்டு பறிமுதல் செய்துவிடும்"

என்று மோதிலால் நேரு சொன்னதை தோழர் காந்தியும் சொல்லுகிறார் என்று பத்திரிகைகள் சொல்லுகின்றன. வரப் போகும் சுவராஜ்யம் எந்த மதத்திற்குள்ளும் நுழையாது என்று காந்தி காங்கரஸ் தீர்மானம் செய்திருக்கையில் காங்காசஸ் வரப்போகும் சுயராஜ்யக் கவர்ன்மெண்டு கோவிலைப் பறிமுதல் செய்வது எப்படி? வரப் போகும் சுயராஜ்யக் கவர்ன்மெண்டில் அதிகாரம் வகிப்பவர்களும் ஜாதி இந்துக்கள் தானே? ஆதி திராவிடர்களை உள்ளேவிட மறுக்கும் கோவில்களைப் பறிமுதல் செய்யும் உத்தரவும் அந்த உத்தரவை நடத்தும் அதிகாரமும் ஜாதி இந்துக்களின் கவர்ன்மெண்டாரிடமிருக்குமேயல்லாமல் ருஷியா, ஜப்பான் கவர்ன்மெண்டாரிடமிருக்காதே? இப்பொழுதிருக்கும் இந்துக்கள் தானே அப்பொழுதுமிருப்பார்கள்? மனிதர்கள் தானே சுயராஜ்யத்தை நடத்துகிறவர்கள்? இந்துக்களுக்கெல்லாம் கோவில்களில் சமத்துவமளிக்காமலிருப்பதற்கு இப்பொழுதே எந்த சுயராஜ்யம் தடையாகவிருக்கிறது?

இந்திய கவர்ன்மெண்டு சட்ட மெம்பர் முதற்கொண்டு கிராமச்சட்ட மெம்பர் வரையிலும் இருப்பவர்கள் ஜாதி இந்துக்களல்லவா? இவர்கள் தானே இந்திய கவர்ன்மெண்டை நடத்திக்கொடுப்பவர்கள்? வீதியில் நடக்கப்படாதென்றும், ஆதி திராவிடர்கள் பொதுக்கூட்டம் கூட்டப்படாதென்றும் 144-வது சட்டம் போடுகிறவர்களும் இவர்கள் அல்லவா? வரப்போகும் சுயராஜ்யத்தில் இவர்களெல்லாம் எங்கிருப்பார்கள்? இவர்கள் மனம் மாறுதல் எப்படி சீரடையும் என்பதற்கு விபரங்கள் வேண்டாமா? ஒன்றோ இவர்களின் மனம் மாறுதலடைய வேண்டும், அல்லது வேறு எதாவது தொப்பிக்காரருடைய சுயராஜ்யமிருக்கவேண்டும். இல்லாமற்போனால் பறிமுதல் எப்படி செய்ய முடியும்?

கல்லெண்ணங்களும், கடு நிலைமைகளும் இருந்தாலொழிய நமக்குச் சுயராஜ்யம் பலிக்காது. வெள்ளைக்காரர்கள் சுயராஜ்யம் கொடுத்து விட்டுப்போனாலும் ஜாதியென்னும் கற்பனையால் கொடுமைகளும், அநீதிகளும் நடக்கும் வரையிலும் பின்னொரு தொப்பிக்காரன் நமது சுயராஜ்யத்தைப் பிடுங்கிக் கொள்ளுவான்.

வாலிப ஆணும் வாலிபப்பெண்ணும் சேர்ந்து பிறக்கும் பிள்ளைகளின் சுயராஜ்ய மத்தியில் குழந்தையும், குழந்தையும் கூடிப்பிறக்கும் பிள்ளைகள் சுயராஜ்யம் செய்வது எப்

பொழுதும் அபாயம்தானே? பக்குவமாகாத பெண்ணைக் கலியாணம் செய்து கலியாணமான நாலாநாள் படிக்கைக்கு விட்டு ஆணையும் பெண்ணையும் கட்டிலில் படுக்கவைத்து கம்பளியால் மூடிவைப்பதே கடவுள் சொன்ன சாஸ்திரமென்று கம்பிக்கொண்டிருக்கும் ஜாதி, என் வாழ்க்கைக்கு என் கையே சாஸ்திரமெழுதும் என்னுடைய காரியங்கள் என்கைக்குள் அடங்கி நடக்காவிட்டால் எனக்கு கையிருந்து என்ன பயன்? என்று கேட்கும் ஜாதியின் மத்தியிலிருப்பதும் கஷ்டமல்லவா?

சரக்கு விலை, சாமான் விலை, பூமி விலை, மனிதனுக்கு வேண்டிய மற்ற சாமான்களின் விலையெல்லாம் குறைந்து விட்டன. பணம் கொடுக்கல் வாங்கல்களிலுள்ள வட்டிகள் குறையவில்லை. அன்று போட்டவட்டி அழியாமல் வட்டிக் கணக்கு ஏறிக்கொண்டே யிருக்கின்றன. நாட்டுக்கொட்டை கசரத்தார்களோ தருமஸ்தர்கள். சிவபக்திச் செல்வர்கள். சிவபக்தியோ ஜீவகாருண்யமுடையது. சிவகைங்கரிய சீலர்கள் சிவகைங்கரியமோ ஜீவர்களின் துன்பங்களை ஒழிப்பது. அவ்விதச் சிவபக்தியையுடைய நரகத்தார்கள் காலத்தைக் கருதியும், சிவபக்தியின் செயலை அறிந்தும் பூமியின் விலைக்கும் அகவிலையின் அளவிற்கும் ஏற்றபடி வட்டிகளைக் குறைத்தும் தள்ளியும் பணம் வசூலித்தால் அதுவே சிவ கைங்கரியப் பலனை அளிப்பதாகும்.

வழக்காடி வழிமறித்து வட்டிக்கு வட்டிவாங்கி கோவில் கட்டிக் கும்பாபிஷேகம் செய்து சோம்பேறிகளுக்கு சோறும் தக்ஷணையும் கொடுப்பதை விட வட்டிக்கு வட்டி கொடுப்பதால் வாடி நிற்கும் குடும்பங்களுக்கு உதவி புரிவது பெரும் புண்ணியமல்லவா? குடும்பத்தை அழித்துக் கோவில் கட்டுவதைவிட குடும்பத்தை அழிக்காமல் கோவிலை நிறுத்துவது மேலல்லவா?

பசியாலும், பஞ்சத்தாலும், நோயாலும், வேலையில்லாத கஷ்டத்தாலும் துன்பப்படும் நமது ஜனங்களுக்குக் கோவிலுக்குப் போகக்கூடப் பிரியமிருக்கிறதா? இருக்கும் பிரியத்திற்கு இப்பொழுதிருக்கும் கோவில்கள் போதாதா? இனியும் கோவில்களும் கும்பாபிஷேகங்களும் செய்யும் பணத்தை சனசமூக விருத்திக்கு உபயோகப்படுத்துவதே புண்ணியமாகும். சிவபெருமானுக்கு ஏராளமான பொருள் செலவு செய்து எவ்வளவோ கைங்கரியம் செய்தோம். அந்திய காட்டில் நமக்குத் துணையாக அவருடைய பிள்ளைகளில் ஒருவரையாவது அனுப்பவில்லை. அந்திய காட்டில் நாம் சம்பாதித்த சொத்துக்களில் பல பாகங்களை அவருக்கே செலவு

செய்தோம். அதை அவர் ஏற்றுக்கொண்டிருந்தால் நமக்கு உதவி செய்யாமலிருப்பாரா?

"பாத்திரமல்லாதவனுக்கு எவன் தானம் கொடுக்கிறானோ அவனின் உயர்ந்த நிலைகெட்டுவிடும்" என்று மோட்சத்தைத் கோரிக் கருமம் செய்யும் தரும சாஸ்திரம் சொல்லுகிறது. பார்ப்பனர்களுக்கும், லோக குருவென்னும் சங்கராச்சாரிக்கும் தான தருமம், பாத காணிக்கை கொடுத்த குடும்பங்கள் பல உயர்ந்த நிலை கெட்டுக்கிடப்பதற்குக் காரணமென்ன? ஒரு உத்தம பார்ப்பனனாவது பிராமணனாக அதிலிருந்தால் காப்பாற்றப்பட்டிருக்க வேண்டுமே? கரயடு ராஜ்யம் அழிந்ததும் தஞ்சாவூர் ராஜ்யம் தரைமட்டமானதும் ஏன்? அனைபார்ப்பனர் பெருத்த துரைத்தனங்களல்லவா?

ஆங்கிலேய காட்டில் அவர்கள் நாட்டு மாணவர்களுக்கும், நமது காட்டு மாணவர்களுக்கும் படிப்பில் சில விதி யாசம் பாராட்டுகிறார்களாம்! அதைப் பற்றி தோழர் இரங்க நாதம் அவர்கள் ஆங்கிலேயர்கள் மத்தியில் பிரசங்கம் செய்தார் என்பதாகப்பத்திரிகை சொல்லியிருக்கிறது. தோழர் இரங்கநாதம் அதிகாரம் வகித்திருந்த சர். அண்ணாமலைப் பள்ளியில் உள்ள விதியாசத்திற்கு ஏன் பிரசங்கம் செய்யவில்லை? ஆங்கிலேய காட்டில் உண்மைக்குப் பரிந்து பேசி தரும மனோபாவத்தைக் கொண்டாடும் ஜனங்களிருக்கிறார்கள். நமது காட்டில் உண்மையைச் சொன்னால் சொன்னவனைக் கெடுப்பதே தொழிலாக உடைய மகாபாவிகளிருக்கிறார்கள் என்பதே காரணம்.

ராமேஸ்வரத்தில் ராமர், அவருடைய பரிவாரங்கள், புரோகிதர்கள், அர்ச்சகர்கள், இவர்களுடைய சிப்பந்திகள், யாத்திரைவாசிகள் இவர்களே பெரும் கூட்டம். இந்த ஊர் சாராயக்கடையோ, மாதம் 1300 ரூபாய் குத்தகை! இத்தனை சாராயத்தையும் குடிப்பவர்கள் யார்? இவர்களெல்லாம் பாவத்தைச் சுமந்து சமுத்திரத்தில் தள்ள வேண்டியிருப்பதால் மனுதரியத்திற்கு அத்தனை சாராயமும் வேண்டும் போலும்!

மூன் காசிக்குப்போக ஆறு மாதம், வர ஆறு மாதம். ஒரு வருடம் கடந்து காசி தீர்த்தம் கொண்டு வந்து ராமேஸ்வர லிங்கத்திற்கு அபிஷேகம் செய்தால் புண்ணியமென்பார்கள். இப்பொழுதோ கங்கா தீர்த்தம் ஒரு ரூபாய்க்கு ஒரு அவுன்சு ராமேஸ்வரத்தில் விற்கிறது. அதை வாங்கி ஒன் றேகால் ரூபாய் கொடுத்தால் ராமேஸ்வர சுவாமிக்கு அபி

ஷேகம் செய்து பாவத்தையும் பறிமுதல் செய்து விடுவார்கள். இரண்டேகால் ரூபாயில் எல்லாப் பாவமும் போய் புண்ணியம் வந்து கைலாசத்திற்கோ, வைகுண்டத்திற்கோ போய்ச் சேர்ந்துவிடுகையில் இந்த உலகத்தில் சீர்திருத்த வேண்டிய வேலை நமக்கென்னவென்று கினைக்கும் நமது சுயராஜ்யத்தில் ஆலயபரிவர்த்தனை இருக்குமென்பது நம்பக் கூடிய காரியமா?

பம்பாயில் ஆங்கிலேயர்கள் சங்கம் கூடி இந்துக்களையும் அதில் சேர்ந்து பேசவும், கூடிப்பழகவும் கூப்பிட்டார்களாம்! ஆதிதிராவிடர்கள் பி. ஏ. பி. எல். பாஸ் செய்திருந்தாலும் சென்னை கான்மாபாலிட்டன் கிளப்பில் காலடி எடுத்து வைக்க விடுவதில்லை. இனி வரப்போகும் சுயராஜ்ய கவர்ன்மெண்டை கடத்தும் மகான்களெல்லாம் அந்தக் கிளப்பிற்குள் தான் நுழைந்து கொண்டிருக்கிறார்கள். காளை கோவில் பரிவர்த்தனை பண்ணும்சாமி இவர்களிடம்தானே இருக்கவேண்டும்?

நமக்கு ஆங்கிலேயர்கள் சுயராஜ்யம் கொடுத்து விடுவதினால் அவர்களுக்கு அதிகாரம், பொருள், பிழைப்பு முதலியவைகள் நஷ்டமடைகின்றன. ஆதிதிராவிடர்களைநாம் ஆலயத்திற்குள் விடுவதால் நமக்கு வரும் கஷ்டமென்ன? உண்மையில் சத்தியத்தில் ஒன்றுமில்லை

தெரிந்தோ தெரியாமலோ தீண்டாமை உண்டாய்விட்டது. அந்தத் தீண்டாமையால் பெருந் துன்பம் வந்ததும் கண்டோம். அந்தத் தீண்டாமையைப் போக்குவதற்கு சாஸ்திரமோ, பிராயச் சித்தமோ, தண்டனையோ, அறிவோ? மனிதனோ, அதிகாரமோ இல்லாத சனசமூகம் என்றைக்கும் முன்னணிக்கு வராது.

தீண்டாமை போகவேண்டுமென்று சொல்லுவதற்கு வைதீகர்களைக் கேட்கவேண்டும். அவர்கள் சாஸ்திரங்களைப் பார்த்துச் சொல்லவேண்டுமென்று காங்கரஸ் பெரியார்கள் சொல்லுவார்கள். சாஸ்திரத்திலில்லாத காரியங்களெல்லாம் வைதீக இந்துக்கள் செய்கிறார்களே! அவர்கள் யாரைக் கேட்டுச் செய்கிறார்கள்? எந்த சாஸ்திரத்தைப் பார்த்துச் செய்கிறார்கள்? என்பதைக் கேட்க காங்கரசுக்கு அதிகாரமில்லை. கேட்டால் பாவம் வந்துவிடுமா? சுயராஜ்ய வழியும் தடைபட்டுவிடுமோ?

நாத்திகமா? ஆத்திகமா? மக்களை ஒற்றுமைக்கு ஏற்றதெது?

(சாமவேதனார்)

"கடவுள்" 'இருக்கிறார்' என்ற கொள்கைக்கு ஆத்திகம் என்றும், அந்தப் பிராணி, இல்லை என்ற கொள்கைக்கு நாத்திகம் என்றும் பெயர்கள் சூட்டப்பட்டிருக்கின்றன வென்பது வாசகர்களுக்கு விளக்கத்தேவையில்லை. 'கடவுள்' இருக்கின்றதோ, இல்லையோவென்ற வாதத்திலும் நான் இறங்கப்போவதில்லை. ஆத்திகர் அஞ்சி நடுநடுங்குமாறு பேரறிஞரும், கலைவாணருமாகிய நாத்திகர் 'கடவுள்' என்ற பிராணியை ஆட்டி அசைத்து விட்டனர். அப்பிராணியும் செயலற்றுச் சோம்பிக் கிடந்திவிட்டது! ஆயினும் ஆத்திகம் அழிடவில்லை. ஆத்திக உணர்ச்சி உள்ளபெற்றே ருகின்றது. இவ்வாறு வளர்ந்தோங்கிவரும் ஆத்திகம் மக்கள் ஒற்றுமையைக் குலைத்துவருகின்றது. 'கடவுள்' நல்லவராயின் 'கடவுள்' உணர்ச்சி நல்லதாயின் ஆத்திகம் சிறந்ததாயின் உலகில் வேற்றுமையிருப்பதேன்? மதச் சண்டைகளேன்? சமயப்பூசல்களேன்? 'கடவுள்' என்ற "செம்பொருள்" அல்லது "பரம்பொருள்" (ஆத்திகரது கூற்றுப்படி) மக்களுக்குள் ஒற்றுமையை வளர்க்குந்திறனற்றதா? ஆத்திகர் அன்புடையராயின்றி வம்பும், வழக்கும் தம்மை ஆட்கொள்ளும்படி விட்டு விட்டதேன்? என்பன போன்ற பல புத்திசாலித்தனமான கேள்விகளுக்கு ஆத்திகர் அளிக்கும் விடைகள் யாவை? சமாதானம் என்னோ!

"நாத்திகம் நாசமாய்ப்போகுக" "நாத்திகர் நாகமேகு" என்று ஆவேசத்துடன் சாபக் கூச்சல் போடுவதால் ஆத்திகர் தப்ப விடலாது. ஏற்ற விடையளித்தல் வேண்டும்; சமாதானஞ் செய்தல் வேண்டும். அங்ஙனம் விடையளிக்க ஆத்திகர் முற்படும் பொழுது அவருக்கெதிரே பல தடைகள் குறுக்கிடுகின்றன. ஏனெனில் ஆத்திகருக்குள்ளேயே ஒற்றுமையில்லை. ஆத்திகம் ஒன்றுபட்ட

அல்லது ஒருமுகப்பட்ட உணர்ச்சியன்று; அது பல்வேறு விகாரமாய்ப் பிரிந்து நிற்பது. எனவே ஒற்றுமை உணர்ச்சியை வேறுத்து வேற்றுமையை வளர்ப்பது. "கடவுள் என்ற ஒரு பொருள் உண்டு" என்பதில் மட்டும் ஓரளவு ஒற்றுமை ஆத்திகத்தில் காணமுடியுமேயன்றி மற்றபடி ஆத்திகத்தில் ஒற்றுமையை மருந்துக்கும் காணமுடியாது. ஆத்திகாது ஆவே சத்திற்கும், வெள்ளறிவுக்கும் அடிப்படையும், மூலாதாரமுமான "கடவுள்" என்பதிலேயே பெரும் வேற்றுமை. அப் பொருள் "அது" வா "அவனா" "அவளா" "அவரா" "அவர்களா" அப் பொருளை அழைக்குமபொழுது "ஸ்ரீ" என்பதா, "திரு" என்பதா, "ஸ்ரீமான்" என்பதா, "ஸ்ரீலஸ்ரீ" என்பதா, "ஸ்ரீமத்" என்பதா, "திருமிகு" என்பதா, "திருடன்" என்பதா, "திருவாளர்" என்பதா "பிரம்ம ஸ்ரீ" என்பதா, ஸ்ரீஜ்ஜ்" என்பதா "ஸ்ரீயுத" என்பதா, "மகா-ன-ன ஸ்ரீ" என்பதா? அந்தப் பிராணி மணம் புரிந்ததா? புரிந்ததாயின் எத்தனை பெண்கள்? ஒன்றா? இரண்டா? பலவா? பிள்ளைகளுண்டா? ஆண் பிள்ளைகள் எத்தனை? பெண் பிள்ளைகள் எத்தனை? "கடவுள்" காளை வாகனனா? கழுதை வாகனனா? கருட வாகனனா? வசிப்பதெங்கே? கைலாயத்திலா? வைகுண்டத்திலா? மோட்சத்திலா? நாகத்திலா? கடவுள் மூற்றுந் துறந்த முனிபா? இன்றேல் காமப் பித்தனா? புனினா? புல்லனா? போக்கிரியா? சண்மார்க்கனா? தன்மார்க்கனா? மெய்யனா? பொய்யனா? ஆரியனா? திராவிடனா? தமிழ் மொழியாளனா? சமஸ்கிருதக் கையுடைபோனா? பட்சபாதமற்றவனா? அல்லது உடையவனா? பிழை பொறுப்பவனா? அல்லாக்கால் சீறிச் சினந்து தண்டிப்பவனா? யாதொரு பற்றுக்கோடும் அற்று தானேயாய்த் தத்துவங் கிடந்து நின்ற பாம்பொருளா? அல்லேல் கட்டுக்குள் அடங்கினவனா? ஆண்டவனா? ஆளப்படுபவனா? பிரார்த்தனைக்குச் செவிசாய்த்து அருள் புரிபவனா? காணிக்கை ஏற்று இருளை சொரிபவனா? மக்களிற் சிலரை உயர்த்தியும், பலரைத் தாழ்த்தியும் வைப்பவனா? பார்வதி கவனனா? பாவிகள் கவனனா? எண் குணத்தானா? ஈரைந்து தன்மையாளனா? செங்கோனா? கொடுங்கோலனா? புலால் உணவினனா? தாவர உணவினனா? மொட்டைத் தலையனா? குடுமித் தலையனா? மீசைச்சானா? இல்லையா? (அப்பனே! அப்பனே!! அப்பனே!!!) இன்னோரன்ன பிறபல் வேறு கேள்விகளுக்கு இடந்தரும் ஆத்திகம் ஒற்றுமைக்கு ஏற்றதா? வேற்றுமைக்கு ஏற்றதா? சொல்லுவீர் தீவிர ஆத்திகரே!

'நாத்திகம்' வீசும் சுயமரியாதை இயக்கத்தை எதிர்க்கத் தோன்றிய ஆத்திகச் சங்கம் எங்கே? சைவரும், வைணவரும், கிறிஸ்துவரும், இஸ்லாமியருமான ஆத்திகர் ஒரே மேடையில் நின்று ஆத்திகத்தைப் போற்றிப் புகழ்ந்து கூவிட வியலுமோ? குறித்த நாற் சமயத்தார்களது 'கடவுள்'களது பெயர்கள், தொழில்கள், குடும்ப வியவகாரங்கள வேறு படுகின்றனவே! அன்றியும் அச்சமயங்களின் மூலாதாராக்கொள்கைகள் ஒன்றுக் கொன்று மூணி மூட்டி மோதிக்கொள்ளும் தன்மையுடையன வாயிற்றே! சைவசமயத்தின்படி 'கடவுள்' தமது அடியார்களுக் குத் தம் அருளையும், கிருபையையும் ஈனித்து அவர் மூலம் மக் களை உய்விக்கவும், ஈடேற்றவும் முயல்கின்றார். வைணவசம யத்தின்படி 'கடவுளே' உலகில் பல காலங்களில் பல்வேறு உரு வங்கள் தாங்கி அவதரித்து மக்களை நல்வழிப்படுத்த முயல்கின் றார். கிறிஸ்துவம் வைணவக் கொள்கையைப்போல் அவதாரத் தைச் சிறப்பிக்கின்றதெனினும் 'கடவுள்' தமது ஒரே மகனை உலகில் மனிதனாய் அவதரிக்கச் செய்து சன்மார்க்கத்தையும் போதிப்பித்தது என்று கூறுவதன்றி 'கடவுளை' மூன்று கூறாக் கிப் பிறகு அம்மூன்றையும் ஒன்றாகப் பொருத்தி 3–1 என்றும் 1–3 என்றும் ஒரு விநோதக் கணித முறையைக் கற்பிக்கின் றது. இஸ்லாமோ எபிராயக் 'கடவுளான' எகோவாவைச் சீர் திருத்தி முகமதுநபியே கடைசி தீர்க்கதரிசியெனவும், அவரது போதனைகளும் சாதனைகளுந்தான் மக்களின் நல்வாழ்வுக்கு ஏற்றவையென்றும் கூறுகின்றது. மேலும் மற்ற மூன்று சம யங்களும் போற்றிக் கையாண்டு வரும் சிலை வணக்கத்தைக் கண்டிக்கின்றது.

இவ்வாறு ஒன்றுக்கொன்று முரண்படுஞ்சமயங்களால்— ஆத்திக உணர்ச்சியால் உலகில் மக்களது முன்னேற்றமும், நல் வாழ்வும் தடைபடுகின்றனவா, இன்றேல் வளர்ச்சியடைந்து வருகின்றனவாவென்பதைச் சிந்திப்போர் எளிதில் விளங்கவியலு மும். சரித்திரத்தைப் புரட்டிப் பாருங்கள். என்ன காண்கின் றீர்கள்? மிகக்கோரமான சமயப்போர்கள்! அவற்றில் கொலை செய்யப்பட்ட எண்ணிறந்த நல்ல மாசற்ற உயிர்கள்! மனித னுக்கு மனிதன் ஏற்றதாழ்வு! 'கோவில் பூனை'களான குருக் களின் கொள்ளை, இழிந்த செயல்கள், காமப்பித்து, உரிமை யின்மை, அடிமைத்தனம், பெண்களை அடக்கியாளுதல்! சுருக் கிக்கூறுகில் ஆத்திகமே வெறுக்கும் கொலை, களவு, கள், காமம், குருநிந்தை ஆகிய ஐம்பெருந்தீங்குகளும் ஆத்திகப்பித்தால் செய் யப்பட்டு வருகின்றன. ஆத்திகமும், அதற்கடிப்படையான

'கடவுள்'களும், அவர்களது 'பக்தர்'களும் உலகை நல்வழிப்படுத்தச் சென்ற பல நூற்றாண்டுகளாகச் செய்த முயற்சிகள் என்னவாயின? கிட்டிய பலன் எம்மட்டு? உண்மையில் ஆத்திகர்களும் சமய வாதிகளும் மக்களின் நல்வாழ்விலும், முன்னேற்றத்திலும் ஆர்வங்கொண்டுள்ளோரென்று திட்டமாய்க் கூறிடலாகாது. தத்தம் விடாத சமயக் கொள்கைகளைப் பரப்புவதிலும், விருத்தி செய்வதிலுந்தான் அன்னார் தமது காலத்தைக் கழித்தனரன்றி உலகப் பொதுஜன சமூக நன்மைக்குக் குறிப்பிடத் தக்கதாய் அவர்கள் சாதித்ததென்னையோ?

ஆத்திக சிகாமணிகள் மேற்நாட்டியவற்றிற்குத்தக்க பதிலளித்துச் சமாதானஞ் செய்தல் வேண்டும். "மேனாட்டார் ஈராயிரம் ஆண்டுகளாய்க் கிறிஸ்துவத்தை கட்டியழுதும் இன்றளவும் தமது மிலேச்சதனத்திலிருந்து-சீர்திருந்த வில்லை யென்றும் கூறும் 'இந்து' ஆத்திக வீரர்கள் ஐயாயிரம் ஆண்டு 'இந்து' தருமத்தைக் கடைபிடித்தும் தாம் இன்னும் மிலேச்சராயிருப்பதை யுணரல் வேண்டும், பிறசமயிகளுக்கும் இக்குற்றச்சாட்டம் பொருந்தும். சமயவாதிகள் சொல்லளவிலன்றிச் செயலளவில் உலகத்திற்குக் கடுகளவு நன்மையுஞ் செய்யவில்லை யென்றாலும் அது பிழையாகாது. நம் கண்ணிற்படும் உலகையும், அதிலவதியுறும்மக்களையும் புறக்கணித்துவிட்டு கண்ணிற்படாத 'மறு உலகத்'தையும், அங்கு சிம்மாதனத்தில் வீற்றிருந்து செங்கோலோச்சுவதாய்ச் சொல்லப்படும் 'கடவுளை'யும் சேவிக்க மக்களை ஆயத்தப்படுத்தும் ஆத்திக உணர்ச்சியால் மனித சமூகம் பயனடையுமென்றெதிர் பார்ப்பது பகற்கனவே யாகும். இனி, அடுத்தபடியாக ஆத்திகத்தின் செயலற்ற தன்மையையும், நாத்திகத்தின் மேன்மையையும், பிறபல சந்தேகிகளால் உலகம் அடைந்த நன்மையையும் பற்றி விரிவாய் எழுதுகிறேன்.

ஆத்திக உணர்ச்சியை அடிப்படையாகக்கொண்டே உலகில் பல காலங்களில் பல்வேறு சமயங்கள் உண்டாக்கப்பட்டிருக்கின்றன, அவற்றால் மக்களது நல்வாழ்வும், முன்னேற்றமும் செம்மையுறுமென்றே சமயவாதிகள் கூறுகின்றனர். ஆனால் சரித்திரம் அதற்கெதிராய்ச் சான்று பகர்கின்றது. ஒரு சமயமும் மற்றொரு சமயமும் ஒன்று மற்றொன்றைத் தாக்கி அவதியுடையுவதன்றி ஒரு சமயத்தின் உட்பிரிவுகளே ஒற்றுமையற்று வேற்றுமையில் விழுந்து இடர்ப்படுகின்றன. இவ் வேற்றுமை காரணமாக மன்பதை எத்தனையோ துன்பத்திற்கும், அல்லலுக்கும் உட்பட்டு உழன்று வந்திருக்கின்றது!

கிறிஸ்தவ சமயத்தை எடுத்துக்கொள்ளுங்கள். கிறிஸ்துவை "கடவுள்" என்று கையெடுக்கும் எண்ணற்ற கிறிஸ்தவ சமயப் பிரிவுகள் ஒன்றையொன்று தாக்கி முட்டி, மோதி வாதிட்டு மக்களது ஒற்றுமையைக் குலைத்து உலகின் அமைதிக்கே உலைவைத்துக்கொண்டிருக்கின்றன வென்பதை அறிவுடைய எவரேனும் மறுக்கவியலுமா? நமது உலகப் பிரசித்தி பெற்ற 'இந்து' சமயத்தின் ஊழல்கள் நம்மவரின் ஒற்றுமைக்கு ஏற்றவையாகுமா? "சாதி" என்ற பேய்க்கு அடிமைப்பட்டுள்ள நம் சமயத்தால் இம்மியேனும் பயன் விளையுமா? ஒற்றுமை உளவுறுமா? இஸ்லாம் மதத்திலும் இதுகாலை உட்பிரிவுச் சண்டைகள் தோன்றிவிட்டன.

இவ்வாறு பல பக்கங்கள் வரைந்து கொண்டே போகலாம். ஆயின் "கடவுள்" என்ற முழு பெயருடன் கண்ணிற்குத் தென்படாததும், அறிவுக்கு எட்டாததுமான ஒரு பொருள் உண்டு என்ற கூற்றிலும், அதை இவ்விதமே வணங்கல் வேண்டுமென்ற கூற்றிலும், அது எத்தகையதென்ற கூற்றிலும் ஒற்றுமையின்மை பது ஆத்திகர்களுக்குள் ஒருநாளும் உண்டாகாதென்பதறிக. ஆத்திகர்களுக்குள் அத்தகைய ஒற்றுமையும், ஒருமையும், வேண்டுமென்றாதல், மக்களது வாழ்க்கை செம்மையுறுதல் வேண்டுமென்றாதல் ஒரு அவா அல்லது உணர்ச்சி இருக்கிறதென்பதற்கு ஆதாரமில்லாமலில்லை. "நீர் (கடவுள்)" பெருக வேண்டும்; நான் சிறுக வேண்டும்" என்று கிறிஸ்தவர் கூறுவர். அதன் கருத்தென்னையோ? மக்கள் எக்கேடு கெட்டாலுமென்ன? "கடவுள்" காரியம் சரியாய் நடக்கவேண்டும். அப்பிராணியை கும்பிடுதலும், போற்றிப் புகழுதலும், பண்டிகை கொண்டாடுதலும் பணத்தைச் செலவிட்டு கோமாளிக் கூத்தாடுதலும் சிறிதும் குறைதல் கூடாதென்பதுதானே? பிற சமயங்களும் இங்ஙனமே மக்களைக் கொஞ்சமும் கவனியாது "கடவுள்" உணர்ச்சியில் ஈடுபட்டு நடந்துவருகின்றன.

மக்களது ஒற்றுமைக்கும், நல்வாழ்வுக்கும், முன்னேற்றத்திற்கும் அறிவு வளர்ச்சிக்கும் கடையாக பெரும்பாலும் ஆத்திக சமயங்களே சென்ற காலங்களில் குறுக்கிட்டு வந்திருக்கின்றன. ஒரு மனிதனது புனித வாழ்வுக்குச் சமயம் அவசியமென்ற தவறான எண்ணத்தினாற்றான் உலகம் ஆராய்ச்சியின்றிச் சமய உணர்ச்சிக்கு அளவுகடந்த மதிப்பைபளித்து வந்தது. ஆனால் இது காலை பேரறிஞர்கள் சமயம் மனிதப் புனிதத்துவத்திற்கு அவசியமன்று என்ற முடிவுக்கு வந்துள்ளனர். இனி,

நாத்திகத்தின் மேன்மையைப் பற்றிக் கவனிப்போம். "கடவுள்" உண்டு என்று கூறும் ஆத்திகர்களுக்குள் ஒற்றுமையில்லை; இருக்க முடியாது. ஏனெனில் அப்பிராணி எத்தகையது, எங்கிருக்கின்றது. அதற்கும் மனிதனுக்குமுள்ள தொடர்பென்ன, என்பனபோன்ற பல கேள்விகளுக்கு ஆத்திகம் இடமளிக்கின்றது. ஆனால் நாத்திகத்தில் அவ்வாறொன்றுமில்லை. "கடவுள்" இல்லையென்று கூறும் நாத்திகர் எத்தேயத்தவராயினும், எந்நிறத்தவராயினும், எக்குலத்தவராயினும் அவருக்குள் நல்ல ஒற்றுமையுண்டு. "கடவுளை" மறுக்கும் கூட்டத்தினர் எல்லாச் சமயங்களையும் கணக்குக் குதவாதவையென்று தள்ளிவிடுவதால் பல சமயக் "கடவுள்"களும் தாக்கப்படுகின்றனர். இக்காரணத்தால் வேறு, வேறு சமயங்களில் நம்பிக்கை வைத்து ஆத்திகாயிருந்து நம்பிக்கையிழந்து நாத்திகாய்ப் மாறிய அறிஞருக்குள் ஒற்றுமை உண்டாவது இயல்பேயன்றோ? ஆத்திகத்தை மக்களிடையில் பரப்ப முயல்கையில் ஆத்திகர் தமக்குள் மல்லாடுகின்றனர். ஏனெனில் "கடவுள்" உணர்ச்சி குறுக்கிடுகின்றது. "கடவுளை"ப்பற்றிய இலக்கணத்தை விவரிக்கையில் பல சமயக் "கடவுள்"களும் ஒன்றோடொன்று முட்டி மோதிக்கொள்வதால் விளைவது வேற்றுமையே; பெருந்தீங்கே. ஆனால் நாத்திகத்தைப் பரப்பவிரும்பும் நாத்திகர் வேற்றுமையடைய நிமித்தமேயில்லை. ஆத்திகத்தில் ஒன்றிப்பில்லை. நாத்திகத்திலோவெனில் உலகம் முழுவதும் ஒன்றிடல் கூடும்.

ஆத்திகர் தாம் கொண்ட கொள்கையை மக்களிடையில் பரப்புவதையே குறிக்கோளாகக் கொண்டுளர். நாத்திகர் அவ்வாறின்றி மக்களுக்குத் தொண்டாற்றுவதே மேல், சிறப்பு என்று உணர்ந்து நின்றவர். ஆத்திகத்தில் கண்ணிற் றென்படாத 'கடவுளு'க்குத் தொண்டு. நாத்திகத்தில் கண்ணிற்குத் தென்படும் மக்களுக்குத் தொண்டு. சிறந்ததெது? வாசிப்போர் சிந்திப்பாராக.

நாத்திகமும் புனித வாழ்க்கையும்.

நாத்திகானைவரும் நாசகாலிகள், தீயோர், துன்மார்க்கர் என்றே ஆத்திகர் எண்ணுகின்றனர். ஆனால் மேனாட்டில் பிரபல நாத்திகர்களான டார்வின், ஆக்ஸிலி பிறேட்லா, இங்கர்சால், பெயின், வால்ற்றேர் முதலியோர் புனித வாழ்க்கை நடத்தியுள்ளார்கள். ஆத்திகர் புனித வாழ்க்கையை மட்டும் சிறப்பிப்பவர். நாத்திகரோ பயனுடைய வாழ்க்கையைச் சிறப்பிப்பவர். உண்மையில் புனித வாழ்க்கை கடினமானதன்று. அதற்கு ஆத்திக உணர்ச்சி அவசியமு மன்று. அங்ஙனம் புனித வாழ்க்கை நடத்த

ஆத்திகவுணர்ச்சி அவசியமாயின் அஃதொரு அரிய பெரியகாரியமே மன்று. ஏனெனில், ஒரு மனிதன் புனித வாழ்க்கை நடத்துவதனால் அவன்மட்டும் சிறப்படைகிறான். அவனே பயன் பெறுகிறான். பிறர்க்கு அதனால் எட்டுணையும் பயனில்லை. இமயமலைச்சாரலில் புனித வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கும் நமது முனிவர்களால்' நாட்டுக்குத் துளியேனும் பயனுண்டா? ஆத்திகம் புனித வாழ்க்கைக்கு அரண் செய்கின்றதென்றே கொண்டாலும் அதனால் ஆத்திகம் மேன்மையடைந்து விடாது. ஏற்றுமையைக் குலைத்து விடுவதால் ஆத்திகம் பயனுடைய வாழ்க்கை நடத்தத் துணை புரிவதில்லை. பயனுடைய வாழ்க்கை நடத்தும் ஒருவன் தன் புனிதத்தை பிழந்துவிடினும் அதனாற் கேடொன்றும் விளைந்து விடாது. எவ்வாறு பார்ப்பினும் புனித வாழ்க்கையைக் காட்டிலும் பயனுடைய வாழ்க்கையே சாலச்சிறப்புடைத்து என்பதுண்மை.

நம்பிக்கையீனத்தால் மக்களுக்கு விளைந்த பலன்.

பிரபல ஆங்கில நாத்திகரான சால்சுபிறெட்லா என்ற பேராசிரியர் எழுதிய கட்டுரைகளடங்கிய அரிய நூலில் ஆத்திகத்தாலும், ஆத்திகராலும் துன்புற்ற உலகத்திற்கும், மக்களுக்கும், பிரபல சந்தேகிகளால் விளைந்துள்ள எண்ணற்ற நன்மைகளைப்பற்றி அன்னார் மிக விரிவாய் விளக்கியிருக்கிறார். நம்பிக்கையீனத்தால் "மனித சமூககம் அடைந்த இலாபம்" (Humanity's Gain From Unbelief) என்ற கட்டுரையிலிருந்து சில குறிப்புகளைக் கீழே தருகிறேன்.

"சந்தேகத்தாலும் நம்பிக்கையீனத்தாலும் கிறிஸ்தவ சமயம் புறக்கணிக்கப்பட்டுவிட மக்களது அறிவு அகன்று, பெருகி, விசாலித்து உலகினர் பல்வகையில் முற்போக்கடைந்துள்ளனர் என்கிறேன். எனைய சமயங்களும் ஒழிந்தாலன்றி அறிவு முதிர்ச்சியடையாது. சமயங்கள் எப்பொழுதும் ஓரேமாதிரியாகவிருப்பதில்லை. மதங்கள் ஏற்பட்ட காலத்தின் அறிவீனங்கள் நாகரீக வளர்ச்சியின் ஒளிமுன்னர் தகர்த்தெறியப்படுகின்றன. மனிதனது அறிவுக்கேற்ப மத உணர்ச்சிகளும், கொள்கைகளும் மாறிவருகின்றன.

"மதவெறிகொண்ட கிறிஸ்தவர் சென்ற நூற்றாண்டுகளிற் புரிந்துள்ள தீச் செயல்களுக்கு அளவுண்டோ? அவை நாகரீகத்திற்கே பெருங் கறைகளாகும். கிறிஸ்தவ சமயத்தால் உலகம் பல நன்மைகளைப் பெற்றிருக்கின்றதெனக் கிறிஸ்தவப் பாதிரி

கள் கூறுவர். ஆனால் உண்மையென்னவெனில் உலகிற்கு நன்மை புரிந்தவர் பெயரளவில் மட்டும் கிறிஸ்தவர். (Only Nominal Christians) அன்னார் நன்மை செய்ததற்கு கிறிஸ்தவம் காரணமன்று. (Not because of Christianity but in spite of it)

"அடிமை வியாபாரத்தை எடுத்துக்கொள்வோம், கிறிஸ்தவ சமயமும் அச்சமய குரவானைவரும் அடிமை வியாபாரத்தை யாதரித்தனர். விவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் அடிமை வியாபாரத்தை மேற்கோல்காட்டி மகிழ்ந்தனர். அடிமை வியாபாரத்தை எதிர்த்தோரை கிறிஸ்தவ சமயம் சபித்தது. எதிர்த்தோர் யார்? சந்தேகிகளும் நம்பிக்கையற்றோருந்தான். 'கடவுள்' என்ற பொருளைப் பொருட்படுத்தாதோரும் அதற்குக் கைமடக்காதோருந்தான் மக்களுக்குத் தொண்டாற்றுதலே தன்கடன் எனக்கொண்ட சிறந்த மனிதர்கள்.

"ஆனால் ஆத்திகமும், ஆத்திகரும் மனிதனை அடிமைப் படுத்தி விலங்கு நிலைக்குக்கொண்டேகினர். அன்றியும் பில்லி, சூனியம் முதலாம் மூடப்பழக்கவழக்கங்கள் எண்ணங்களுக்கு ஊதிப்பளித்து அவற்றால் மக்களை—அறியா மக்களைத்தான் புறுத்தியது எது? கிறிஸ்தவ சமயமே விவிலியத்தில் பழைய புதிய ஏற்பாடுகளில் "கெட்ட ஆவி" களைப்பற்றிய கதைகள் பல சொல்லப்பட்டிருக்கின்றன. அப்பாட்டி கதைகளை உண்மை யென நம்பிய புரோகிதக் கூட்டம் குரூரமாய் அவற்றில் நம்பிக் கையற்றோரை நடத்தியது. சந்தேகிகளும், நம்பிக்கையற்றோ ரும் பல்கால் போராடி அம்மூட நம்பிக்கையையும், அதனால் விளைந்து கொண்டிருந்த தீங்கையும் ஒழித்தனர்.

இவ்வாறே சந்தேகமும், நம்பிக்கையீனமும், சுருங்கக் கூறின் நாத்திகமுமே மக்களுக்குப் பெருநலன்களையளித்தி தென் பேன். எடிசனது பாடுங்கருவியும், மின்சாரமும், எனைய அரிய புதுமைகளும் "கடவுள்" "பக்தர்கள்" அன்று "கட வுளை"ப் பற்றிய சிந்தனையே அற்ற மக்களது தொண்டால் விளைந்த நன்மைகளேயாகும். கலிலேயோ என்ற அறிஞர் கண்டுபிடித்த வானசாஸ்திர உண்மைகளைப் பொய்ப்பிக்க கிறிஸ் தவசபை எவ்வளவாய் முயன்றது! அவரை என்ன பாடுபடுத் திற்று! அவர் ஆத்திகரா? நாத்திகரா? "உலகம் தட்டையாயிருக்

புராணங்கள்.

(சத்திய விரதர் எழுதுவது)

புராணங்களை என்று சொல்லப் படுபவைகளைப்பற்றி மனிதர்கள் குற்றம் சொல்லுவதும், அவற்றை பொய்யும் புளுகும் நிறைந்த பாண்டங்கள் என்பதும், அவைகளினால் மக்களுக்குள் மூட நம்பிக்கைகள் ஏற்பட்டு பகுத்தறிவு இழக்க நேரிட்டதென்று சொல்லப்படுவதும் ஆகிய விஷயங்கள் வெகு காலைக்கு முன் இருந்தே பல பெரியார்கள் என்பவர்கள் சொன்னதாகக் காணப்பட்டாலும் இப்போதுதான் அவற்றை பலர் எற்றுக்கொள்ளுகின்றார்கள். இந்துக்கள் என்போர்களிலேயே அரசியல் தலைவர்கள் என்போர்களும் மதத்தலைவர்கள் என்போர்களுங்கூட இப்புராணக் கூற்றுகளை தைரியமாய் கண்டிக்க முன் வந்திருப்பதுடன் அவை ஒழிந்தே தீர வேண்டும் என்று சொல்லும் அளவுக்குக்கூட வந்து விட்டார்கள். அன்றியும் இது சமயம் எங்கு பார்த்தாலும் வாலிபர் உள்ளத்திலும் அறிஞர் உள்ளத்திலும் இதே கவனம் குடிகொண்டிருக்கிறது. இது மாத்திரமல்லாமல் இந்து மதம் என்று சொல்லப்படுவது வேதம் என்பதாகிய ஒன்றை ஆதாரமாகக் கொண்டது என்று விவகாரத்திற்கு மாத்திரம் சிலச்

கிறது'' என்ற பழைய கொள்கையில் நம்பியிருந்தால் கொலம்பஸ் அமெரிக்காவைக்கண்டு பிடித்திருப்பானோ?

என்னால் பல்வேறு எடுத்துக் காட்டுதல்களைக் குறிப்பிடக் கூடும்! ஆயினும் ''ஞானைச்சோற்றிற்கு அரிசி ஒன்று போதும் பதம்பார்க்க'' என்றபடி நான் குறித்தனவே போதும். சந்தேகிகளும், நம்பிக்கையற்றோரும் நாத்திகருமாகிய பேரறிஞர்கள் கண்டுபிடித்த செம்பொருட்களையும், சீரிய கருத்துகளையும் தழுவியே கிறிஸ்தவ சமயம் காலத்திற்கேற்ப மாற்றப்பட்டும், புதுப்பிக்கப்பட்டும், விசாலிக்கப்பட்டும், மனிதத்தன்மை அளிக்கப்பட்டும் வந்தது.

சொல்லிக்கொள்ளக் கூடியதாயிருந்தாலும் அவ்வேத மதமே னன்னும் இந்து மதம், செய்கையிலும் தோற்றத்திலும் எண் ணத்திலும் விளங்குவதெல்லாம் மேல்கண்ட "பொய்யும் புளு குமும் கொண்டது" என்று யாவராலும் ஒப்புக்கொள்ளப்படு கின்ற புராணங்களையேதான் ஆதாரமாய்க் கொண்டதா கவே இருக்கின்றது. எவ்வளவு பெரிய வேதாந்தி என்று சொல்லிக்கொள்பவனும், பண்டிதன், ஆராய்ச்சிக்காரன், சன்யாசி, மடாதிபதி என்று சொல்லிக்கொள்பவர்களும், மற் றும் "சரியை" "கிரியை" "யோகம்" முதலிய நிலைகளைக் கடந்தவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களும் ஆகிய எல் லோரும் வாயளவில் விவகாரத்தின்போது மாத்திரம் "புரா ணங்கள் கற்பனை" என்பதாக சொல்லுகின்றார்களே தவிர அவரவர்களுடைய சொந்த நடை, உடை, பாவனை, எண்ணம் தோற்றம் முதலியவைகள் முழுவதும் புராணக்கூற்றை அடிப்படையாகக் கொண்டதாகவே காணப்படுகின்றதே யல் லாமல் வேறில்லை.

அது மாத்திரமல்லாமல் மேல்கண்ட இந்துக்கள் என் போர்களின் தெய்வங்கள் என்பவை முழுவதும் அதாவது "பிள்ளையார்" முதல் "பிரணவ சொரூபம்" வரை அப்புரா ணக்கூற்றில் கற்பிக்கப்பட்ட தெய்வங்களாகவும் அவைகளி னுடைய நாமங்களும், ரூபங்களும், குணங்களும் செய்கை களும் எல்லாம் அப்புராணக் கூற்றைக்கொண்டதாகவும் காணப்படுவதும் அதற்கு மக்கள் செய்யும் பூசனை, வேண்டு தல், உற்சவம் முதலிய யாவும் அக்கற்பனைகளையே ஆதார மாகக் கொண்டதாகவும் காணப்படுவதும் எவரும் சுலபத்தில் மறுக்கக்கூடியதல்ல.

அன்றியும் அவ்விந்து மதம் என்பதைச் சேர்ந்த மக்கள் அணியும் குறிகள், அனுஷ்டிக்கும், பண்டிகைகள், கொள் ளும் விரதங்கள், செய்யும் சடங்குகள் முதலிய யாவும் அப் புராணக் கற்பனையின்படியே யல்லாமல் வேறில்லை.

அன்றியும் மனிதனுக்கு மிகவும் முக்கியமானது என்று சொல்லப்படும் முக்தி, பாவம், புண்ணியம், [illegible], நரகம் ஆகிய எண்ணங்களும் அக்கற்பனைகளைக் கொண் டதே ஒழிய வேறில்லை.

அது மாத்திரமல்லாமல் பிரத்தியக்ஷத்திற்கும் பகுத் தறிவிற்கும் கொஞ்சம்கூட சம்தேகத்திற்கிடமில்லாமல்

தோன்றக்கூடிய கல், மண், புல், பூண்டு, மரம், செடி, சமுத்திரம், மலை, நதி, குளம், சூரியன், சந்திரன், பகல், இரவு, இருட்டு, வெளிச்சம், முதலாகிய எல்லாத் தோற்றங்களையும் அப்புராணக் கற்பனைக்குள் கற்பிக்கப்பட்ட விதமாகவே கருதி வழிபட்டு வருகின்றதும் மறுக்கக் கூடியதல்ல.

எனவே, இது போன்றவைகளையே நித்திய வாழ்க்கையிலும் இம்மைக்கும் மறுமை என்பதற்கும் எல்லா இந்துக்கள் என்போர்களும் ஆதாரமாய்க்கொண்டிருப்பதால் இந்நிலையில் இந்து மதம் என்பதை மேல்கண்ட புராண மதம் என்பதாக யாவரும் ஒப்புக்கொண்டு தான் ஆகவேண்டும்.

அதை யாராவது மறுப்பதானால் வார்த்தையளவில் மறுக்கலாமே அல்லாமல் எண்ணத்தளவிலாவது செய்கை அளவிலாவது அனுபோகவாயிலாகவாவது மறுப்பது என்பது ஒரு இந்து என்பவனுக்கோ அல்லது அதனுட் பிரிவுக்காரர் என்பவர்களாகிய வைணவர்கள், சைவர்கள், ஸ்மார்த்தர்கள் என்பவர்கள் முதலியவர்களுக்கோ சுலப சாத்தியமானதல்ல வென்றே சொல்லவேண்டும்.

எனவே இவ்விந்து மதம் என்பதிற் பட்ட இந்துக்கள் என்போர்களில் இவ்வளவு ஆதிக்கம் பெற்றிருக்கும் அதாவது மனம் வாக்கு, காயம், அனுபவம் ஆகியவைகளில் ஊறித்ததும்பி நிற்கும் இப்புராணக் கூற்றுகளை இந்துக்கள் என்போர்களே இப்போது தைரியமாய் முன்வந்து "புராணக் குப்பைகள்" என்றும் "மூடப்பழக்க வழக்கங்கள்" என்றும் "மக்கள் தூய வாழ்வுக்கும் ஒழுக்கங்களுக்கும் கேடு சூழக்கூடிய" தென்றும் "மிருக உணர்ச்சிக்கு ஏற்ற" தென்றும் "கற்பனைக் கதைகள்" என்றும் "புளுகு மூட்டைகள்" என்றும் "மத வெறியர்களால் உண்டாக்கப்பட்டது" என்றும் "அவைகளை ஒழிக்க வேண்டும்" என்றும் வெகு சுலபத்தில் சொல்லக்கூடிய நிலைமை எப்படி வந்தது? என்பதும் எதனால் இவ்வளவு தாரம் சொல்ல மக்களுக்கு இடம் கிடைத்தது என்பதும் இந்த இடத்தில் யோசிக்கவேண்டிய முக்கியமான காரியமாகும். அப்படி யோசிப்போமானால் அதற்கு நியாயமானதாக ஒரே ஒரு சமாதானந்தான் சொல்லக்கூடும்.

அதாவது, பொதுவாக மக்களுக்கு அறிவு வளர்ச்சியால் ஏற்பட்ட உணர்ச்சியின் பலனாக விவகாரத்தில் நியாயத்

திற்கு ஏற்காததும் விசாரணைக்கு நிற்காததும் அனுபவத் திற்கும் விஞ்ஞான தத்துவத்திற்கும் (சையன்சுக்கும்) ஒத்து வராததுமாயிருக்கின்றது என்கின்ற காரணந்தானே யல்லா மல் வேறல்ல.

மற்றபடி வேறு ஏதாவது காரணம் சொல்லவேண்டு மானால், ஒரு சமயக்காரர் பிற சமயக்காரரை தூற்றுதற்காக எழுதப்பட்டதென்று சொல்லும் நிலையிலோ, அல்லது தன் சமயந்தான் சரி, மற்ற சமயம் பொய் என்று சொல்லு வதற்கோ, அல்லது தன் கடவுள் பெரியவர், மற்ற கடவுள் தாழ்ந்தவர் என்று சொல்வதற்கோ அநுகூலமாக சில புரா ணங்களை ஏற்றுக்கொண்டு சில புராணங்களைத் தள்ள காரணமாகச் சொல்லலாம். அப்படிக்கில்லாமல் யுக்தி அனு பவத்திற்கு ஒவ்வாததாகவும், சையன்சுக்கு நிற்காததாகவும் இருந்தால் தள்ளிவிடவேண்டியதுதான் என்று சொல்லுவோ மாகில் ஒப்புக்கொள்ளத்தக்க புராணம் என்பது ஒன்றுகூட இல்லை என்றுதான் சொல்லவேண்டும்.

இது நிற்க, இப்புராணக் கூற்றுகளில், ஆரியர்களால் கொணரப்பட்டவை சில என்றும் தமிழ்நாட்டில் ஏற்பட்டவை சில என்றும் இரு பிரிவுகள் தோன்றி அதில் சிலவற்றை தள் ளவும் கொள்ளவும் விவாதங்கள் ஒருபுறமும் சில புராணங் களுக்கு ஆதாரம் இல்லை, கல்வெட்டு இல்லை, அகச்சான்று புறச்சான்று இல்லை என்பனவைகள்போன்ற பல விவகாரங் களின் மூலம் தள்ளத்தக்கது, கொள்ளத்தக்கது என்கின்றது போன்ற விவகாரம் ஒரு புறமும் மற்றும் அவ்வப்புராணங் களைச்சார்ந்த சமயவாதிகளின் செல்வாக்கு, பலாத்காரம், சூழ்ச்சி, வாக்குத்திறம் முதலியவைகளின் வலிமை, இளைப்பு இவைகளின் யோக்கியதைகள் ஒருபுறமுமாக இருந்து அந்தந்த சந்தர்ப்பங்களுக்கு ஏற்றபடி தள்ளவோ கொள்ளவோ முடி கின்றதே அல்லாமல் வேறில்லை.

அப்படிக்கின்றி பொது நோக்கில் நின்று சுருதி, யுக்தி, அனுபவம், சையன்ஸ் ஆகியவைகளுக்கு ஒத்த முறையில் கின்று புராணக்கூற்றை ஆராய்வோம் என்னும் நிலையி லேயே இவ்விஷயாசத்தில் பெரியபுராணம் வெளிபான வரலாறு பற்றிசிறிது கூறுகின்றோம். வாசகர்கள் அவற்றை கூர்ந்து படித்து அதில் உள்ள உண்மைகளை உணர வேண்டுமென் கிறோம்.

"பெரிய புராணம்"

பெரிய புராணம் என்பது தொண்டர் புராணம் என்றும் சொல்லப்படும். ஏனெனில் அதில் தொண்டர்கள் என்பவர்களைப் பற்றிய கதைகளே பெரிதும் சொல்லப்படுகிறது.

அத்தொண்ட புராணம் வெளியானதற்கு பல மார்க்கங்கள் சொல்லப்படினும் அவைகளில் ஒரு மார்க்கம் முக்கியமாகச் சொல்லப்படுகின்றது.

அதாவது ஒன்று ஒரு கால் கைலையங்கிரியில் வசிக்கும் வியாக்கிரபாத முனிவருடைய குமாரரான உபமன்யு முனிவர் மற்ற முனிவர் கூட்டத்திலிருக்கும் போது திடீரென்று ஒரு ஒளி தோன்றியதாகவும் அதைக்கண்டு எல்லோரும் திகைத்து உபமன்னிய முனிவரை "இது என்ன ஆச்சரியம்" என்று கேட்டதாகவும் அது கேட்டு அவர் "சுந்தரமூர்த்திநாயனார் கைலைக்கு எழுந்து அருளுகின்றார்" என அறிந்து அத்திக்கு நோக்கி வணங்கியதாகவும் அதைப்பார்த்த மற்ற முனிகள் சிவபிரானைத் தவிர மற்ற யாரையும் வணங்காத தாங்கள் இங்கு வணங்கிய காரணம் யாது" என்று கேட்டதாகயும் அதற்கு உபமன்யு முனிவர், ஒரு காலத்தில் சிவபெருமான் தன் உருவத்தை கண்ணாடியில் பார்த்ததாகவும் அது சமயம் அவருடைய அழகு திரண்டு உருண்டு ஒரு உருவமாய் தோன்றியதாகவும் அதற்கு சுந்தரர் என்று பெயர் கொடுத்ததாகவும், அவர் அச்சிவபெருமானின் ஆணையால் கைலையை விட்டு தென்னாட்டிற்கு வந்து உலகமுய்ய தேவாரம் பாடிவிட்டு அதுசமயம் கைலைக்கு வெள்ளை யானை மீது போய்க்கொண்டிருப்பதாகவும் அந்த ஒளிதான் இவ்வளவு பிரகாசம் என்று சொன்னதாகவும் அதுகேட்ட அங்கிருந்த மற்ற முனிவர்கள் "அப்படியானால் அப்பெரியாருடைய (சுந்தருடைய) சரித்திரத்தை எங்களுக்கு சொல்லவேண்டும்" என்று கேட்டுக்கொண்டதாகவும் அதற்கு அந்த உபமன்யு முனிவர் அச்சுந்தரர் சரித்திரத்தையும் அச்சுந்தரரால் செய்யப்பட்ட திருத்தொண்டர் தொகையில் காணும் மற்ற தொண்டர் சரித்திரத்தையும் சொன்னார் என்பதாக அந்த வரலாறு காணப்படுகிறது. இதில் கூறப்பட்ட விஷயங்கள் பகுத்தறிவிற்கும் அனுபவத்திற்கும் எவ்வளவு தூரம் பொருத்தமாயிருக்கிறதென்பதை வாசகர்களையே சிந்தித்துப் பார்க்கும்படி வேண்டிக்கொள்கிறோம்.

தமிழும் சமணமும்

(ஆழியன் எழுதுகின்றார்)

சமணர் யாவர்? சமணரை வதைசெய்ததின் காரணம் யாது? சமணர் தமிழ்மொழிக்குச் செய்த நன்மையாது? இம் மூன்று கேள்விகளைக்கூறி அவற்றிற்கு விடையளிப்போம்.

சமணர் யாவர்? அவர்கள் இந்தியர்களே. இந்திய நாட்டின் வட பகுதியிலுள்ள மக்களில் சில சமயக் கொள்கை வேறுபாடுடையவர்களே. வேறு நாட்டினரல்லர், வேறு சமயத்தைப் பரப்பினாரல்லர். இந்து மதத்திலுள்ள இடைவழிப்பட்ட சில குறைகளைக் களைந்து நல்வழிப் படுத்தற் பொருட்டு வெளிவந்த வொருகூட்டத்தார். புத்தர்களும் அத்தகையர்களே. வீண் சடங்குகளையொழித்து மக்களுக்குப் பயன்படும் நற்செயல்களைச் செய்தலே சிறப்புடைத்தென்பது அன்னார் கொள்கை. தெய்வத்தைக் கண்கூடாகக் காண்டல் எளிதன்றாதலால் அவ்வாராய்ச்சியிற் காலத்தை அவமே கழிப்பதினும் மக்களுக்கு நன்மைகளைச் செய்யும் பெரியாரைப் போற்றுதல் சிறப்புடைத்தென்றும் எவ்வுயிர்க்கும் இன்னா செய்யாமையும் எவ்வுயிரையுங் கொல்லாமையும் புலாலுண்ணாமையுமே பெரு நோன்புகளென்று யாண்டும் பரப்பினர்.

இக்கொள்கைகள் பல நூல்களிற் காணப்பட்டாலும் படிப்பளவில் நின்றனவேயன்றி நடையில் ஏற்படவில்லை. இரக்கம், சீலம் காண்டல் அரிதாயிற்று. பல குலமக்களும் பண்பட ஒன்றுபட்டு வந்தது போக பல சாதிகளாயினர். உயர்வு தாழ்வு பிறப்பினாலுண்டென்ற கொள்கை பரவிற்று. ஒன்றாக உண்டுங் களித்தும் மணந்தும் வந்த மக்கள் பன்னூறு பிரிவுகளாயினர். ஒற்றுமை உடைந்து வேற்றுமை பெருகிற்று. பல பிளவுகளுண்டானதைக் கண்ணுற்ற பெரியார்கள் வருந்தி ஒற்றுமை ஏற்படுத்தவும் எவ்வித வகைகளுந் தொலையவும் முயன்றனர். அப்பெரியார்களில் சமண சமயக் கொள்கைகளை நிலைநாட்ட வந்த மகாவீரர்ஒருவரே.

சமணமென்பது செயின, சீனமென்பதின் திரிபு. செயினமென்றால் வெற்றி கொள்ளல். பிறப்புக்கு வித்தாகியகாமம், வெகுளி, மயக்கமென்பனவற்றை நல்லொழுக்கத்தால் அறவே யொழித்தல். மும்மலங்களையு மொழித்துத் தெய்வத்தன்மை பொருந்திய பெரியோர் பலருளராதலின் அன்னாரைப்போற்றுதல் உலக வாழ்விற்கு ஏற்றதாமென்று சமண நூல்கள் அறிவிக்கின்றன. புதிய கொள்கைக்கூட்டங்கள் நாளடைவில் ஊக்கங்குறைந்து பக்கத்திலுள்ளார் பழக்கவொழுக்கங்களைக் கைப்பற்றிக் கெட்டுப்போதல் இயல்பன்றோ? பின் காலத்தில் சமணரும் அவ்வித இடர்ப்பாட்டிற்கு உள்ளாயினர். அதனால் அன்னார் பெருமை யிழந்து தொகை குறுகினர். ஆயினும் சிறந்த வொழுக்கங்களைக் கைகழுவ விடாமல் அவற்றின்வழி நடக்கும் சமணரும் இன்றுமுளர். "கடுஞ் சிறுப்பினும் காஞ்சிறுக்கா" தென்பது தொன் மொழி.

சமணரை வதைசெய்ததன் காரணம் யாது? தென்னாட்டில் ஆனைமலை முதலான எண் மலைகளிலுமிருந்து வந்த சமணர்கள் எண்ணாயிரமென்றறியக்கிடக்கின்றது. சமணரை வெறுப்பதற்குக்காரணம் யாது? தேவாரமே பகருகின்றது.

வேத வேள்வியை நிந்தனை செய்தவர்
வைதிகத்தின் வழி யொழுகாதவர்
மறை வழக்கமிலாத மாபாவிகள்
அந்தணாளர் புரியுமருமறை சிந்தை செய்யாவருகர்
வேட்டு வேள்விசெயும் பொருளை வினிமூட்டுச்
சிந்தையர்
அழலதோம்பு மருமறையோர்திறம்
விழலதென்னு மருகர்
நீற்றுமேனியராயினர் மேலுற்றகாற்றுக்
கொள்ளவு நில்லார்.

இத்தகைய சமணரை வாட்டிட வாதுசெயத் திருவுள்ளமேயாயின் ஞாலம் நின்புகழே மிக வேண்டுமென்று துதிக்கப்பட்டது. சுருக்கமாகச்சொல்லின் வேதம் சிறந்த நூலன்று. பல கதைகள் பொதிந்த பொய்நூலே. பல தேவதைகளை வணங்கும் பாழ் நூலே. பிறர்காதுகளில் படாமலொளித்து வைத்ததன் காரணம் அவற்றில் காணப்படும் தீயவொழுக்கச் சிறப்புகளே. தந்தயம் பாராட்டும் புன்சொற் களஞ்சியமே.

வேள்வி, யாகமெனப்படும். அது ஆடு, மாடு, பரி, பன்றி மனிதர் முதலான வுயிர்களை மாலையிட்டு வதைத்து மந்தி

ரஞ் சொல்லிக்கொன்று வபையையும் உணவையுந் தின்னற் பொருட்டுச் செய்யும் பெரும் பாதகமேயாம். சிறிது நுண்ணறிவுற்ற மக்கள் இத்தீய செயல்களைச் செய்ய இணங்குவரோ?

வைதீகவழி நில்லாதவர் வேதத்திற்காணப்படும் வழக்கவொழுக்கமுடையவர் வைதிகரெனப்படுவர். வேதஞ்சிறந்த நூலன்று என்று ஒதுக்கிவைத்தவர் அவ்வழி நடப்பரோ? உயிர்க்கொலைசெய்து ஊனுண்பவர்க்கும் கொல்லா விரதம் பூண்டவர்க்கும் பொருத்தம் எங்ஙனம் ஏற்படும்? ஓருவனையாரின் வேதத்தைக்கண்டித்தவர் பாவிகளாவரோ? எத்துணை ஓமம் வளர்ப்பினும் நீற்றைப் பூசினும் பாவச்செயலாற்றுதல் விழுலாமன்றோ? எவ்வுயிரையும் பாதுகாப்பவர் இப்பாவிகளின் காற்றுவீசவும் பொறுப்பரோ. தற்காலத்தில் வைதிகமென்றால் பட்டையாக நீற்றையணிந்து உருத்திராக்கங்களை உடலெங்குமணிந்துகொண்டு கையிடையிற் கன்னக்கோலைத் தரித்துத் திரிதலாகும். உண்மையைப் பற்றுவோர் சிறுதொகையினராவர். ஆகுலம் நயப்போர் ஆயிரக்கணக்கினர். ஆதலின் விழுப்பந்தரும் ஒழுக்கத்தைக் கைக்கொண்டசேனன் சந்திபோன்ற சிறப்புப் பெயர்களைப் பெற்ற பெரியாரை இழித்துரைத்தலெங்ஙனம் பெருமையாகும்.

சமணர் தமிழ் மாதினுக்குச் செய்த கடமைகள் பல. சிந்தாமணிபோன்ற பெருங்காப்பியங்களையும், சூடாமணி போன்ற சிறு காப்பியங்களையும் நாலடியாருட்பட்ட பதினெண் சிறந்த ஒழுக்க நூல்களையும், யாப்பருங்கலம், நேமிநாதம் நன்னூல்போன்ற பலவிலக்கண நூல்களையும், நிகண்டுகளையும் வேறு அரிய பெரிய நூல்களையுமாக்கி யளித்துத் தமிழைச் செழிக்கச் செய்தவர் சமணரெனின் அன்னார் பெருமை எடுத்துரைக்க இயலுமோ? தமிழ் மக்கள் இப்பெரும் மணிகளை யியற்றினவரைப் பழித்துக்கூறலும் வதைசெய்யவுடன்படலும் மடமைத்திறமாமே. செய்நன்றி மறந்தவராவரே. பிறர் சூழ்ச்சி வலையிற்பட்டு மதிமயங்கினர் போலும்! தமிழ் மக்கள் சமய வழிபாட்டிலும் சமூக வழிபாட்டிலும் அரசியல் வழிபாட்டிலும் இன்றும் மதிமயங்கி வுண்மைகளைக் கைப்பிடியாமல் மாமூலைப் போற்றி வருகின்றனரே! நூற்றைம்பதாண்டு வெள்ளையராட்சி முறைப்படி வாழ்ந்து வருகின்ற தமிழ் மக்கள் தம் நிலைமையும் பெருமையும் இழந்து வாழ்வதைக் கண்மிழித்துப் பார்க்கிலரே!

பகுத்தறிவு வெளியீடுகள்.

—)=(—

தோழர் ஈ. வெ. ரா. எழுதியவை.

பெண் ஏன் அடிமையானாள்?	...	...	ரூ. 0 5 0
பிரகிருதிவாதம்	...	...	,, 0 3 0

அறிஞர் சார்ல்ஸ் T கோர்ஹாம் எழுதியது.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை	...	...	,, 0 5 0

Hon. பேர்ட்டிரண்ட் ரசல் எழுதியவை.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல?	...	...	,, 0 3 0
மதம் மக்களுக்குச் செய்த கன்மை என்ன?	...	...	,, 0 3 0

அறிஞர் இங்கர்சால் எழுதியவை.

மதம் என்றால் என்ன?	...	...	,, 0 3 0
கடவுள்	...	...	,, 0 5 0
நான் சமூகவாதியானதேன்?	...	...	,, 0 3 0
வால்ட்டேர்	...	...	,, 0 4 0
பேய்-பூதம்-பிசாசு	...	...	,, 0 3 0

அறிஞர் பிரமச்சாரி M. A., L. T., எழுதியவை.

மதமும் விஞ்ஞானமும்	...	...	,, 0 3 0
பிரபஞ்ச உற்பத்தி	...	...	,, 0 3 0

அறிஞர் ஜோஸப் மெக்கேபி எழுதியது.

மதப்புரட்சி	...	...	,, 0 4 0

தோழர் M. சிங்காரவேலு B. A., B. L., எழுதியவை.

மெய்ஞ்ஞான முறையும் மூடநம்பிக்கையும்	1-ம் பாகம்		0 6 0
ஷ	2-ம் பாகம்		0 5 0

அறிஞர் ஜீன் மேஸ்லியர் எழுதியவை.

பகுத்தறிவு ஏற்காத தேவ குருவின் மரணசாசனம்			0 4 0
ஷ	2-ம் பாகம்		0 4 0

தோழர் அ. இராகவன் எழுதியது.

பெண் ணுரிமையும், மதமும்	...	...	,, 0 3 0

அறிஞர் சிவானந்த சரஸ்வதி எழுதியது.

சூரியன் (“நான்காம் பதிப்பு”)	...	...	,, 0 5 0
த்திற்குப் பின் ஜீவனுண்டா? (ல. ப. நூ. பி.)			0 4 0

டக்குமிடம்:—

மானேஜர், குடி அரசு ஆபீஸ், ஈரோடு.

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

1.	இந்தியாவின் குறைபாடுகள் (160 பக்கம்)	0	8	0
2.	லெனினும், மதமும்	0	4	0
3.	பொதுவுடமைத் தத்துவங்கள்	0	3	0
4.	கடவுளும், பிரபஞ்சமும்	0	4	0
5.	உழைப்பாளிகளுக்குரல் (இவ்வுலகமில்லை)	0	1	0
6.	இராமாயண ஆராய்ச்சி (பாலகாண்டம்)	0	4	0
7.	,, அயோத்தியாகாண்டம் (200 பக்கம்)	0	8	0
8.	,, ஆரண்ய காண்டம்	0	4	0
9.	,, கிட்கிந்தா காண்டம்	0	4	0
10.	ஞானஞ்சாயன் (ஞானக்கம்மடித்திட்டு) 20 பக்கம்	0	5	0
11.	தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்	0	3	0
12.	மேலோர் கூற்றும் மெய்யும் (பாகம் 1)	0	4	0
13.	பங்கஜம் அல்லது பார்ப்பனக் கொடுமை	0	4	0
14.	சீர்திருத்தம் (ஈ. வெ. ரா.)	0	2	0
15.	அகத்தியர் ஆராய்ச்சி	0	2	0
16.	இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு	0	2	0
17.	சுயமரியாதைப் பாடல்	0	2	0
18.	கதர் முடக்கப்பிக்ஷை (இங்கிலீஷ்)	0	2	0
19.	பிராமணாள் ஹோட்டல்	0	1	0
20.	சோஷியலிசம்	0	2	0
21.	பொய்க்கால் குதிரை	0	1	0
22.	ஈ. வெ. ரா. இலங்கை பிரயாணம்	0	0	9
23.	சமதர்ம பிரசாரம்	0	0	6
24.	சேரமன்னர் ஆராய்ச்சி	0	4	0
25.	மனுதர்ம விளக்கம்	0	2	0
26.	மனுதர்ம தீபிகை	0	3	0
27.	பாரத ஆராய்ச்சி (ஆதிபருவம்)	0	4	0
28.	புதுரஷ்யா (200 பக்கம்)	0	8	0
29.	புராண ஆராய்ச்சி தக்க ஆதாரங்களுடன்	0	8	0
30.	கற்பு ஆட்சி	0	6	0
31.	ராவணப் பெரியார்	0	5	0
32.	இங்கர்சால் பொன்மொழிகள்	0	4	0
33.	தாகம் எங்கே?	0	2	0
34.	ஆரியை ஏழுகன்னி	0	4	0
35.	கனகபுரம் அல்லது ஸ்வயம்வரக்கூத்து	0	5	0
36.	பிராமணமதம் உண்மையா?	0	4	

கடைக்குறிப்பு:— குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

Edited Printed and Published by E. V. Krishnaswamy at the
Unnamilakam Press. Erode.